# சமூகநாடி

இதழ் - 3



## முன்பள்ளி கட்டட திறப்பு விழா
## சிறப்பு மலர் - 2016



தும்பளை மேற்கு சனசமூக நிலையம்

THUMPALAI WEST ARUMPUKAL PRESCHOOL

THUMPALAI WEST COMMUNITY CENTRE

# சமூகநாடி

## இதழ் - 03

## முன்பள்ளி புதிய கட்டட திறப்பு விழா
## சிறப்பு மலர் - 2016

## வெளியீடு
தும்பளை மேற்கு சனசமூக நிலையம்

**தலைப்பு**
சமூகநாடி
இதழ் -3

**பதிப்பு**
சித்திரை - 2016

**வெளியீடு**
தும்பளை மேற்கு சனசமூக நிலையம்

**வடிவமைப்பும் அச்சும்**
**S.P.M** பிறின்ரேர்ஸ், வி.எம்.றோட், பருத்தித்துறை.
*T.P.No: 0774966997, 021 226 0055*

**Title**
*Samuga Nadi*

**Edition**
*April - 2016*

**Published**
*Thumpalai West Community Centre*

**Disigned & Printed by**
**S.P.M** *Printers, V.M.Road, Point Pedro.*
*T.P.No: 0774966997, 021 226 0055*

# துரம்பளை மேற்கு அரும்புகள் முன்பள்ளி
# கீதம்

## பல்லவி

வாழியவே வாழியவே - எங்கள்
அரும்புகள் முன்பள்ளி வாழியவே.

(வாழி)

## அனுபல்லவி

ஆழ்கடல் போலே அன்பினை விதைத்தே
சூழ்ந்திட வைப்போம் கலைகள் அனைத்தும்.

(வாழி)

## சரணம்

எண்ணும் எழுத்தும் இரு கண்கள் என்றே
ஏற்றிடும் கலைகளை தெரிந்து கற்போம்
நாற்றுகள் நாங்கள் வேற்றுமை களைந்தே
சாற்றுவோம் என்றும் ஊரின் புகழ்தனை.

(வாழி)

அறிவியல் அழகியல் கலைகள் என்றே
ஆயகலைகளை அறிவோம் நன்றே
நானிலம் போற்ற முயல்வோம் நாமே
கூடி வாழ்ந்து நன்மைகள் குவிப்போம்.

(வாழி)

இயற்றியவர் : திரு.பா.இரகுவரன்
இசை அமைப்பு: கோ.சிவராசா



# ஆசியுரை

"எழுந்திருங்கள் விழித்துக் கொள்ளுங்கள் இனியும் தூங்க வேண்டாம். எல்லாத் தேவைகளையும் எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது" என்பது சுவாமி விவேகானந்தரின் அருள் வாக்கு. இன்று இந்த "அரும்புகள்" முன்பள்ளியின் மலர்ச்சி இந்த தும்பளை மேற்கு சமூகத்தினரின் பேராற்றலின் பெருமையான வெளிப்பாடு.

"நீங்கள் சாதனையாளராக இருந்தால் அதை ஏற்றாலும் இழந்தாலும் வாழ்ந்தாலும் அழிந்தாலும் உங்களுக்கென்று ஒன்று நிச்சயம் உண்டு. அது வரலாறு". இந்த சமுதாயத்தின் வரலாற்றில் உங்களின் இது போன்ற நல்ல முயற்சிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுவதோடு வருங்கால சந்ததிக்கு நல்ல எடுத்துக் காட்டாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் சமூகம் கல்வி மேன்மையை அறிந்த சமூகமாக விளங்கியது. "அரும்புகள்" முன்பள்ளியின் ஆரம்பம் இந்த சமுதாயத்தின் அளப்பரிய கல்விமான்களின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைய வேண்டும் என்று உளமார வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

இனிவரும் காலங்களிலும் இது போன்ற நல்ல பல முயற்சிகளை இந்த சமுதாயம் முன்னெடுக்க வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல வரத விநாயகரின் திருவருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என வாழ்த்தி பெருமையடைகின்றேன்.

வாழ்வில் நம்பிக்கை கொள்வோம் ஒரு விடியலுக்காக இரவை எரிப்போம் சூரிய உதயம் தாமதமானால் கிழக்கை தோண்டி எடுக்கும் வல்லமை பெறுவோம் என்று நம்பிக்கையுடன் நகரும் உங்கள் நல்ல முயற்சிக்கும் முன்பள்ளி கட்டட திறப்பு விழாவிற்கும் அதன் சிறப்பாக வெளிவரும் "சமூக நாடி" க்கும் என்றென்றும் எனது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக! அரும்புகள் மலரட்டும்!

நன்றி

**சிவஸ்ரீ. வ. வே. தியானந்தராசக்குருக்கள்**
**பிரதமகுரு**
**தும்பளை மேற்கு பெரியவளவு**
**ஸ்ரீ வரதவிநாயகர் தேவஸ்தானம்.**



# தலைவரின் உள்ளத்திலிருந்து......


"ஏறத்தாழ அரை நூற்றாண்டு கால முன்பள்ளிக் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட எமது ஊரில் முன்பள்ளிக்கென ஒரு நிரந்தர கட்டடம் இல்லாதிருந்தது என்னை இன்று நேற்றல்ல பதினெட்டு, இருபது வருடாங்களிற்கு முன்னரே சிந்திக்க வைத்தது. எனினும் இதற்கான சந்தர்ப்பங்கள் அமையவில்லை. ஒருவேளை அமைந்திருந்தாலும் இது போன்ற ஒரு பெரிய கட்டடத்தினைக் கட்டியிருக்க முடியாது. இன்று எமது ஊரவர்களின் கூட்டு முயற்சியால் இக்கல்வியாலயம் சிறப்பாக கட்டிமுடிக்கப்பட்டு திறப்பு விழா காண்கின்றது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நன்னாளில் திறப்புவிழா சிறப்பு மலராக வெளியிடப்படும் சமூக நாடி சஞ்சிகையின் மூன்றாவது இதழிற்கு எனது நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வேளையில் காணி அன்பளிப்புச் செய்தவர்களான திரு.க.பாலேஸ்வரன், திரு.வீ.பாலகிருஷ்ணன் மற்றும் திரு.திருமதி சிவஞானசுந்தரம் அவர்களின் பிள்ளைகளுக்கு எனது முதல் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் புலம்பெயர் தேசங்களில் நிதி சேகரிப்பதில் அரும்பாடுபட்டவர்களான திரு.க.பாலேஸ்வரன், திரு.சு.குமாரகுலசிங்கம் போன்றவர்களுக்கும் எனது நன்றிகள். ஊரில் நிதி சேகரித்தல் மற்றும் கட்டட வேலைகளில் அயராது உழைத்த திரு.கு.பஞ்சாட்சரம், திரு.க.புலேந்திரன் போன்றவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் கட்டட வரைபடம் முதல், கட்டட வேலைகளை மேற்பார்வை செய்து வழிநடத்திய பொறியியலாளர் திரு.இ.பாலேந்திரா அவர்களுக்கும் எனது நன்றிகள். பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கும், கட்டடத்தின் கூரை வேலைகளுக்கு நிதியுதவி செய்த சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சுக்கும், கழுவும் அறைக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கு நிதியுதவி செய்த கௌரவ முதலமைச்சர் நீதியரசர் C.V.விக்னேஸ்வரன் ஐயா அவர்களுக்கும் எனது நன்றிகள்.

எமது ஊரில் முதன் முதலில் முன்பள்ளியை ஆரம்பித்த ஆசிரியை திருமதி.சரோஜினிதேவி அவர்களையும் (1969ல்) முப்பது வருடங்களிற்கு அதிகமாக முன்பள்ளி ஆசிரியையாக கடமையாற்றி இளைப்பாறிய திருமதி ரஞ்சினி கௌரிபாலா (பேபி) அவர்களையும் நினைவு கூருகின்றேன். இப்பொழுது முன்பள்ளி ஆசிரியைகளாக கடமையாற்றிக் கொண்டிருக்கும் திருமதி.ஹ.நர்மிலா, திருமதி.வி.கல்யாணி ஆகிய இருவருக்கும் எனது நன்றிகள். மேலும் மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இன்று 67வது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் எமது சனசமூக நிலையத்திற்கும், இன்று திறப்புவிழாக் காணும் அரும்புகள் முன்பள்ளிக்கும் மாணவச் செல்வங்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**தும்பளை மேற்கு சனசமூக நிலையம்,**
**அரும்புகள் முன்பள்ளி முகாமைத்துவக்குழு.**



# வாழ்த்துச் செய்தி

இன்றைய தினம் தும்பளை மேற்கு அரும்புகள் முன்பள்ளி கட்டடத்திறப்பு விழாவை முன்னிட்டு சிறப்பு மலராக வெளிவருகின்ற **"சமூகநாடி"** சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இதுகாலவரை பொது மண்டபத்தில் இயங்கிய கல்விக்கூடம் பிரத்தியேகமான புதிய கட்டடத்தில் கல்விப் பயணத்தை ஆரம்பிப்பது பல்வேறு வழிகளில் நன்மை பயப்பனவாகும்.

ஒரு கட்டடத்திற்கு அத்திபாரம் எத்தனை முக்கியமானதோ அஃதே போல் ஒரு மனிதனுடைய கற்றல் ஏணியின் அடிப்படை முன்பள்ளி கற்றல் செயற்பாடாகும். எனவே, இவ் அடித்தள கற்றல் நடவடிக்கையானது பொருத்தமான திட்டமிடல் முறைகள் ஊடாக வகுக்கப்பட வேண்டும். முன்னர் பொது அமைப்புக்களாலும் சமுதாய மட்ட அமைப்புக்களாலும் ஒருங்கிணைக்கப்பட்டு நடாத்தப்பட்ட முன்பள்ளி கற்கையானது முக்கியத்துவத்தின் அடிப்படையில் இன்று அரசினால் முறைசார்கல்வி அமைப்பிற்கு இணையாகக் கொண்டு வரப்பட்டு கல்வித்திணைக்களத்தில் அதற்கான அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றது. மேலும் உள்ளூராட்சி மன்றங்களினால் நிதியளிக்கப்படுவதுடன் அரசசார்பற்ற பொது அமைப்புக்களினாலும் வசதியளிக்கப்படுகின்றமை அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

மேலும் அரசின் சுகாதார போசணை மேம்பாட்டு வலையமைப்பிற்குள் பிறப்பிலிருந்து ஐந்து வயது வரையான சிறார்கள் பிரதானமான முக்கியத்துவத்துடன் கொண்டு வரப்பட்டு போசாக்கு நிறைந்த சமூக உருவாக்கத்திற்கு முன்பள்ளிகள் அடிப்படை -யாகின்றன.

இன்று தங்களது முன்பள்ளி கற்கையை புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கும் மழலைச் செல்வங்கள் எதிர்கால சிற்பிகளாகி சமூகத்தில் மிளிரவேண்டும் என பிரார்த்திப்பதுடன் இம் முன்பள்ளி நிலையத்தின் ஆசிரியர், நலன்விரும்பிகள் மற்றும் இக்கட்டட அமைப்பிற்கு உதவியோர், மற்றும் பல்வேறு வழிகளிலும் பங்களிப்பு நல்கியோர் அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்து கொள்கின்றேன்.

**திரு. இ. த. ஜெயசீலன்**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**பருத்தித்துறை.**



# வாழ்த்துச் செய்தி

தும்பளை மேற்கு சனசமூக நிலையத்தின் நெறிப்படுத்தலில் 2013ம் ஆண்டிலிருந்து சிறப்புடன் கல்விப்பணியாற்றி வருகின்ற அரும்புகள் முன்பள்ளி இன்று முதல் தனக்கான புதிய கட்டடத்தில் செயற்படவிருப்பதையிட்டு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

1970ம் ஆண்டுகளிலிருந்து இக்கிராமத்தில் தனிப்பட்ட சிலரால் பாலர் கல்வி முறைமை அவர்களது வீடுகளில் வைத்து வழங்கப்பட்டு வந்ததை மறக்கமுடியாதுள்ளது. இப் பாலர் கல்வி முறையின் வளர்ச்சியாக நேசரி கல்வி முறை (Nursery) வளர்ச்சியடைந்து இன்று நிறுவனமயப்பட்ட முன்பள்ளி கல்விக் கட்டமைப்புக்குள் மாற்றமடைந்துள்ளது. அத்துடன் காலத்தின் தேவையோடு இணைந்த குழந்தைக் கல்வியாக உருப்பெற்றுள்ளது.

இப்பிரதேச மக்கள் மனமுவந்து அளித்த நன்கொடைகளால் இவ் அழகிய முன்பள்ளிக்கட்டடம் இன்று புதுமனை புகுவிழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சியாகவுள்ளது.

ஒரு கிராமத்தின் வளர்ச்சி என்பது அக்கிராமத்தில் வாழும் கற்றறிந்தவர்களைக் கொண்டே அளவிடப்படுகின்றது. தும்பளை மேற்கு கிராமத்தில் எதிர்காலத்தில் நிறைவான கற்றறிவாளர்கள், மனிதத்துவம் உள்ள நற்பண்பாளர்கள், குருபக்தி, இறைபக்கி மிக்க மாணவச் சமூகத்தினர்கள், இக் கிராமத்தை நேசிக்கின்ற நற்சமூகத்தினரை இவ் முன்பள்ளி எதிர்காலச் சந்ததியினராக வழங்க வேண்டும் என வாழ்த்துவதுடன் நீடித்தகாலம் நற் கல்விப் பணியாற்ற இறைவனை வேண்டி ஆசி வழங்குகின்றேன்.

**திரு.சி.நந்தகுமார்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**வடமராட்சி.**



# வாழ்த்துச் செய்தி

தும்பளை மேற்கு அரும்புகள் முன்பள்ளியின் புதிய கட்டட திறப்பு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

இப்பிரதேசத்தின் மழலைகள் தூர இடத்திற்கு சென்று கல்வி கற்பதில் உள்ள சிரமமான நிலையினை உணர்ந்து ஆரம்பத்தில் இவ்வூரில் உள்ள தனிப்பட்டவர்களின் வீடுகளில் பொதுநலநோக்கம் கொண்ட ஆசிரியர்களால் முன்பள்ளிகல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. இதனைக் கண்டுகொண்ட தும்பளை மேற்கு சனசமூகத்தினர் இப்பிரதேசத்திற்கு முன்பள்ளியொன்று இருக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக அரும்புகள் முன்பள்ளியை 2013ம் ஆண்டில் இருந்து வலயக்கல்வி அலுவலகத்தில் பதிவுசெய்து நிறுவக ரீதியாக ஆரம்பித்தனர்.

இன்று இம்முன்பள்ளிக்கு புதிய கட்டடம் அவர்களது அயராத உழைப்பினால் அமைக்கப்பட்டுள்ளது. தற்போதைய அறிவியல் உலகிலே தானங்களில் சிறந்த தானம் என்று சொல்லப்படுகின்ற கல்வியையும் நல்லொழுக்கத்தையும் இடையறாது வழங்கிக் கொண்டிருப்பது போற்றத்தக்கதாகும். இதுபோன்ற பணிகள் மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

**திரு.புவனேந்திரன் ரமேஸ்வரன்**<br>
**செயலாளர்,**<br>
**நகரசபை,**<br>
**பருத்தித்துறை.**

# மலர்க்குழு

- திரு.தே.தேவராஜேந்திரம்
- திருமதி.பி.வதனி
- திருமதி.சி.சந்திரவதனா
- திரு.செ.அருண்மொழி
- திரு.பா.காண்டீபராஜ்
- திரு.சி.குலேந்திரன்
- திரு.ச.மிதுஷன்
- திருமதி.சி.சேதுபதி
- திருமதி.உ.சுமதி
- திருமதி.இ.சுபேந்திரா
- திருமதி.ச.பேபிசரோஜா
- திரு.கி.பாலேந்திரா
- திரு.வி.பாலசுப்பிரமணியம்
- திரு.T.செல்வச்சந்திரன்
- திருமதி.ச.ருக்மணி
- திரு.ச.குமணன்
- திரு.சி.சங்கநாதன்
- திரு.இ.நிரஞ்சன்
- திரு.ஶ்ரீ.அனோஜன்

# இம்மலரின் இதழ்களாக....


| | பக்கம் |
|---|---|
| ❋ தொலைந்த திறப்பு | 01 |
| ❋ முதியோர் நலமும் சமூகமும் | 04 |
| ❋ புத்தக காதலி | 6 |
| ❋ முன்பள்ளிக் கல்வியின் அவசியமும் தேவையும் | 12 |
| ❋ Find Your Moment | 16 |
| ❋ பாற்பல்லின் பராமரிப்பும் பயன்பாடுகளும் | 18 |
| ❋ அந்த மண்ணும் இந்த வாழ்வும் | 21 |
| ❋ தும்பைளயின் பொற்குவியல் | 27 |
| ❋ மக்களும் சமூக வாழ்வும் | 34 |
| ❋ அருமையான மகன் முழுமையான மனிதன் | 39 |
| ❋ மனிதம் காப்போம் | 44 |
| ❋ கைத்தொலைபேசிகளின் சாபம் | 45 |
| ❋ தமிழும் தமிழரும் | 48 |
| ❋ ஊர்க்கதை | 51 |
| ❋ அதிகாரப் பகிர்வு : ஓர்அறிமுகம் | 54 |
| ❋ அமரர் பண்டிதர் க.சச்சிதானந்தன் ஆற்றிய உரை | 58 |
| ❋ பாலர் பாடசாலை வரலாறு | 62 |
| ❋ கணக்கறிக்கை | 70 |
| ❋ நன்றியுரை | 77 |



# தொலைந்த திறப்பு

கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
மார்கழி 12, 2012
மின்னஞ்சல் :nsivayogan@gmail.com

வெடித்தன வெடிகள் முடிந்தன உடல்கள்
படித்தன எறிந்து பட்டென்று இடம்பெயர்ந்தோம்
துடித்தது நெஞ்சு தூக்கமும் கலைந்தது
விடியலுக்கு முன்னர் வீடு திரும்புவோமோ.

எடுத்தியா திறப்புபென்று எப்போதும் அம்மாகேட்க
படுத்திரு சும்மாவென்று படபடத்து நான்பேசி
இடுப்பைத் தடவிநான் இருக்குது திறப்பென்றேன்
கொடுத்துவிடு என்றுகேட்க கொடுத்தேன் அம்மாவிடம்

காலையில் வெள்ளன கடகடவென்று போகவேணும்
பாலை அடுப்பில்வைத்தேன் பழுதாகிப் போயிருக்கும்
மாலையில் ஊறவைத்த மாவும் புளித்திருக்கும்
சேலையும் காய்ந்திருக்கும் சேவலும் தேடி நிற்கும்.

உனக்கு எப்போதும் உந்தன் கதைகள்தான்
எனக்குச் சோதனை என்னிடமோ கொப்பியில்லை
கனக்கக் கதைக்காமல் கண்ணைமூடித் தூங்கிவிடு
மினக்கெட்டு படிச்சதெல்லாம் மிஞ்சுமோ பரீட்சைக்கு

உறுதியை மறந்துவிட்டேன் உன்னுடைய அவசரத்தால்
குறுகிய நேரத்தில் குடும்பத்துடன் இடம்பெயர்ந்தோம்
மறுக்கவும் முடியவில்லை மண்ணதிர குண்டுவிழ
குறுகுறுக்குது மனம் கும்பிடுகிறேன் பிள்ளையாரை

அம்மா சும்மாகிட ஆருக்குஇப்ப உறுதிவேணும்
சும்மாசும்மா என்னைத் தொந்தரவு செய்யாதே

தும்மவும் முடியவில்லை துவக்காலே சுடுகின்றான்
இம்மளவு பிரச்சினைக்குள் இனியெதற்கு உறுதிகள்.

நகைகள் தாட்டதும் நேரமில்லை கிண்டியெடுக்க
பகைவர் கண்டுவிட்டால் பாவியவன் விடமாட்டான்
வகைவகையாய் செய்தது வாங்கலாமா இந்நாளில்
திகைத்திடுவான் கண்டவுடன் திமிர்தான் நமக்கென்று

நகைகளை என்னசெய்ய நாளைநாம் இருப்போமா
வகைவகைக் குண்டுகளால் வதைக்கின்றான் எங்களை
புகைபுகையாய் வருகிறது பூமித்தாய் கருகுகிறாள்
மிகையாக சேர்த்துஎன்ன மிஞ்சுமோ எங்கள்வாழ்வு.
இந்தியா கைகொடுக்கும் இனியுலகம் தாங்காது
முந்தி வந்திடுவர் முடித்திடுவார் இந்தப்போரை
சிந்திய இரத்தம்போதும் சிறப்பாய்நாம் வாழ்ந்திடலாம்
சந்திக்குப் போயொருக்கால் சங்கதியை அறிந்துவா.

இந்தியாவும் வரமாட்டான் அவங்களுக்கும் லாபமில்லை
இந்தளவு நடந்தபின்னும் இவற்றையாரும் கேட்டாரா
முந்தியிங்கு வந்தவங்கள் முடித்தானா போர்தன்னை
சிந்தித்துக் கதையம்மா சிரிக்கவென்னால் முடியவில்லை.

அப்பா உழைத்துழைத்து அற்புதமாய் வீடுதந்தார்
சொப்பனமாய் தெரிகிறதே செல்லாலே இறந்தகதை
எப்போதும் பொத்திக்காத்த எங்களின் சொத்துக்களும்
இப்போது தப்பிடுமா இருக்கவென்னால் முடியவில்லை.

எப்போதும் உதையேனம்மா எடுத்தெடுத்துப் புலம்புகிறாய்
இப்படிநீ புலம்பிவிட்டால் இனியவர்தான் வருவாரா
எப்படியும் நாளைநாம் எம்வீட்டுக்குச் சென்றிடலாம்
இப்போது கண்ணைமூடு இனிநானும் தூங்கவேண்டும்.

கண்ணைமூடி அம்மாதூங்க கதையெல்லாம் அடங்கியது
உண்மையிலே தூங்கினாளா உறங்குவதாய் நடித்தாளா
கண்ணிமைக்கும் நேரத்துள் கண்விழித்து எனையெழுப்பி
இன்றைக்குப் போகவேண்டும் இன்னுமென்ன தூக்கமென்றாள்.

சத்தமேதும் கேட்கவில்லை சாலையிலும் நடமாட்டம்
இத்தருணம் நல்லதென்று இருவரும் புறப்பட்டோம்
ஒத்தையடிப் பாதையாலே ஒழித்தொழித்து நாம்போனோம்
அத்தனை வழிமுழுக்க அவலம்தான் தெரிந்ததுவே.

திறப்பு செருகியது துலையாமல் இருக்காவென்று
மறக்காமல் தடவித்தடவி மண்ணின்மீது நடந்தாளே

இறந்த உடல்கள்சில இருந்தன வழியெங்கும்
பிறந்த குழந்தைகூட பிணமாக யாருமின்றி.

எங்கேடா எங்கள்வீடு எனக்கொன்றும் புரியவில்லை
இங்கேதான் எங்கள்வீதி இதின்முடிவில் வீடெங்கே
அங்கே நான்பார்த்தேன் அடையாளமே தெரியவில்லை
எங்களின் வீடென்ன எல்லாமங்கே தரைமட்டம்.

அம்மா ஓடிப்பார்த்தாள் அங்கெதுவும் மிஞ்சவில்லை
அம்மாதன் இடுப்பிலிருந்த அந்தத்திறப்பு எடுத்தாள்
அம்மா உதுவெதற்கு அங்கேதான் கதவில்லையே
அம்மா என்னைப்பார்த்தாள் அப்படியே குந்திவிட்டாள்.

பூட்டிப் பலமுறை பத்திரமாய் இழுத்துப்பார்த்து
கட்டிலை இழுத்து கதவடியில் அண்டிவைத்தேன்
கட்டிய வீடெங்கே காவல்காத்த கட்டிலெங்கே
ஒட்டிய யன்னலெங்கே ஒருதுண்டும் தெரியலயே.

எடுப்பதற்கு எதுவுமில்லை எல்லாமே அங்குமிங்கும்
உடுக்கும் உடையுமில்லை உணவுகூட அங்கில்லை
படுப்பதற்கு கட்டிலில்லை படிப்பதற்குக் கொப்பியில்லை
நடுவினிலே தாட்டுவைத்த நகையெங்கே தெரியவில்லை.

அம்மாவைத் தூக்கிக்கொண்டு அவசரமாய் திரும்பினேன்
சும்மா இங்கேநின்றால் சுடுவாங்கள் அவங்கள்கண்டால்
நம்பவே முடியவில்லை நாமிருவரும் பேசவில்லை
தம்பியொருவன் உதவியுடன் தங்குமிடம் திரும்பினோம்.

வந்ததும் இடுப்பைத்தேடி விழுந்தது திறப்பென்றாள்
அந்தத்திறப்பு எனக்குவேணும் அவசரமாய் எடுத்துவாடா
எந்தச்சாட்டும் நான்சொல்லி ஏறவில்லை அவள்காதில்
அந்தத் திறப்பெங்கே அதைநான் தொலைத்துவிட்டேன்.

தொலைந்தது திறப்பா தூக்கிவளர்த்த அன்னையன்றோ
முலைப்பாலைத் தந்தவளை மூச்சடக்கிப் பெற்றவளை
தொலைத்தேன் நானின்று தேடுகிறாள் திறப்பையின்றும்
விலையில்லாப் பொக்கிசம் விளையாடுது திறப்போடு.





# முதியோர் நலமும் சமூகமும்

**க.சுதாகரன்**
பொது சுகாதாரப் பரிசோதகர்

இலங்கையில் வழங்கப்பட்டு வரும் இலவச மருத்துவசேவைக் கட்டமைப்பின் காரணமாக முதியோரின் எண்ணிக்கை விகிதாசாரம் அதிகரிப்பதாகக் கூறப்படுகின்றது. இது ஓர் சிறப்பான சுகாதாரக் குறிகாட்டியாக காணப்பட்ட போதும், இதை தொடர்ந்தான சமூகம் சார்பான விளைவு களின் பால் நாம் சற்று உற்று நோக்க வேண்டியுள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் அரசாங் கத்தால் முதியோர் நலத்திட்டங்கள் வெளிநாடுகளைப் போல் கட்டமைக்கப்படவில்லை. ஏனெனில் அதற்கான தேவையும், கேள்வியும் குறைவாகவே காணப்பட்டன. தற்போது அதற்கான தேவை நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களிலும் உணரக் கூடியதாக உள்ளது.

சிறப்பான உதாரணமாக எமது பகுதிகளில் முளைக்கத் தொடங்கியுள்ள முதியோர் இல்லங்கள், பராமரிப்பு நிலையங்கள், பராமரிப்பு பணக்கொடுப்பனவு வைத்திய நிலையங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இது ஒருபுறமிருக்க முதியோர் உளநலம் தொடர்பான பாதிப்புக்களான முதியோர் நினைவாற்றல் பிரச்சினைகள் (Memory loss problems), அறளை பெயர்தல் (Dementia), வெறுங்கூட்டு நிலை (Empty nest syndrome) போன்றவையும் அதிகரிக்கும் அபாய நிலையும் உள்ளது. இவற்றிற்கான நவீன ஆங்கில மருந்து வகைகள் காணப்பட்டபோதிலும் சமூகம் சார் ஆதரவு (Social support) அரிதாகி வருகின்றது.

முதியோர் நலன் தொடர்பாக சமூகம் சார் ஆதரவு அரிதாகி வருவதற்குரிய காரணங்களாக கூட்டுக் குடும்பங்கள் கருக் குடும்பங்களாக மாற்றமடைதல், உலக மயமாதல், உறவுகள், பிள்ளைகளின் புலம்பெயர்வு, சமூக அமைப்புக்களின் வலுவிழந்த நிலை போன்றவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம்.


இப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு சமூகம் சார் கட்டமைப்புக்களை பலப்படுத்த வேண்டிய தேவையும் கடப்பாடும் நமக்குக் காணப்படுகின்றது. சனசமூக நிலையமும் அதன் செயற்பாடுகளும் இதற்கு முக்கிய பலம் வழங்குகின்றது. அது மட்டுமல்லாது முதியோர்

பொழுதுபோக்கு கழகங்கள், மரண சங்கங்கள், பஜனை செயற்பாடுகள், அரங்க செயற்பாடுகள், ஆன்மீக செயற்றிட்டங்கள், சுற்றுலாக்கள், தல யாத்திரைகள், ஒன்று கூடல்கள் போன்றவற்றை சனசமூக நிலையங்கள் ஊடாக அமைப்பதும், செயற்படுத்துவதும் முதியோர் நலனில் முக்கியம் பெறுகின்றது.

முதியோரிற்கென ஓய்வூதியம், மாதாந்த கொடுப்பனவு, முதியோர் அடையாள அட்டை போன்ற சலுகைகளையும் வழங்க ஆவன செய்வதுடன், இவற்றை நடைமுறைப்படுத்த சமூகசேவை உத்தியோகத்தர்கள் (S.S.O), முதியோர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் (ERPO) போன்ற அரசாங்க உத்தியோகத்தர்களையும் விசேடமாக அரசாங்கம் நியமித்துள்ளது.

மேற்குறித்த அரசசார்பான செயற்றிட்டங்களையும், சமூகத்தில் உள்ள முதியோரையும் இணைக்கும் பாலமாக சனசமூக நிலையத்தின் பங்கும் தலையானதாக காணப்படுவது கண்கூடாகும்.

நன்றி.





# புத்தகக் காதலி

சிந்துஜா ஜெயக்குமார்

விடிந்து கொண்டிருக்கும் இரவுக்குள் புத்தகத்தின் இறுதிப்பக்கங்களில் மூழ்கிக்கிடக்கின்றாள் சுஜா. அவளது மேசை மேல் வைக்கப்பட்டிருந்த வீடுருவக்கடிகார முட்கள் மூன்று மணியைக் கடந்து விரைந்து கொண்டிருந்தன. இறுதிப்பக்கத்துடன் கூடிய சோடிப்பக்கத்தின் வெறுமை அவளின் முகத்திலும் பிரதிபலிக்கத் துவங்கியிருந்தது. பிரடியில் செருகிய கையின் உறுதியுடன் பக்கவாட்டகப் படுத்துக்கொண்டிருக்கிறாள். முதுமையின் நீரோட்டத்தில் வலிகள் நிறைந்த ஒரு குறுநாவல் அன்று இரண்டாவது நாளாக முடிவுக்கு வருகிறது.

விசாலமான வரலாறு கடந்தது சிறுபராயம். முதிர்ச்சியடைந்த நாட்களுடன் முட்டிமோதிக் கொண்டு தனக்கான உறவுகளை விடுத்து வேலைக்காக வெளியூரில் வாழ்ந்து வருகிறாள். தனிமையின் தன்மையை மாற்றியமைக்க அவள் தேர்ந்தெடுத்துக்கொண்டது, அவளுக்குப் பிடித்தமான எழுத்துக்களுடனான உரையாடல், பதின்மங்களிலிருந்து புத்தக வாசிப்புகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறாள்.

அன்றும் வழமையான அவளது அலுவலக நாளாகவே புலர்ந்தது. அவசரமாக தனது கோனர் இருக்கையினைப் பிடித்துக்கொண்டாள் அந்த அதிவேகப்புகையிரதத்தில், அலுவலகத்திற்குச் செல்லும் இரு மணி நேரங்களும் தொடர்ச்சியான நாட்களில் அறியாத முகங்களின் விம்பங்களே படிந்து கொண்டிருந்தது. ஆனாலும் உற்சாகமாகவே அமர்ந்திருந்தாள்.

"குட்மோர்னிங்" நிமிர்ந்து கொண்டாள், சிந்திக்க நேரமில்லாமல் சிறுபுன்னகையுடன் குட்மோர்னிங்கில் குறையேதும் வந்துவிடப் போவதில்லை என்று குட்மோர்னிங் வைத்தாள்.

இண்டைக்கு என்ன சுஜாதாவா? எஸ்.ராவா? என்று எதிரிலிருந்த புதியவன் கேட்டு முடிக்கவும் குட்மோர்னிங்குக்குரியவன் தமிழ்மொழிக்கு சொந்தக்காரன் என்று உணர்ந்துகொண்டவள், சந்தேகத்துடன் கேட்டாள்

"நாங்கள் இதற்கு முதல் மீட் ஆகியிருக்கிறமா"?

"யெஸ். மூணுதடவ நான் உங்களைப் பாத்திருக்கேன். ஒரு தடவை யாமத்தோட மற்ற இருதடவை எனக்குப் பரீட்சயமில்லாத புத்தகங்களுடன்.."
"ஓ.கே", என்று ஆரம்பிப்பவன் போல் பேச்சை முடித்துக்கொண்டாள் சுஜா.

பயணதூரத்தில் என்ன எண்ணினார்களோ தெரியவில்லை, இருவரும் மௌனத்தை தம்வசமாக்கிக்கொண்டே வந்தார்கள். வழமைபோல் அலுவலகம், கடைத்தெருவென்று அந்தநாளின் இறுதியில் புகையிரத நிலைய காத்திருப்பு இருக்கையில் அமர்ந்துகொண்டவள், ஏதோ சத்தத்துடன் சற்றே நிமிரவும் எதிரே அடுத்த வகுப்பு மேடையில் காலையில் அவள் சந்தித்து அந்தப்புதியவன் கையில் புத்தகத்துடன் அமர்ந்திருந்தான். அவள் எதுவும் நினைத்துகொள்ளும் கணநேரத்தில் நீண்ட புகையிரதம் அவனை மறைத்து நின்றது. அது அவள் செல்லவிருக்கும் நகரத்துக்கான மாலை 6.30 மணிப்புகையிரதம்.

பயணமுடிவில் வீடு வந்தவளிடம் உடலும் ஆடையும் பரஸ்பரம் விடுதலை வேண்டி நிற்க குளியலறை சென்று சுதந்திரமளிக்கிறாள். நீராடும் போது வீட்டிற்கு அழைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் படர்ந்து கொள்ள அதை நிறைவேற்றவும் செய்தாள். இரவுணவுக்காக ஆடம்பர சமையலை வழமையாக செய்வதில்லை. உணவினை முடித்துக்கொண்டு நாளைய தேவைக்கான உடைகளை சீர்செய்துவிட்டு, டிவியினை ஆன்செய்கிறாள் பொதுவாக பாடல்கள், ரியாலிட்டி ஷோக்களோ அவளது நிகழ்ச்சித் தெரிவாக இருந்தது. அந்த வரிசையில் பாடல்கள் சிலவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனாலும் அன்றைய நாளை பூரணப்படுத்த முடியாது போக, புத்தக ராக்கையை நோக்கிக் கவனத்தை விட்டாள். நீளமாக இருந்த ராக்கையின் இருமருங்கிலும் புத்தகங்கள், அவளது இருப்பை மாற்றி புதிய இட நகர்வின் போது அவளுக்குப் பிடித்தமான சில தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்களின் இருப்புக்களைத்தனதாக்கிக்கொண்டே வந்திருந்தாள். அந்த இருப்புக்களில் ஒன்றான சுஜாதாவின் ஸ்ரீரங்கத்து தேவதைகளின் சிறுகதைத் தொகுப்பினை இன்றைய நாளுக்காகத் தேர்வுசெய்திருந்தாள்.

புத்தகம் வாசிக்கும் பழக்கம் ராணிக்கொமிக்ஸ் வாசிப்பதில் ஆரம்பித்து ரமணிச்சந்திரனின் மோகம் விடுபட, ஆசான் சுஜாதாவை வாசிக்கத்தொடங்கி வேறுபட்ட எழுத்துக்களினை ரசிக்கத் துவங்கியிருந்தாலும் ஆரம்ப ஈர்ப்பு நிலை என்பதைத் தாண்டிய பந்தம் சுஜாவிற்கும் சுஜாதாவிற்குமாகவே இருந்தது. அவரின் சில எழுத்துக்களை இன்னும் வாசித்துணரவேண்டும் என்ற ஆர்வத்துடன் புத்தக ராக்கையிலிருந்து புத்தகத்தை எடுக்கும்போது "யாமம்" எஸ்.ராமகிருஷ்ணனின் புத்தகம் கண்ணில்பட்டு அவளது விரல்களைப் பரிசித்தது. யாமத்தை எடுத்துக்கொண்டவள், காலையில் கண்டுகொண்ட புதியவன் நினைவிற்கு வரவே மேசை மேல் வந்தமர்ந்தாள்.

அவள் யாமம் புத்தகத்தை முதல்தடவையாக வாசித்த இரவுகளில் அடுத்தடுத்த நாட்களின் இரவுகள் அப்புத்தகம் பற்றிய எழுச்சியான இரவுகளாகவே இருந்தது. ஒவ்வொரு பக்கங்களும் நீண்ட இரவை அழகாக்கியவையாகவும், உலகின் வேறுபட்ட தேசங்களின் நம்பிக்கைகளை கண்முன்னே கொண்டு வந்திருப்பார் எஸ்.ரா அவர்கள், அவரின்

எழுத்துக்களைப் படிக்கும் எந்த வாசகனும் இதனை உணரமுடியும். மனத்திற்கு குழப்பமான இரவுகளை யாமம் போன்ற புத்தகங்கள் மூலம் சுஜா கடந்துவந்திருக்கிறாள். அன்றைய இரவும் அவன் யாராக இருப்பான் என்ற குழப்பத்துடனே இருந்தது. அதனாலேயே யாமத்துடன் உரையாட வேண்டும் என்பதுபோல் உணர்ந்திருந்தவள், எஸ்.ராவின் எழுத்துக்களுடனே தூங்கிப்போனாள். விழிந்தும் அருகிலிருந்த புத்தகத்தை ராக்கையில் வைக்கும் போது அறியாமல் மனதில் ஒரு தெளிவு உற்சாகத்துடன் அலுவலகம் புறப்பட்டாள்.

அவளுக்கான கோனர் இருக்கை இன்றும் புகையிரதத்தின் இரண்டாவது பெட்டியில் அமைந்திருந்தது. அமைதியாக அமர்ந்துகொண்டாள். வீட்டின் நினைவலைகள் புகையிரத்தை விட அதிவேகமாகப் பயணித்தது. அவளுக்காகவே வடிவமைக்கப்பட்ட பொறுப்புக்கள், கடற்கரையில் தனித்து நிற்கும்போது கால்களை முட்டுவதும் செல்வதுமாக உள்ள அலைகளைப் போல மாறி மாறி முட்டி மோதியது. பயணத்தூரத்தின் பாதித்தூரம் வெறுமையை உணர்ந்தவள். தனது நினைவுத்திசையை மாற்ற விரும்பியவளாக இறுதியாக அவளை ஆட்கொண்ட படித்துசுவைத்த எழுத்துக்களைப் பற்றி சிந்திக்கத்துவங்கினாள். யாருடனோ தனது மனதில் உள்ளவற்றை பகிர்ந்து கொண்டது போலும், மீதித் தூரம் அவள் பயணித்தது அவளுக்குப் பிடித்தமான எழுத்துக்கு சொந்தமானவர்களுடன் என்பது போலும் உணர்ந்து கொண்டாள்.

தெளிவான மனதுடன் தனது அலுவலகப் பணிகளை செவ்வனே செய்துமுடித்தாள், அவளுக்கான எதிர்காலம் அவளருகில் இருப்பதை உணர்ந்தவளாய் புகையிரதநிலையம் நோக்கி நடந்தாள். அன்று அவளுக்கான இருக்கை கிடைக்கவில்லை. நின்றுகொண்டு பயணிக்கவே நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தாள். புகையிரதத்தின் பெட்டிகள் இணைக்கப்படும் இடத்தில் அகலமான இடைவெளியில் சுஜாவிற்கு பின்னபுறமாக நின்றிருந்தான் சரண், பிரபல ஓடிட்டர் நிறுவனத்தில் பணிபுரிகிறான். வாரத்தில் மூன்று நாட்கள் தலைமை அலுவலகத்தில் வேலைக்காக அமர்த்தப்பட்டிருந்தான். அன்றும் அலுவலகத்திலிருந்து வீடு செல்வதற்காகவே புகையிரதத்தில் பயணித்துக்கொண்டிருக்கிறான். சுஜாவும் சரணும் ஒருவரை ஒருவர் முதுகு பார்க்க நின்று கொண்டிருந்தவர்கள், தண்ணீர்ப்போத்தல்களுடன் வந்த சிறுவன் கூவிய ஒலியின்பால் முகம் பார்த்துகொண்டனர். முந்தைய இரவின் சுஜாவின் குழப்பங்களுக்கு காரணமானவன் அவள் முன்நிற்பதைக் கண்டுகொண்டாள். அவர்களின் முதல்நாள் சந்திப்பில் சுஜாவின் மௌனம் சரணின் இன்றைய மௌனத்திற்கு காரணமானது, வெளியிலே பார்வையை சிதறவிட்டவனாக நின்றிருந்தான். முதல்நாள் முடித்துக்கொண்ட ஓகேயுடன் தொடரநினைத்தாள் சுஜா.

"அன்னைக்கே கேக்கணும் என்று நினைச்சன் உங்களுக்கு என்ன எப்பிடித்தெரியும்"?

"இந்த புகையிரதத்தில தான் பாத்திருக்கிறன், நான் உங்களைப் பார்த்த நேரங்களில் நீங்கள் புத்தகத்தில் இருந்தீர்கள் என்னைப் பார்த்திருக்கமாட்டீங்க" என்றான்.

"புத்தகம் வாசிக்கிறது ரொம்பப் பிடிக்குமா"?? கேள்வி பிடித்துகொண்டவளாய் ஆர்வமாகப் பதிலளித்தாள். ம்ம்.... ரொம்பப் பிடிக்கும், வாசிப்பு ஒன்றுதான் என்னை திருப்திப்படுத்துவதாக பீல் பண்ணிறன்" என்றாள். சுஜாவின் பதில் உள்மனதிலிருந்து வந்ததை உணர்ந்துகொண்டான் சரண்.

நீங்களும் வாசிப்பீங்களா??

ம்ம்... வை நாட்? ஆனா டைம் இல்லை என்று சொல்றீங்களா?? என்ற சுஜாவின் கேள்வியை எதிர்பார்த்திராத சரண் பதிலைத் தேடி கொண்டிருக்கும் நேரத்தில் அவளே தொடர்ந்தாள்.

"புத்தகங்கள் வாசிக்க ஆசை, ஆனால் நேரம்தான் கிடைப்பதில்லை என்று சொல்பவர்களை நினைத்து ஆச்சரியப்பட்டிருக்கிறேன் அதற்கான காரணம்தான் புரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் வாசிப்பு என்பது ஒரு தாகம், ஒருவருக்கு தாகம் எடுத்தால் அதனைத் தீர்க்காமல் இருப்பது மிகவும் கடினம். தாகம் எடுப்பவன் தனக்கான நேரத்தை ஒதுக்கி அதைத்தீர்த்துக்கொள்ளவே முயல்வான், அதோட வாசிப்பென்பது இருவருக்கிடையிலான நெருக்கமான உரையாடல், உரையாடுபவர்களில் வாசிப்பவர் ஒருவர் என்றால் எழுத்தாளன் இன்னொருவர் இந்த உரையாடலில் ஒருவர் உரையாடும் இடத்தில் இருக்கமாட்டார் அவர் எழுத்துவடிவத்தில் புத்தகத்தில் இருப்பார்.

யூ ஆர் கரெக்ட், இன்ரஸ்டிங்... நான் உங்களோட பேசணும் என்று நினைத்ததுக்கான எதிர்பார்ப்புக்கு நீங்களே பதில்சொல்லீட்டிங்க. பொதுவான விடயங்களைப் பற்றி பகிர்ந்து கொள்ள நிறையப் பேர் கிடைப்பாங்க ஆனா புத்தகங்களைப் பற்றி பேசிறதுக்கு யாரும் முன்வரமாட்டாங்க. எனக்கு நான் வாசிக்கிறத யாரோடையும் பகிர்ந்துகொள்றதில ஒரு சுயதிருப்தி ஏற்படுறதா பீல் பண்ணிறன், உங்களோட பேச நினைத்ததுக்கு இதுவே காரணமாகக்கூட இருக்கலாம். உங்க பெயர் என்ன என்று தெரிஞ்சுக்கலாமா?

"சுஜனித்தா"

"நான் சரண் சொல்லுங்க யாரை எல்லாம் வாசிப்பீங்க"?

"எப்பவுமே சுஜாதாதான் தலைவர் அது போக எஸ்.ரா என்னோட அனுபவத்தில அதிசய எழுத்துக்களுக்கு சொந்தக்காரர். ஜெயமோகனையும் படிப்பன், அப்புறம் பொன்னியின் செல்வனுக்காக மட்டும் கல்கி "இருங்க... இருங்க.. பொன்னியின் செல்வன் வாசிக்கிருக்கீங்களா?? "ஆமா ஏன்"

எத்தனை இரவுகள் லாம்பு வெளிச்சத்தில விடியவிடிய இருந்து வாசிச்சிருப்பன். பசுமையான நாட்களவை, நான் புத்தகம் படிக்கத்தொடங்கி மிகவும் விரும்பிப்படித்த நாவலது. வந்தியத்தேவனுக்கு ஈக்குவலா நம்ம சினிமாவில இன்னும் ஒரு ஹீரோவும் பிறக்கல்ல என்றுதான் சொல்லணும்.

எங்காவது நிலவொளியுடன் கூடிய முற்றத்தில் தனித்து நின்றபொழுதுகள் அனைத்திலும் பொன்னியின் செல்வன் வாசித்த ஒருவனால் அரசலாற்றங்கரையிலும், பழையயாற்றிலும் வந்தியத்தேவன், குந்தவை, அருள்மொழியுடனும் தாமும் வாழ்ந்ததாகவே உணர்ந்திருப்பர். கல்கி ஆர்ப்பாட்டமில்லாத எழுத்துக்குரியவர்.

"என்னாங்க அப்பிடிப் பாக்கிறீங்க" இல்ல பொன்னியின் செல்வன் வாசிச்சு முடிச்ச நாட்களில் என்னைப் பார்த்தமாதிரி இருக்கு உங்களைப் பாக்கும்போது ரொம்ப அனுபவிச்சு

வாசிச்சிருக்கிறீங்க" என்றாள் ஆர்வத்துடன் சரணைப் பார்த்து நின்ற சுஜா. அனுபவிச்சு எழுதபட்ட எழுத்துகளை எங்களோட அன்றாட அனுபவங்களோட இணைத்து வாசிப்பனுபவங்களை மீட்டுப் பார்க்கிறது சுகனுபவம், அது வாசித்துப் பெற்றுக்கொண்ட அனுபவத்தினால் மட்டுமே சாத்தியம் என்பதை உணர்ந்திருந்தவள் தனது சேருமிடம் வந்ததையும் கணநேரத்தில் உணர்ந்து "மறுபடியும் பாக்கலாம்" என்று சரணிடம் விடைபெற்றாள்.

அவள் விடைபெற்று சென்ற கணத்திலிருந்து சரணிடம் ஒரு மாற்றம். நீண்ட நாட்களாகவே பேசுவதற்கு எதிர்பார்த்த ஒருவரை சந்தித்த உணர்வு அவனைப் பற்றிக்கொண்டது. காரணம் புரியாமலே சிந்தனையுடன் வீடு திரும்பினான். சுஜாவும் தனது நீண்ட இரவினை வரவேற்று அவளது உள்ளுணர்வுகளை ஒத்த தன்னைப்போல ரசனை உணர்வுள்ளவனைச் சந்தித்ததிருப்தியுடன் தூங்கச்சென்றாள்.

பயணங்கள் அதிகரித்துக்கொண்டு செல்ல அதே வேகத்தில் அவர்களது வாசிப்பு அனுபவங்களும் பரிமாறப்பட்டன. காலஓட்டத்தில் சரண், சுஜா இருவரும் நண்பர்களாயினர். சுஜா தனது விடுமுறை நாட்களில் சரணின் வீட்டிற்கும் சென்று வந்தாள். அவனது அம்மாவும் அவனும் மட்டுமே உள்ள சிறிய குடும்பத்தில் அவளும் ஒரு அங்கமாகினாள். சகுந்தலா, சரணின் தாயார் புராண இதிகாசங்களை விரும்பி வாசித்து வந்தாள். சுஜாவும் அவளுக்கு சில புத்தகங்களை அன்பளிப்பும் செய்திருந்தாள். ஒரு நாள் மகாபாரதம் பற்றி மூவரும் பேசிக்கொண்டிருந்த நாளில், மகாபாரதத்தின் ஒவ்வொரு கதாபாத்திரங்களின் கருக்களும் எங்கே தோற்றம்பெற்றன, எதனை இவ்வுலகத்திற்கு உணர்த்துவதற்காக தோன்றின என்பதனை "உபபாண்டவம்" எனும் நூலின் மூலம் வாசித்துணர்ந்திருந்த தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டாள். உபபாண்டவத்திலே மகாபாரதத்தில் மேன்மையான நகரங்கள் ஒன்றுக்கொன்று பேசிக்கொள்வதாகவும், நகரங்களில் உள்ள மக்களின் குணத்தையே அந்தந்த நகரங்கள் கொண்டுள்ளதாகவும் நூலாசிரியர் எடுத்துரைத்திருந்தார். அதனை சகுந்தலா வாசிப்பனுபவத்துடன் கூறிய போது அஸ்தினாபுரம், இந்திரப்பிரஸ்தம், துவாரகை, விராடம் போன்ற நகரத்தினுள் இதனைக் கேட்டுக்கொண்டிருந்த சுஜாவும், சரணும் வாழ்ந்ததைப் போல உணர்வுண்டாகும் வண்ணம் கூறியிருந்தாள். சகுந்தலா சிறந்த வாசகி மட்டுமல்ல சிறந்த "கதைசொல்லி" என்பதையும் சுஜா அன்று கண்டுகொண்டாள்.

சரண் மொழிபெயர்ப்பு நாவல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவன். சுஜாவிற்கு மொழிபெயர்ப்பு நாவல்களில் பெரிதாக ஈடுபாடு இருக்கவில்லை. ஒரு நாவலின் எழுத்து பகைற்பனைகளினால் கதையின் வடிவம், கதையின்கரு போன்றன சிதைக்கப்படுவதாக நினைத்திருந்தாள். ஆனால் சரண் மொழிபெயர்ப்பு நாவலின் தேடலுக்காக கொடுத்த விளக்கங்கள் மிகவும் ஆழமானதாக உணர்ந்து கொண்டாள். ஒவ்வொரு புத்தகத்திற்கான வாசகனுக்கான தேடல்கள் வேறுபட்ட எல்லைகளைக் கொண்டது போலவே ஒவ்வொரு மொழிபெயர்ப்பு எழுத்தாளருடைய புதிய பிரமாணமாகவே பார்க்கிறேன் என்றான். இப்பொழுது சுஜாவும் மொழிபெயர்ப்பு நாவல்களுக்கு அடிமையாகியிருந்தாள்.

வாசிப்பு என்பது ஒவ்வொரு மனிதனின் தேடலை அதிகரிக்கச் செய்து புத்துணர்ச்சியான சிந்தனைகளை உருவாக்கும் ஒரு திறவுகோள். இதனை அறிந்தவர்கள் அதனை விடுத்து வேறு

எந்த இன்பத்தையும் இந்த நிலவுலகில் அனுபவிக்க விரும்புவதில்லை என்ற வரிகளுடன் பெருமூச்சு ஒன்றையும் விட்டுக்கொண்டாள் சகுந்தலா." என்ன அன்ரி ஆதங்கப்பெருமூச்சு வாசல்வரை கேட்கிறதே" என்று, திறந்திருந்த வாசலினூடு சகுந்தலா அருகில் வந்தாள் சுஜா.

மனிதன் ஒருவன் பூரணமடைய வாசிப்பு ஒன்றே போதும் என்கிறார்களே? வாசிப்பு எப்பிடி என் பேரப்பிள்ளைகளைத் தரும்? இவன் சரண் புத்தகம், வேலை, நண்பர்கள் என்று ஒரு வட்டத்தினுள்ளே சுத்துகிறானே.. காலகாலத்தில நடக்க வேண்டியவைகளும் நடக்கவேண்டுமேடியம்மா" என்று சலித்துக்கொண்டாள்.

சுஜா சிரித்துகொண்டே" அன்ரி வாசிப்பு வாழ்க்கையை அனுபவங்களினால் பூரணப்படுத்தும் ஆனால் அந்த வாழ்க்கையை நாம்தான் தேடிக்கொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டு புத்தக ராக்கையின் பக்கம் சென்றவளை பார்த்தவண்ணம் நின்றாள் சகுந்தலா. முதல் நாள் தாய்க்கும் மகனுக்குமான இரவுணவு நேர சம்பாசணையின் நொடிகள் நினைவில் உதித்தவளாய், சரண் இவளின் எளிமையைப் பற்றி கூறியது சரியாகத்தான் இருக்கிறது. முதல்நாள் சுஜாவினை தனது மகனுக்கான வாழ்க்கைத்துணையாக தேர்ந்து எடுத்திருப்பதாகவும் அந்த தேர்வு தனது மகனின் விருப்பதற்குரிய தேர்வாயின், சுஜாவிடம் இதைப் பற்றி பேச இருப்பதாகக் கூறினாள்.

"அம்மா எனக்கான உங்களது தேர்வு எப்போதும் சிறந்ததாகவே அமையும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.. ஆனாலும் சுஜாவினதும் எனதும் உறவுத்தேடலானது வாசிப்பு என்ற எல்லைக்குள் மட்டுமே விரிவடைந்துள்ளது. சுஜா என்னைவிட வயதில் இளையவனாலும் யதார்த்தமான சிந்தனை ஊற்றுக்கொண்டவள், வாசிப்பனுவங்களுடாக தனக்கான வரையறைகளை நியமித்து எழுத்துக்களின் இலட்சியங்களுடன் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருப்பவள். வாழ்க்கை என்ற பரந்த பரப்புக்குள் அவளை நான் சிறைப்பிடிக்க விரும்பவில்லை. அதுமட்டுமல்ல அவளுடன் பகிர்ந்து கொண்ட நாட்கள் மிகவும் அர்த்தமான நாட்கள், அவள் தனது வாசிப்பின் தேடல் மூலம் அவளது வயது அறிந்திராத அனுபவங்களை முன்னுணர்ந்து வருகிறாள் இதனை மட்டுமே அவளிடம் இருந்து நான் ரசித்துவருகிறேன்.

சுஜா எனது "புத்தகக்காதலி" எனது நிஜக்காதலியை நான் இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறேன் என்றும் சுஜாவும் அவனும் அவர்களுடைய உறவினுடைய எதிர்பார்ப்புக்களை முதலே அவர்களுக்குள் தெளிவுபடுத்தியிருப்பதாக கூறிமுடித்து பெருமிதமாக எழுந்து சென்றதையும் நினைத்துப் பார்த்து புத்தக ராக்கையின் முன்னால் நின்றுகொண்டிருக்கும் சுஜாவையும் ஒரு கணம் மீண்டும் பார்த்துக்கொண்டாள். அவர்கள் இருவரும் தங்களுக்குள் ரசனைகளுடன் ஒத்துப்போனாலும், வாழ்க்கையின் யதார்த்தத்தை இருவரும் நடைமுறையில் புரிந்தறிந்துள்ளனர். அவர்களின் வாசிப்பின் தேடல் பெருகிக்கொண்டு செல்வதைப்போல் இருவரது வாழ்க்கையும் பல பரிமாணங்களைக்காணும் என்ற எதிர்பார்ப்பு சகுந்தலாவின் மனதில் அந்தக்கணத்திலிருந்து துளிர்விட ஆரம்பித்தது.

# முன்பள்ளிக்கல்வியின் அவசியமும் தேவையும்

செல்வி சுகந்தினி சபாரத்தினம்
ஆசிரியர்,
யா/சென்தோமஸ் றோ.க.பெ.பாடசாலை,
பருத்தித்துறை.

## அறிமுகம்:

"இன்றைய குழந்தைகள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் சிற்பிகள்" என்று குறிப்பிடப்படுகின்றது. குழந்தைகளின் அறிவு வேகமாக வளர்ச்சியடைவது 8 மாதம் தொடக்கம் 5 வயது வரை என்பது பல உளவியலாளர்களின் கருத்தாகும். ஆனால் பிள்ளையின் கற்றல் தாயின் கருவறையிலேயே ஆரம்பித்து விடுகிறது என்ற கருத்து இன்று நிலைபெற்றுள்ளமையினால் முன்பள்ளிக்கல்வி என்னும் எண்ணக்கரு இன்று பெரிதும் எமது கவனத்தை ஈர்த்துள்ளது. 0 -3 வயது வரை பிள்ளைக்கு வழங்கப்படும் பராமரிப்பினை ஆரம்ப பிள்ளைப் பருவ பராமரிப்பு விருத்தி எனவும், 3-5 வயது வரை வீட்டிற்கு வெளியே வழங்கப்படுகின்ற ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வியை முன்பள்ளிக்கல்வி எனவும் வழங்குகிறோம்.

பிள்ளைகள் முறைசார் பாடசாலைக்குச் செல்வதற்கு முன் அதற்கான தேர்ச்சியைப் பெறுவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வியே முன்பள்ளிக்கல்வி எனப்படுகின்றது. பாலர் பருவம் (3-5 வயது வரை) பிள்ளையின் வாழ்க்கையில் மிக முக்கியமான விருத்திப் பருவமாகும். இப்பருவத்திலே அதிகமாக உடல் உள மூளை வளர்ச்சி ஏற்படும் காலமாகும். மூளை விருத்தியில் 70% இப் பருவத்தில் நிறைவடைகிறது. அதாவது அதன் உச்ச வளர்ச்சியைப் பெறுகிறது. உடல், உள மனவெழுச்சி வளர்ச்சிகளோடு ஆளுமை விருத்திக்குரிய அடிப்படை இப்பருவத்திலே தான் இடப்படுகின்றது. பிள்ளையின் போசாக்கு, சுகாதாரம், அறிகை மற்றும் உயர் சமூகத் தேவைகள் இப்பருவத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒரு பிள்ளையின் உடல் விருத்தியானது சுகாதாரம், போசாக்கின்மை காரணமாக தாமதமடையும் போது உள இயக்க விருத்தியும் அறிகை விருத்தியும் பாதிக்கப்படும். எனவே முன்பள்ளிக்கல்வி திட்டமிட்டு வழங்கப்படுவது அவசியமானதாகும்.

ஸ்பொடக் (Speodek) என்பவர் முறையில் வீட்டுச்சூழலுக்கும் பாடமையமான முறை சார்ந்த ஆரம்ப பாடசாலைக்கும் இடையே ஒரு பாலமாக முன்பள்ளிக்கல்வி அமைந்துள்ளது என்கிறார். அதாவது முன்பள்ளி பிள்ளைகளுக்கு பாதுகாப்பு, ஆரோக்கியம், மகிழ்ச்சி நிறைந்த சூழலை வழங்குவதோடு பிள்ளையின் கற்றலுக்கும் உடல் உள மனவெழுச்சி விருத்திக்கும்

அடித்தளமாக விளங்கக் கூடிய பயனுள்ள அனுபவங்களை வழங்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டு அரசின் பாலர் நிலையங்களில் ஆறு வயது வரை பராமரிக்கப்பட வேண்டும் என பிளாற்றோ கூறியிருந்தார். பெற்றோரின் பொறுப்பில் இருப்பதை விட அறிவார்ந்த ஆசிரியர்களின் கீழ் பிள்ளையானது உயர்குணங்களைக் கொண்ட ஆளுமையைப் பெறமுடியும் அவர் நம்பினார்.

இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட 18ம் நூற்றாண்டில்தான் சமூக அழுத்தங்களின் காரணமாக முன்பள்ளிக் கல்விக்கான முனைப்பு ஏற்பட்டது. கிராமிய பொருளாதாரமுறை சிதைவுற்று முழுக்குடும்பமும் நகர தொழிற்சாலைகளில் மணிக்கணக்கில் வேலை செய்யும் நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது நிராகரிப்புக்குள்ளான குழந்தைகளுக்குக் கைகொடுக்க சமய நிறுவனங்கள் முன்வந்தன. அவர்கள் அமைத்த பராமரிப்பு நிலையங்கள் குழந்தைகளைப் பேணியதோடு ஓரளவு கல்வியும் ஊட்டத் தலைப்பட்டன. இன்றைய முன்பள்ளிகளின் தோற்றுவாய் இந்த பராமரிப்பு நிலையங்களில் காணலாம்.

## முன்பள்ளிக்கான சூழல்

முன்பள்ளியானது பாதுகாப்பான சுகாதார வசதிகள் கொண்ட இடங்களில் அமைதல் வேண்டும். முன்பள்ளியைச் சுற்றி பாதுகாப்பான மதில் அல்லது வேலி இருத்தல் அவசியம். நாய்கள், கீரிகள், குரங்குகள், விஷப் பாம்புகள் நுழைந்து பிள்ளைகளைக் கடிக்காமல் இருக்க பாதுகாப்பு வேண்டும். இயற்கையான ஒளி, காற்றோட்டம் உள்ள இடத்தில் முன்பள்ளிகள் அமைதல் வேண்டும். குப்பை கூழங்கள், குன்று குழிகள், பற்றைகள் அற்ற இடங்கள் வரவேற்கத்தக்கது. பிரதான வீதியை அண்மித்ததாக அல்லது அதனை நோக்கிய வாசல் உடையதாக இருத்தலைத் தவிர்த்தல் நல்லது. வளவினுள் நிழல் தரு மரங்கள் இருப்பது நல்லது. ஆனால் செடிகள் கொடிகள் படரிகள் இல்லாது சுத்தமாக இருக்க வேண்டும். சனநெருக்கடி அதிகம் இல்லாத இடமாகவும் அமைதியான சூழல் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் தொழிற்சாலைகள், மரம் அரியும் ஆலைகள் சூழலை மாசுபடுத்தும் காரணிகளற்ற இடத்தில் முன்பள்ளிகள் அமைந்திருப்பது சிறப்பானதாகும்.

## பௌதீக மனித வளங்கள்:

ஒரு பிள்ளைக்கான கட்டடவசதி 20 சதுர அடியாக இருத்தல் சிறப்பானதாகும். ஒவ்வொரு 25 பிள்ளைகளுக்குமாக ஒரு சுத்தமான கழிப்பறையும், கை கழுவும் நீர்க்குழாய்களும் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். முதல் உதவிப் பெட்டிகள் இங்கு கட்டாயம் பேணப்படுதல் வேண்டும். அதில் காலாவதியான மருந்துகள் இருத்தல் கூடாது. கட்டும் துணிகள் புதியனவாகவும் , பாதுகாப்பானவையாகவும் பேணப்படுதல் வேண்டும். முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முதல் நிலை மருத்துவக் கல்வியும் பயிற்சியும் கட்டாயம் வழங்கப்படுதல் வேண்டும். ஒரு மருத்துவரின் உதவியும், அவசரமான பரிகாரி வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். பிள்ளைகள் சுதந்திரமாக பிரார்த்தனை அல்லது கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவதற்கேற்ற தூய்மையான சூழலும், இடவசதியும் இருத்தல் வேண்டும். மேலும் பிள்ளைகள் ஓடியாடி விளையாடுவதற்குரிய போதிய இடவசதியும், பாதுகாப்பான விளையாட்டு உபகரணங்களும் இருத்தல் வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்ட மேசைகள், கதிரைகள், தன்னிச்சையாக பிள்ளைகள் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கேற்ப

சுவரில் பதித்த கரும்பலகைகளும் அவசியமானதாகும். ஒவ்வொரு 20 பிள்ளைகளுக்கும் ஒரு ஆசிரியராவது இருத்தல் வேண்டும். 10 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் இருப்பின் சிறப்பானதாகும்.

கற்றல் இடைவேளையின் போது சிறுவர் நிகழ்ச்சிகளை மாணவர்கள் பார்ப்பதிற்கு தொலைக்காட்சி, கணினி வசதிகளை ஏற்படுத்தி இருப்பது சிறப்பானதாகும்.

## ஆசிரியர் மாணவர் தொடர்பு:

ஆசிரியர் மாணவர் உறவு சிறப்பாகப் பேணப்பட வேண்டும். அதாவது முன்பள்ளி ஆசிரியர் வீட்டுச் சூழலில் இருந்து வரும் பிள்ளையை அணுகி, வீட்டுச்சூழலை முன்பள்ளியில் ஏற்படுத்த வேண்டும். முன்பள்ளி ஆசிரியர் தானொரு தாயாக அல்லது தாதியாக மாறியே சேவை செய்ய வேண்டும். பிள்ளைகளிடம் அன்பும், ஆதரவும், கனிவாகப் பேசும் தன்மையும் கொண்டிருக்க வேண்டும். மேலும் பாசமும் , பரிவும் அரவணைக்கும் தன்மையும் கொண்டிருக்க வேண்டும். மலர்ந்த முகத்துடன் புன்னகையுடன் பிள்ளைகளிடம் உரையாட வேண்டும். விளையாட்டுடன் கூடிய செயற்பாடுகளில் பிள்ளைகளுடன் இணைந்து செயற்படக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஆடல், பாடல் போன்ற செயற்பாடுகளிலும், விளையாட்டுச் செயற்பாடுகளிலும் சகபாடிகளுடன் இணைந்து குழுவாக செயற்பட ஆசிரியர் வழிகாட்ட வேண்டும். இதனால் பிள்ளைகளிடையே நட்புறவு ஏற்படுகிறது. ஆளுமை விருத்தி ஏற்படுகிறது. தலைமைத்துவப் பண்பு வளர்கிறது.

ஆசிரியர் மாணவர் உறவு சிறப்பாக இருக்கும் நிலையிலேயே மாணவர்கள் மகிழ்ச்சியாகவும், சுதந்திரமாகவும் செயற்பாடுகளில் ஈடுபடுவர். பாதுகாப்பு உணர்வும் பெறுவர். அவர்களின் மனவெழுச்சிச் சமநிலை பேணப்படும். உடல், உள்ளம் என்பன ஆரோக்கியாக வளர்ச்சி பெறும்.

## ஆசிரியர் பெற்றோர் தொடர்பு

பிள்ளையின் வாழ்க்கையில் மிக முக்கியமானவர்கள் பெற்றோர்களாவர். பிள்ளைகளுக்கு நல்ல அனுபவங்களை கொடுத்து அவர்களது விருத்திக்கு உதவுபவர்கள் பெற்றோராவர். பிள்ளையின் வீட்டுச் சூழல் அவர்களது கற்றல் செயற்பாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பிள்ளை முன்பள்ளிக்கு வீட்டுச்சூழல், அவன் பெற்ற அனுபவங்கள் அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகிறது. இதனால் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது அவசியம்.

பெற்றோர் உறவை மேம்படுத்துவதன் மூலம் பிள்ளைகளின் வீட்டுச் சூழலையும், பின்னணியையும் அறியலாம். முன்பள்ளிக்குச் செல்வதற்கு முன்னுள்ள அனுபவங்களைத் தெரிந்து கொள்ளலாம். விசேட உடல்நலப் பிரச்சினைகள், வளர்ச்சிக் குறைபாடு, பிள்ளைகளது விருப்பு வெறுப்புக்கள், பிள்ளையின் கற்றல் தொடர்பான பெற்றோரின் மனப்பாங்கு போன்றவற்றை அறிந்து கொள்ளலாம்.

முன்பள்ளியின் முக்கிய பங்காளிகள் பெற்றோர்கள், விளையாட்டுப் போட்டி, கலைவிழா போன்ற நிகழ்வுகளில் பெற்றோர்கள் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றனர். மேலும் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களில் உதவி பெறுவதற்கு பெற்றோர்களின் உதவி தேவை. அத்துடன் சூழலில் வெளியிடங்களில் உதவி பெறுவதற்கு பெற்றோரின் உதவி தேவையானது. முன்பள்ளிகளைக் கவனிப்பதிலும், தேவையானவற்றைச் செய்து கொடுப்பதிலும் தாமாகவே முன்வந்து உதவுகின்றனர். இந்த வகையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பெற்றோர்களின் தொடர்பு வேண்டப்படுகின்றது.

## முன்பள்ளிக் கல்வி விருத்திக்கான முன்மொழிவுகள்:

- முன்பள்ளிக் கல்வியை விருத்தி செய்வதற்கு தேவையான பௌதீகவளம், மனிதவளம் என்பவற்றை பெறுவதற்குப் பிரதேசத்திலுள்ள சமய கலாசார சமூக அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவுதல்.

- பிரதேசத்திலுள்ள முன்பள்ளி பாடசாலைகளை முறையான நிர்வாக அமைப்பொழுங்கு களுக்குள் கொண்டு வருதல், தகுந்த மேற்பார்வை முறையைப் பின்பற்றுதல். பாலர் கல்வி தொடர்பான இலக்குகளையும் குறிக்கோள்களையும் நெறிப்படுத்துதல்.

- நூலக வசதிகளை ஏற்படுத்துதல் / புத்தக மூலை ஒன்றை ஏற்படுத்துதல்.

- விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் மூலம் பெற்றோர் மற்றும் சமூகத்தினருக்கு இக் கல்வித் துறையின் முக்கியத்துவம் பற்றி உணர்த்துதல்.

- முன்பள்ளி ஆசிரியர்களுக்கான தொடர் பயிற்சிகள் ஒழுங்கு முறையாகப் பேணல். முன்பள்ளி ஆசிரியர் கல்வித்தரம், அனுபவம், பயிற்சி என்பவற்றிற்கு ஏற்ப சம்பளத்திட்டம் பேணப்படல். முறையான நிதி நிர்வாக அமைப்பை ஏற்படுத்துதல்.

## முடிவுரை:-

கற்றல் வாழ் நாள் முழுவதும் தொடர்ச்சியாக நடைபெறுவதொன்றாகும். "கருவறையிலிருந்து கல்லறை வரை கல்வியைத் தேடு" என்று ஆன்றோர் கூறியிருப்பது இங்கு சிந்திக்க வேண்டியதொன்றாகும். எதனைச் செய்வதற்கும் ஒரு பயிற்சி அல்லது வழிகாட்டல் அவசியம் தேவைப்படுகின்றது. வாழ்க்கைக்கு ஆயத்தமாகும் பிஞ்சுப் பருவத்தில் உறுதியான அத்திபாரம் இடப்படுவது முக்கியமாகும். இந்த வகையில் முன்பள்ளிகள் பிள்ளைகளின் நீண்டகாலப் பண்பு நலன்களையும் உளவியல் விருத்திகளையும் உருவாக்கவல்லன. வீட்டுக்கு வெளியே பெறும் முதல் சமூகமயமாக்கல் அனுபவம் பெறுமிடமே முன்பள்ளிகளாகும். மாறுபட்ட சகபாடிகளை இயல்பாகப் பார்த்தும், உணர்ந்தும் தம் சிந்தனையையும் உணர்வையும் பிள்ளைகள் அகலப்படுத்திக் கொள்ளும் தூய்மையான அனுபவங்களை வழங்க வேண்டியது அவசியமாகும்.

# Find Your Moment

**S.Sumithreyi**
Near Varatha Vinayagar Temple,
Thumpalai

**W**hat do I want to do with my life? This is a question everybody asks themselves at some point. Some find the answer in their youth, some in their old age and some not at all. To which of these do you belong? To which of these do you <u>want</u> to belong? Throughout history we find people who have found their moment, lived their true life and made their name among the great. But how did they become great? What did they have that others didn't have? They found their moment and made a path for themselves.

We are born, we go to school, university, we find a job, we marry and have a family. We go on doing ordinary thing day after day until we find that our life is almost over.




J.K. Rowling was a struggling single mother when she wrote her first book Harry Potter and the Philosopher's stone. Eight months later the novel won British Book Award for Children's Book of the Year. Now she is one of the most celebrated authors in the world.



Gandhi was travelling to South Africa as an attorney when he was thrown off a train. Thus began his non-violent war against British rule which led India to freedom.

What is the difference between Rowling and other struggling single mothers? What is the difference between Gandhi and the other people who face discrimination? The difference is that they found their moment, their purpose in life. Each of us is unique. We have our own talents, dreams and interests. We all have a mission in life. The only difficulty is to find it.

Your purpose in life may not be something that will win you a Nobel prize. It may be something simple like teaching somebody or looking after someone. It doesn't matter what you become. You have a mission in life that nobody else can do it for you. Find your moment. And live it.





# பாற்பல்லின் பராமரிப்பும் பயன்பாடுகளும்

பல்மருத்துவர்
Dr.நிர்மலா சிவா

குழந்தை பிறந்து ஆறாவது மாதத்தில் பற்கள் முளைக்கத் தொடங்கும். இரண்டரை வயதுக்கிடையில் இருபது பற்கள் முளைத்துவிடும். மேல் தாடையில் பத்தும் கீழ்த்தாடையில் பத்துமாக இருக்கும்.

பாற்பற்களின் தொழிற்பாடுகள் பற்றி கவனிக்கலாம்!

1. முகத்திற்கு ஒரு வசீகரத்தை தருவது பற்கள்தான்.
2. உணவு வகைகளை அரைத்து உண்பதற்கு பற்கள் மிக இன்றியமையாதன.
3. சொற்களை சரிவர உச்சரிப்பதற்கு பற்கள் மிக மிக அவசியமாகின்றன.
4. நிரந்தரப்பற்கள் (Permanent Teeth) சரிவர அமைய பாற்பற்கள்தான் வழிகாட்டிகளாக அமைகின்றன.

குழந்தைகளுக்கு பற்கள் முளைக்கத் தொடங்கியதும் பற்களைத் சுத்தமாக வைத்திருப்பது மிக முக்கியம். அதற்கு தினமும் பால் பருகியபின் சுட்டுவிரலில் ஒரு துப்பரவான துணியைச் சுற்றி அதனால் அழுத்தித் துடைத்து துப்பரவு செய்யலாம். பற்கள் சுமாராக வளர்ந்தபின் தினமும் காலையில் பல் துலக்கும் முறையை கற்றுக்கொடுப்பது மிக அவசியம். பற்தூரிகை பயன்படுத்துவது பிஞ்சுப் பற்களுக்கு நல்லதல்ல. எனினும் அதைப் பற்றி விளக்கிக் கூறி பற்பசையை மட்டும் பாவித்து அல்லது "புளோரைட்" மிகக் குறைந்தளவிலான பற்பசையை பார்த்து வாங்கிப் பாவிக்கலாம். பற்பசையை அலசித் துப்பாமல் விழுங்குவது ஆகாது. விழுங்குவதால் முளைக்கவுள்ள நிரந்தரப் பற்களுக்கு பாதிப்புக்களை உண்டாக்கும். பற்பசையில் "புளோரைட்" சேர்ந்துள்ளது பற் சொத்தை வராமல் பாதுகாப்பதற்கு மிக முக்கியம். இதனை குழந்தைகள் விழுங்கினால் இந்த தாதுப்பொருள் இரத்தோட்டத்தில் கலந்து உள்ளே உருவாகத் தொடங்கியிருக்கும் நிரந்தரப் பற்களில் வெள்ளைப் புள்ளிகளாகப் படியும். இதனை "புளோரோஸிஸ்" என்று கூறுவார்கள். ஆனால் இந்த புளோரைட் பற்களின் மேற்பரப்பில் உண்டாக்கும் பல்மிளிரி (எனாமல்) பற்கள் உறுதியாகி சொத்தை வருவதைக் குறைத்து வலுப்படுத்த உதவும். இக்காரணங்களால் ஏற்படுகின்ற சிறு பழுப்பு, புள்ளிகளுடன் கூடிய

பற்களுடன்தான் குழந்தைகள் எஞ்சிய காலத்தைக் கடத்த வேண்டியிருக்கும். பற்பசையை பாவித்தால் வாய் அலசிக் கொப்பளித்துத் துப்புவது மிக அவசியம். குழந்தைகளாயினும் சற்று கவனமெடுத்து பழக்கியாக வேண்டும். பற்கள் அழகாக அமையாது போனால் அங்க இலட்சணத்தில் முக்கியமானதோர் இழப்பென்பதை சம்பந்தப்பட்டவர்கள் முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும் கவனயீனமாக இருந்துவிட்டு வயதுவர கவலைப்பட்டு பிரயோசனமில்லை.

குழந்தைகள் பற்பசையை கூடிய அளவிலன்றி குறைந்தளவிலான குண்டுமணி அளவுதான் பாவிக்க அனுமதிக்க வேண்டும். தினமும் காலையும் மாலையும் பற்களைத் துலக்குவது வழமையாகக் கொண்டிருக்க குழந்தைகளை பழக்கப்படுத்திக் கொள்ளல் வேண்டும். குறிப்பாக இனிப்புப் பதார்த்தங்களை அதிகம் உட்கொள்ளாதவாறு பார்த்துக் கொண்டால் சொத்தைகளை தடுக்கலாம். பாலுக்குள் சீனி கலந்து குடிக்கக் கொடுக்கும் பழக்கத்தை முற்றாகத் தவிர்க்கலாம். பால்புட்டியை (போச்சி) குழந்தை பாவித்ததும் அதனை வாயிலிருந்து அகற்றி விடல் வேண்டும். இனிப்பு, பால் இரண்டும் பருகியதும் இயன்றளவு பற்களைத் துடைத்து சுத்தமான நீரைப் பருகக் கொடுக்கலாம். பற்கள் சொத்தை ஆவதைத் தடுக்க பெற்றோர்கள்தான் மிகக் கவனமாக தொழிற்படல் வேண்டும்.

குழந்தைகள் பல்வலி ஏற்பட்டு டாக்டரிடம் வருவதற்குக் காரணம் பெற்றோர்கள்தான். என்னிடம் வரும் பெற்றோர் சிலர் இது பாற்பற்கள்தானே எடுத்து விடுங்கள், இடுங்கிவிடுங்கள் என்று அலட்சியமாகக் கூறுவார்கள். விழுவதற்கு முன்னர் அவற்றை எடுத்து விடுவது நிரந்தரப் பற்கள் முளைக்கும் வரை ஓட்டையாக இருக்கப்போவது ஒருபுறம், நிரந்தரப் பற்கள் முளைக்க இடையூறாகவும் அமைந்து விடலாம். தவிர்க்க முடியாத சில காரணங்களிற்காக பற்களை எடுத்து விட நேர்ந்தாலன்றி பற்களை பிடுங்க வேண்டிய நிலை வராதவாறு கவனித்துக் கொண்டால் மிக நல்லது.

பிள்ளைகட்கு மூன்று வயது வந்ததும் பல் வைத்தியரிடம் கூட்டிச் சென்று பற்களை சுத்தம் செய்து சீர் பார்த்து சொத்தையாயிருப்பின் அடைத்து விடுவது உத்தமம். தானாக விழமுன்பு பற்களை அகற்றுவது பிள்ளைகளின் தன்னம்பிக்கை குறைய வாய்ப்பிருக்கிறது. சொற்களை சரியாக உச்சரிக்க இயலாது திண்டாடுவார்கள். பல்வலி காரணமாக அகற்ற வேண்டி நேர்ந்தால் நிரந்தரப் பற்கள் சரியான நேரம் சரியான இடத்தில் முளைக்காது போகலாம். இப்பேற்பட்ட காரணங்களினாலும் குழந்தைகளின் பற்களுக்கு (Clip) கிளிப் போட்டு சீர்படுத்தி ஒழுங்காக்க வேண்டிய சிரமமும், செலவும் வந்து அமைகின்றன.

மற்றும் விரல்களைச் சூப்புவது, இதழ்களைக் (சொண்டுகள்) கடிப்பது, நாக்கை வெளியே எந்நேரமும் நீட்டுவது, சூப்பியை வாயில் வைத்தபடி தூங்குவது போன்ற பழக்கங்களை தவிர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இயலாதுவிடின் பல்வைத்தியரிடம் ஆலோசனை கேட்கலாம். இவற்றை முறையாகக் கவனிக்காத பட்சத்தில் நிரந்தரப் பற்களுக்கான ஒழுங்கு முறை பாதிக்க வாய்ப்பிருக்கிறது.


பற்தூரிகையால் சுத்தம் செய்யும்போது மேல்வாய்ப் பற்களை மேலிருந்து கீழும் கீழ்வாய்ப் பற்களை கீழிருந்து மேலுமாக கடிக்கும் பகுதியை முன் பின்னாயும் சுத்தம் செய்ய வேண்டும்.

குழந்தைகட்கு ஏற்ற விதத்தில் அதனைச் சொல்லிக் கொடுத்தால் அவர்கள் அதைப் பழக்கப்படுத்திக் கொள்வார்கள். இங்கெல்லாம் அதற்குப் பாட்டாகச் சொல்லிக் கொடுப்பதுண்டு. Up Like the flower (கீழ்ப்பற்கள்) Down Like The Rain (மேற்பற்கள்) Back and forth Like a Chew Chew Train. இதனைப் பாடிப் பாடியே பற்களைத் தீட்டுவார்கள்.


ஆறு வயதிலிருந்து பன்னிரண்டு வயதிற்குள் பாற்பற்கள் வீழ்ந்து நிரந்தரப் பற்கள் முளைக்கத் தொடங்கும். பாற்பற்கள் உள்ளபோதே சிலருக்கு நிரந்தரப் பற்கள் முளைக்கத் தொடங்கி விட்டால் விழாத பாற் பற்களை பல்வைத்தியர் மூலம் அகற்றிவிடல் வேண்டும். நன்றாக கடித்து, மென்று சாப்பிடப் பழக்கினால் தாடை விஸ்த்தரிக்கப்பட்டு உறுதிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். எல்லா வேளைகளிலும் மெதுமையான உணவுவகைகளை கொடுக்காது கடித்துச் சாப்பிட வேண்டிய உணவுகளையும் கொடுக்க வேண்டும். பாற்பற்கள் வீழ்கின்ற வேளைகளில் ஒவ்வொரு ஊர்களிலும் ஏன் ஒவ்வொரு நாடுகளிலும் வெவ்வேறு நடைமுறைகளைக் காண்கிறோம். எமதூரில் பல்லை பாம்புப் புற்றுக்குள் போட்டுவிட்டு கீரி.. கீரி.. என் பல்லை எடுத்துக் கொண்டு உன் பல்லைத் தா? என்று பாட்டுச் சொல்வதாக ஞாபகம்.. அயலூரில் கூரையில் எறிந்து விட்டு அணிலே அணிலே என் பல்லை எடுத்துக் கொண்டு உன் பல்லைத் தா? என்று கூறுவார்கள். தமிழகத்தில் சாணியில் உருட்டி கூரையில் எறிந்து விட்டு இந்தப் பல்லை எடுத்துக் கொண்டு முத்துப் பல்லைத் தா என்பார்களாம்.

மேற்கத்திய நாடுகளான இங்கெல்லாம் தலையணைக்குக் கீழ்வைத்து மறைத்துவிட்டு தேவதையை, பணம் தரும்படி கேட்கச் சொல்வார்கள். அதேவேளை பல்வைத்திருந்த கவருக்குள் பெற்றோர் பல்லை எடுத்துவிட்டு பதிலாக பணம் வைத்து விடுவார்கள். தேவதைதான் பணம் வைத்தது என்று நம்பி குழந்தைகளும் ஆச்சரியமாகவும் குதூகலமாகவும் ஓடிவிளையாடும் அளவிற்கு பயப் பீதியிலிருந்து வழமைக்குத் திரும்பி விடுவார்கள். இப்படியாகப் குழந்தைகள் பாற்பற்களை இழக்கும்போது இனி முளைக்காவிட்டால் என்ற பீதியைப் போக்கி நம்பிக்கை ஏற்படும் படி செய்வதற்காகவே இப்படிச் செய்கிறார்கள். எவை எவ்வாறு இருப்பினும் நம் ஊரில் குழந்தையில் முதற் பல்லைக் கண்டதும் பல்லுக் கொழுக்கட்டைகள் அவித்துக் குழந்தைகள் மீது கொட்டினால் நல்ல அழகான பற்கள் முளைக்கும் என்பது ஐதீகம். இந்த வழக்கம் ஒரு வைபவமாக கொண்டாடுவது இன்றும் நிகழ்ந்து வருகிறது.

பன்னிரண்டு வயதுக்குள் பாற்பற்கள் வீழ்ந்து மீள முளைத்தாலும் பாற்பற்கள் இருபதும் போக பன்னிரண்டு பற்கள் முளைத்தால் வீழ்வதில்லை. அதுவும் பலருக்கு கொதி, வலி ஏற்பட்டுத்தான் கொடுப்புப் பற்கள் முளைக்கும் அவ்வேளைகளில் பல்வைத்தியரிடம் சென்று நிரந்தரமான பற்கள் (32) சிலவேளைகளில் இரு பற்கள் ஒன்றாக ஒரேயிடத்தில் முளைத்தால் இவைகளை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்பதை அறிந்து அதற்கேற்றவாறு நடந்து கொண்டால் பற்பிரச்சினைகள் வராமல் ஓரளவிற்கு தவிர்க்கலாம். அழகான பற்களோடு முகம் மலர்ந்த புன்னகையுடன் மக்களின் முன்பாக கம்பீரமாக செயற்படலாம். "முகத்திற்குப் பல்லழகு மொத்தத்தில் முகம்அழகு" என்று கூறி, குழந்தைகளோ பெரியவர்களோ வருடம் ஒரு தடவையாவது பல்வைத்தியரிடம் சென்று பரிசோதித்துக் கொள்வது மிகவும் அவசியம் என்றும் கூறி நிறைவு செய்கிறேன்.



செல்வன் தே. விதுஷன்
யா/ஹாட்லிக்கல்லூரி



# அந்த மண்ணும் இந்த வாழ்வும்

தோழமையுடன்,
கார்த்திகேசு
தர்மலிங்கம்,
ரொறன்ரோ, கனடா.

புலம் பெயர்தல் என்பது தமிழர்களுக்கு மட்டும் புதியதொன்றல்ல. உலகின் பல்வேறு நாடுகளிலும் வரலாற்று ரீதியில் ஏற்பட்டு வருகின்றது. சொந்த நாட்டினைவிட்டு அன்னிய நாட்டில் குடியேறும் வண்ணம் அழுத்தம் கொடுக்கும் பலம் வாய்ந்த ஒரு காரணமின்றி எவரும் சொந்தநாட்டை விட்டுவிட வெளியேற மாட்டார்கள். இயற்கையழிவு, போர்கள், வன்செயல்கள், வன்கொடுமைகள், பொருளாதாரம் பொன்ற காரணங்களாலேயே புலம்பெயர்தல் இடம்பெறுகின்றது. யுத்தம் காரணமாக ஏற்படுகின்ற பயமே இதில் முன்னிலை பெறுகின்றது. ஈழத்தமிழர்கள் போர்ச் சூழல் காரணமாகவே தாயகத்தை விட்டு வெளியேறினர். ஈழத்தினைப் பல கூறுகளாக்கித் தரணியெங்கும் விட்டெறிந்தது போன்று மேலை நாடுகளில் பல தமிழர்கள் வாழ்விடங்கள் புதிதாக உருவாகி வருகின்றன. சுமார் பத்து லட்சத்துக்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய மண்ணில் தற்போது மூன்று லட்சத்துக்கும் மேலாக எம்மவர்கள் வசிக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுவரும் சமூக உளவியல் மாறுதல் போன்று கனடாவிலும் அதன் தாக்கத்தை அவதானிக்க முடிகின்றது. வயது வேறுபாடுகள், தொழில் வேறுபாடுகள், கல்வித்தரவேறுபாடுகள், பால் வேறுபாடுகள் போன்றவற்றின் கூறுகளும் சமூக விழுமியங்களும் சங்கமமாகி புதிய வடிவங்களில் வாழ்வியலும் மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றன. பாதுகாப்பாக வாழ்வதற்கு ஓர் இடம் வேண்டுமென்ற நிலைப்பாட்டில் நாம் இங்கு வந்து குடியேறினாலும், பல்வேறு சம்பவங்கள் மனதினை அரித்து வருகின்றன. எமது மக்களின் வாழ்வினை சமூக உளவியல் ரீதியில் நோக்கும்போது வெவ்வேறு அம்சங்களின் கீழ் அவதானிக்க முடியும். அவை இரட்டைக்கலாச்சார உணர்வு, மொழி கற்பதில் இடர்பாடு, காலநிலை மாறுதல்கள், தொழிலால் ஏற்படும் சிக்கல்கள், நாட்டின் சட்டத்திட்டங்களும் உறவுமுறை விரிசல்களும், உளக்கோளாறுகளும் ஆகும். இவை ஒவ்வொருவருக்கும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.

இரட்டைக் கலாச்சார உணர்வு என்னும்போது இன்று தமிழர்களிடையே இடம்பெற்றுள்ள மன உணர்வாக இதைக் கருதமுடியும். பிறந்தநாடு ஈழம் எனினும், புகுந்தநாடு கனடா என்ற வகையில் தீர்மானம் எடுக்க முடியாத கலாச்சார நெருக்கடியில் , எம்மவர்கள் வாழ்ந்து வருகின்றனர். கீழைத்தேய உணர்வும், மேலைத்தேய உணர்வும் கலந்த நிலையில், இங்கு நடைபெறும் விழாக்களும் சடங்குகளும் பலவீனத் தன்மைக்கு உட்பட்டு வருவது தவிர்க்க முடியாதுள்ளது. குறிப்பாக திருமணங்கள் கூட அந்தணர் முன் நிலையில் மதரீதியாக நடத்தப்பட்டுச் சில மணி நேரங்களில் "வைன்" நடனமாக மாற்றம் பெறுவதை காணக்கூடியதாக உள்ளது. மேலை நாட்டு முறையில் எழுந்த நாகரீக அம்சங்கள் எம்மிடையேயும் ஊடுருவியுள்ள நிலையில் இது தவிர்க்க முடியாதெனினும், சுயத்துவம் இழக்கும் பலவீனங்களும் தெளிவாகி வருகின்றன. படிப்படியாக தமிழர் மரபுகள் பல இறந்து விடுமோ என்ற அச்சமும் ஏற்படுகின்றது .

பெண்களின் நடையுடை பாவனைகளில் மாற்றம் தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிலையில் அவர்களின் குணாதிசயங்கள், செயல்கள் என்பவையும் மாறக்கூடிய சூழ்நிலைகளும் உண்டு. தனித்துவத்தின் இழப்பு தமிழர்களுக்கும் பொதுவாகி வருகின்றமையும் புலனாகின்றது. தமிழ்ப்பெண்கள் திருமணச்சடங்குகள், எம்மவரின் ஏனைய விழாக்கள், கோவில் போன்ற இடங்களுக்குச் செல்லும்போது சேலைகட்டி, பொட்டுவைத்து, பூமுடித்து, தங்க ஆபரணங்கள் அணிந்து எமது கலாசாரத்துடன் அலங்காரமாகச் செல்வதும், வேலைக்கு செல்லும்போதும், மற்றைய இனத்தவர்களின் கொண்டாட்டங்களில் பங்கெடுக்கும் போதும் மேலைத்தேய கலாச்சாரத்தைப் பேணும் பெண்ணாகவும் சென்று வரவேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் வாழ்கின்றார்கள். அத்துடன் காலையில் உணவு தயாரிப்பதிலிருந்து, குழந்தைகளை ஒழுங்குபடுத்தி சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் விட்டு விட்டு சுமையான மனத்துடன் சென்ற வேலையும் பார்த்து, வீட்டையும் பார்த்து, அலுத்து களைத்து வரும் எத்தனையோ பெண்களின் சோகத்தை யாரிடம் கூட முடியும்.

பாடசாலைகளில் கல்வி கற்கின்ற பிள்ளைகளின் மத்தியிலும் இரட்டைக்லாசாரத் தன்மை பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. பாடசாலைகளில் மேலைத்தேய நாகரீகமும், வீடுகளில் கீழைத்தேய நாகரிகமும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. கட்டுப்பாடற்ற பாலியல் தொடர்பு முறையுள்ள பல்கலாசார சமுதாய அமைப்பில் எமது பிள்ளைகள் தவறிவிடுவார்களோ என்ற பயம் பெற்றோர்களுக்கு ஏற்படவே செய்கிறது. சந்திப்பு உறவுமுறை (Dating) எமக்குப் புதியதொன்று. இவற்றையெல்லாம் அன்றாடம் சந்திக்கும் எமது பிள்ளைகள் அவை சரியானவை என்று பெற்றோர்களுடன் வாதிடுவதை அவதானிக்க முடிகின்றது. சமூக உளவியல் மாறுதல்களில் காலநிலையும், உடைகளும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. காலநிலை காரணமாக அடிக்கடி உடையினை மாற்றும் தேவை ஏற்படுகின்றது. தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துதலும், நீக்குதலும் தொலைபேசி மூலமே இடம்பெறும் இந்நாட்டில் நிச்சயமற்ற பல்வேறு அம்சங்களில் தொழில் வாய்ப்பும் ஒன்றாகும். குறிப்பிட்ட துறைகளில் படிப்பும் அனுபவமும் கொண்டவர்களை மட்டுமே தேடி அலையும் முதலாளித்துவ நிறுவனங்கள், இத்திறமை உள்ளவர்களை மட்டுமே பணிக்கு நியமிக்கின்றார்கள்.

எத் தொழிலையும் சுலபமாக வழங்கிவிட மாட்டார்கள். வெறும் பட்டப் படிப்புகளில் மட்டும் தேர்ச்சி பெற்று தாயகத்தில் வேலை செய்த பலர் இங்கு வேலை பெறுவதில் மிகுந்த சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். இடைத்தர வயது, மொழித் தேர்ச்சியின்மை காரணமாக கிடைத்த வேலைகளைக் காப்பாற்ற முடியாத காரணத்தால் எழுகின்ற மனப் பாதிப்புக்களால், இந்நாட்டை வெறுத்தும், தொழிலை வெறுத்தும் விரக்தியோடு மக்கள் வாழ்வதை அவதானிக்க முடிகின்றது. உறைகுளிரிலும் கொட்டும் பனியிலும் (Snow) உடலை உருக்கி உழைக்கும் நம்மவரை அன்றாடம் பார்க்கக் கூடியதாக உள்ளது. வார விடுமுறையில்தான் பார்க்க முடிகிறது இயந்திரமில்லா மனிதர்களை. இங்கு வாழும் மனிதர்கள் பூசிக்கொள்ளும் சென்றில் வேண்டுமானாலும் வாசனை இருக்கலாம் ஆனால் வாழ்க்கையில் இல்லை.

கனடாவில் பெரும்பாலானோர் குறைந்த அடிப்படைச் சம்பளத்துக்கே வேலை செய்கின்றனர். அத்தகைய குடும்பங்களில் கணவர் மாத்திரம் வேலைக்குச் சென்று உழைக்கும் பணம் வீட்டு வாடகை அல்லது வீட்டுக்கடன் (Mortgage), பாவனைக் கட்டணங்கள், கடன் அட்டைக் கொடுப்பனவு, வாகனக்கடன், பிள்ளைகளின் படிப்பு மேலும், உணவுத் தேவைக்குமாக போதுமானதாக இருப்பதில்லை, அதனால் பெண்களும் முழுநேரமாக வேலை செய்ய வேண்டிய ஓர் சூழலில் வாழ்கின்றனர். வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிப்பதற்காக பலர் தொழிற்சாலைகளில் இயந்திரங்களுடன் இயந்திரமாக பகலில் எட்டுமணி நேரம் வேலை செய்துவிட்டு இரவில் பகுதி நேர வேலையாக உணவகங்களிலும் வேலை செய்கின்றனர். சில பெண்கள் கூட பத்துப் பன்னிரண்டு மணி நேர வேலை செய்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இங்கு குடியேறியோரில் பலர் நடுத்தர வயதுடையவர்களாவர். இவர்கள் தாயகத்தில் பொறியியல் , மருத்துவம், சட்டம், கணிதவியல் போன்ற துறைகளில் படித்துப் பட்டம் பெற்றவர்கள், அல்லது அத்துறையில் பணிபுரிந்தவர்கள், அவர்கள் இங்குள்ள பல்கலைக் கழகங்களிலும் பட்டப்படிப்பை முடித்து, இங்கு மீண்டும் அதே தொழிலை சிறப்பாக செய்கின்றனர். மேலும், பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாகவும், பேராசிரியர்களாகவும், விஞ்ஞானத்துறை ஆராய்ச்சியாளர்களாகவும் வேறு பலதுறைகளிலும் பயிற்சி பெற்று திறமையுடன் செயலாற்றி வருகின்றனர். இதனால் ஈழத்தமிழர் சென்ற இடமெல்லாம் சிறப்பும், புகழும் பெறுகின்றனர்.

அறிவுப் பெருக்கம் மக்களை நல்வழிப்படுத்தி சமதானமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வழிகாட்டாமல் போட்டியும், பொறாமையும் ஊட்டுகிறதே என்று பார்க்கும் பொழுது எவ்வளவு வேதனையாயிருக்கிறது. இங்கு வாழும் பெரும்பாலான பெற்றோர் தற்போது ஒரு குழப்பமான நிலையில் வாழ்கின்றனர். திருமண வயதை எட்டியுள்ள பிள்ளைகளின் காதல் திருமணங்களால், கலப்புத் திருமணங்கள் (வேற்று நாட்டவரை மணப்பது) திருமணம் செய்யாது சேர்ந்து வாழ்தல் (Living Together) போன்றவற்றால் பல இளையோர்கள் மிகவும் குழம்பிப்போய் உள்ளனர். கீழைத்தேய பெற்றோருக்கும் , மேலைத்தேச நண்பர்களுக்கும் இடையில் சிக்கி பெரிதும் பரிதாபத்துக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக கலாசார, பண்பாட்டு விடயங்கள் வினோதமானவையாகவும், வேடிக்கையானவையாகவும் உள்ளன. அவர்களுக்கு புரிவதும், புரியவைப்பதும் மிகவும் கடினமாகவே உள்ளது. ஆழமான சிந்தனைகள் உட்செலுத்தாது, வெளிப்புற வாழ்வினை மட்டுமே நாடுவார்களெனின் அவர்களது வேர்களையே இழந்து விடக்கூடும், புரிதல் அற்றதொரு வாழ்வே மிஞ்சும்.

வாழ்வின் வளைவும், நெளிவும் பொதுவானதொன்றாக இருப்பினும், புலத்தில் எங்கள் வாழ்வுக்கும், புலம் பெயர்ந்த மண்ணில் எங்கள் வாழ்விற்கும் இடையே பெரிய இடைவெளி உண்டு. இரண்டு இடத்தின் வாழ்க்கை முறையினையும் ஒப்பிட்டு நோக்கும் போது பல வசதிகளையும் புலத்தில் வைத்திருந்தாலும், புலம் பெயர்ந்த மண்ணில் கூட வித்தியாசமான மேலும் பல வசதிகளை அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது. உற்று நோக்குகையில் இரண்டு வெவ்வேறு வழிகளில் நன்மையினை அல்லது மகிழ்வினைத் தருவதாக அமைகின்றது. தாயகத்தில் வாழ்க்கை கூட்டு குடும்பமுறையில் அமைந்திருந்ததால் இளம் குடும்பங்களில் அம்மா, அப்பா, மாமா, மாமி, மச்சாள், மச்சான் என மற்றயோரின் குறுக்கீடுகள் நிறையவே காணப்பட்டது. இதில் கூட்டுக் குடும்பம் காரணமாக பிளவுற்ற மணவாழ்க்கை ஒன்று இரண்டு இருந்தாலும், பெரும்பான்மையாக பிளவுகள் தவிர்க்கப்பட்டது. கருத்து வேறுபாடுகள் மனக்கசப்புக்களை விழுங்கிக் கொண்டுபோகையில் நாளடைவில் அவை மறைந்து போய்விடும்.

அதேபோல் முதியவர்களும் பிள்ளைகளின் ஆதரவில் வாழப் பழக்கிக்கொண்டது மாத்திரமின்றி பிள்ளைகளுக்கு கட்டாயம் பெற்றோரை நாம் கவனிக்க வேண்டும் என்ற மனப்பாங்கு இருந்தது. பிள்ளைகள் விடும் பிழைகள் பெற்றோராலும், பெற்றோர் விடும் பிழைகள் பிள்ளைகளாலும் அனுசரித்து நடந்தமையால், அவர்களிடையே ஓர் ஆரோக்கியமான உறவு தொடர்ந்து சந்தோசம் நிலைத்தது. அத்துடன் பிள்ளைகள் பெரியோரை மதித்து நடக்கின்ற பண்பு மேலோங்கியிருந்தது. ஆனால் புலம் பெயர்ந்த மண்ணில் குடும்பங்களிடையில் கருத்து வேறுபாடு சண்டை சச்சரவுகள், ஏற்படும்போது தாய், தந்தையர் அல்லது உறவினர் தலையிட்டு சமரசம் செய்ய முனைவதால் சில மண முறிவுகள் கூட ஏற்பட்டிருக்கின்றன. பெரியோரின் தலையீட்டினால் மட்டும் மணமுறிவுகள் ஏற்பட்டது என்று கூற முடியாது. வேறு பல காரணங்களுக்காகவும் இவை நடைபெறுகின்றன. பொதுவாகப் பார்த்தால் தாங்களாகவே குடியேறிய முதியோரைவிட பிள்ளைகளால் கூப்பிடப்பட்ட முதியோர்கள் அதிகம் இருக்கின்றார்கள். தாயகத்தில் அவர்கள் தங்களுக்கென்று பணம் வைத்திருப்பது அல்லது வருமானத்தைக் கொண்டிருப்பதாயின் அவர்களுக்குரிய ஒரேவழி ஓய்வூதியப் பணம்தான். அவ்வாறு ஓய்வூதியப் பணம் இல்லாதவர்கள் பிள்ளைகளைச் சார்ந்துதான் வாழவேண்டும்.

கனடாவில் வசிக்கின்ற முதியோர்களுக்கு வேலை செய்தார்களோ, செய்யவில்லையொ கனடாவில் பத்து வருடம் வசித்திருப்பின் அவர்களுக்கு அறுபத்தைந்து வயதை அடையும்போது ஓய்வூதியம் கிடைக்கின்றது. இதனால் பொருளாதாரத்தில் பிள்ளைகளைச் சார்ந்திருக்க வேண்டிய தேவையில்லை என்றே சொல்லலாம். இருப்பினும் சில வயதானவர்கள் பிள்ளைகளைச் சார்ந்தே இருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். தங்களுக்கு வரும் ஓய்வூதியத்தை கையால் தொட்டுக்கூட பார்க்க முடியாத நிலையில் இருக்கின்றனர். இவர்களுக்கு வரும் ஓய்வூதியத்தை பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டு, பேரப்பிள்ளைகளைப் பராமரிப்பது வீட்டில் சமையல் போன்றவற்றைச் செய்து கொண்டு இருக்கின்றார்கள். பிள்ளைகள் எங்காவது அழைத்துச் சென்றால்தான் இவர்களால் வெளியே செல்லமுடியும்.

சில பெற்றோருக்கு அவர்கள் செய்யும் வேலைக்கான ஊக்குவிப்புக்கூடக் கிடைப்பதில்லை. அதற்குப் பதிலாக வீட்டைக் குப்பையாக்கி விட்டாய், குழியல் அறையை

அசுத்தப்படுத்திவிட்டாய், சோபாவில் படுத்திருக்கின்றாய் என்று பலவிதமான குறைபாடுகள் சொல்லி ஏச்சும் விழுவதுண்டு. அத்துடன், பேரப்பிள்ளைகளின் கிண்டல், கேலிப் பேச்சுக்களுக்கும் ஆளாவதுண்டு. சில குடும்பங்களில் பேரப்பிள்ளைகள் தமிழ் பேசமாட்டார்கள். அதனால் வயதானவர்கள் அவர்களுடன் உரையாடுவது கூட இல்லை. கலை, கலாச்சாரப் பண்பாடும், கல்வி அறிவும் ஏனைய துறைகளில் திறமையும் மிக்க ஓர் சமூகத்தின் தோன்றலான எம் மக்கள், கல்வி அறிவும் ஏனைய துறைகளில் திறமையும் மிக்க ஓர் சமூகத்தின் தோன்றலான எம் மக்கள், நவீன வசதிகளும் வாய்ப்புக்களும் மிக்க ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டு ஏன் சொந்த தாய், தந்தையரை ஓர் அடிமைகளைப் போல் வீட்டில் நடத்துகின்றார்கள் என்பதை எண்ணும்போது மிகவும் வேதனையாக உள்ளது.

ஆரம்பத்தில் முதியோர் இல்லங்களில் அல்லது தனியாகத் தங்கி உள்ள பெற்றோரைப் பற்றி கொஞ்சம் குறைவான மதிப்பீடுதான் பெரும்பான்மையோர் மத்தியில் காணப்பட்டது. பிள்ளைகள் பார்க்கவில்லை அதனால்தான் முதியோர் இல்லங்களில் தங்கியுள்ளார்கள் என நினைத்ததுண்டு. அவர்களுக்கு தனியே இருக்க சுதந்திரமிருக்கின்றது. நினைத்த இடத்திற்கு போகவர முடிகின்றது. விரும்பியதைச் செய்ய முடிகின்றது என்பதனை கருத்தில் கொள்ள மறந்து விட்டோம். ஆனால் முதியோர் இல்லங்களில் வாழும் பெற்றோர் மிகவும் ஆரோக்கியமான வாழ்வு வாழ்வது அவர்களுடன் பழகினால் மட்டும் தெரிந்துகொள்ள முடியும். விடுமுறை நாட்களில் பிள்ளைகள் வந்து அழைத்து செல்வது, அல்லது பிள்ளைகள் குடும்பத்துடன் வந்து பார்த்துவிட்டு செல்வது, விருப்பமான பொருட்களை கொண்டுபோய்க் கொடுப்பது போன்ற ஆரோக்கியமான செயற்பாடுகளினால் பிள்ளைகளுக்கு பெற்றோர் சுமையாகத் தெரிவதில்லை. பெற்றோர்க்கும் சுதந்திரமாக செயல்பட சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இந்த ஆரோக்கியமான மகிழ்ச்சியான வாழ்வு எல்லா முதியோருக்கும் கிடைக்க வேண்டும்.

கல்வியே வாழ்வாக அமைந்த பண்பாட்டின் வாரிசுகள் நாம் தமிழரது பண்பாடு, வாழ்வு, சமுதாய உணர்வும் கல்வியின் வழியாகவே அமையப் பெற்றது. நாங்கள் அவாவி நிற்கும் மேன்மைகளுக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கல்வியே ஆதாரமானது. ஆனாலும் எம்மை சூழ்ந்த இடர்கள், துயரங்கள் புறச்சூழல் காரணமாக தாயகத்தில் பல சிரமங்களுக்கு மத்தியிலும் கல்வியை தமது உயிர் மூச்சாக எண்ணி வாழுகின்ற சமூகத்தின் வழித்தோன்றல்கள் கனடாவிலும் தமது விடாமுயற்சியாலும், கடின உழைப்பாலும் மிகமிக மேம்பாடான நிலையில் முன்னேறி வருவதை இங்கு நாம் அனைவரும் அவதானிக்க முடிகிறது. எல்லாத் துறைகளிலும், முன்னேறி கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் மிகச் சிறந்த பலவசதிகளும், வாய்ப்புக்களும் காத்திருக்கின்றன. பல மொழியினராலும் எட்டமுடியாத உயரத்தை எட்டி சிகரத்தின் உச்சியில் கால் பதித்துள்ள எம் இளைய சமூகத்தின் வளர்ச்சி எமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியே.

கனடாவில் ஈழத்தமிழர்கள் நிரந்தரமாக வசிக்கத்தொடங்கி சுமார் முப்பது வருடங்கள் ஆகின்றன. ஒப்பீட்டு ரீதியாகப் பார்க்கும்போது இங்கு குடியேறிய மற்றைய சமூகங்களைவிட எமது சமூகத்தின் வளர்ச்சி அளப்பரியது. கல்வி, பொருளாதாரம், அரசியல், கலை கலாச்சாரம், சமயம், இலக்கியம் போன்ற அனைத்துத் துறைகளும் சிறப்பாக முன்னேற்றம் அடைந்துள்ளனர். தமிழ் அடையாளச் சிந்தனையில் ஆணிவேராக பல தமிழ் சிந்தனையாளர்கள், இங்கு தமிழ் வளர்சசியில் முன்னோடியாக தம்மை முழுமையாக ஈடுபடுத்தி உழைத்து வருகின்றனர்.

புகலிடத்திலும் கல்விமான்கள் பலர் தமிழர் மரபுசார்ந்த விடயங்களிலும், கலை, இலக்கியம், நாடகம்,நாட்டியம், கர்நாடக, மேலைத்தேய, கீழைத்தேய சங்கீதங்கள் போன்ற பல துறைகளைத் தக்கவைக்கவும் , அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டவும் விடாமுயற்சி செய்து வருவது பெரிதும் பாராட்டுக்குரியது.

மனித நேயமும், சாதி, மத, மொழி, நிற, ஏழை, பணக்கார வேறுபாடில்லாது, சமாதானத்தையும், ஒற்றுமையையும், அமைதியையும், பேணிப் பாதுகாப்பதில் முதன்மையாகத் திகழும் நாடாகவும், குடிவரவாளர்களுக்கு சகல விதமான உதவிகளும் நல்கி அரவணைப்பதில் உலகிலேயே முதன்மையான நாடாக விளங்குவது கனடா என்றால் மிகையல்ல. தாயகத்தில் சுதந்திரத்தின் சுகத்தை சுவாசிக்க முடியாது துவண்டு போன உள்ளங்களுக்கு இங்கு கிடைத்த சுதந்திரமான வாழ்வு தென்றலாக வருடுவதை யாரும் மறக்க முடியாது. நம் மண்ணில் கிடைக்காத வாழ்வும், வளமும், வாய்ப்புக்களும் எம்மவர் மத்தியில் பெரும் மன மகிழ்வினை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

இங்கு பலர் சொந்தமாக தொழில் நிறுவனங்களை நடத்தி பலருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கி வருகின்றனர். உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், எரிபொருள் விற்பனை நிலையங்கள், மோட்டார் வாகன விற்பனை , திருத்தல் நிலையங்கள் போன்ற பல நிறுவனங்களின் உரிமையாளர்களாக இருக்கின்றனர். சமயபேதம் , சமூகபேதம், அரசியல் வேறுபாடு, பிராந்திய வேறுபாடுகளுக்கு அப்பால் வாழ்ந்துவருவது ஈழத்தமிழரது சிறப்பியல் புகளில் முக்கியமானது. தமிழரது அடையாளங்கள் உணர்வுபூர்வமாக பேணப்படுகின்றது. பழைய பாரம்பரியம் குறைவாக இருந்தாலும், பரிமானம் சிறிதாய் இருந்தாலும் புதிய விழிப்புணர்வுக்கு வித்திட்டு சந்தர்ப்பத்தை சாதகமாக்கி ஆரோக்கியமான ஓர் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற பேரவாவுடன் வாழும் எம் தமிழ் இனத்தின் விழுதுகளும் தமிழும், தமிழ்மொழி, தமிழ் கலாச்சாரம், தமிழ்ப்பண்பாடுகள் யாவும் சிறப்பாக வாழ வேண்டும் என்பதே எமது எல்லோரது அன்பான பிரார்த்தனையாகும்.

சுபம்.









# தும்பளையின் பொற்குவியல்

நா. சிவபாலன்
வரத விநாயகர் கோவிலடி,
தும்பளை

## புகழோ அழகோ வேண்டாம்

உலகம் வியக்கும் புகழோ, அரசனின் பதவியோ,பொற்குவியலோ,மன்மதனின் பேரழகோ வேண்டாம் என்று சொல்லக் கூடியவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்களா? ஆம்! சிலர் இருக்கிறார்கள்தான். இந்தத் தும்பளைக் கிராமத்திலேயே வாழ்ந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் வேண்டாம் என்று அழகு தமிழ்க் கவிதையில் சொல்லியிருக்கிறார்கள்.

பொன்னின் குவையெனக்கு வேண்டிய தில்லை - என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டிய தில்லை;
மன்னன் முடியெனக்கு வேண்டிய தில்லை - அந்த
மாரன் அழகெனக்கு வேண்டிய தில்லை.

இவற்றையெல்லாம் வேண்டாம் என்று சொல்பவர் வாழத் தெரிந்தவர் போலத் தெரியவில்லைத்தான். ஆனால் இன்பத் தேன் வந்து பாயும் செந்தமிழ்க் கவிதையில் அல்லவா சொல்லியிருக்கிறார். எனவே ஏதோ விடயம் தெரிந்தவராகத்தான் இருக்கவேண்டும். அவருக்கு என்னதான் தேவைப்படுகிறது என்று பார்ப்போம்.

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா - உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமே யடா;
தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா - தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா.

அடேயப்பா! மெய் சிலிர்க்கிறதே! என்ன ஆசை தமிழில்! கம்பன் தமிழை அனுபவித்து விட்டு செத்துக் கிடக்கவேண்டுமாமே! அப்படி என்னதான் இருக்கிறது அந்தக் கம்பன் தமிழில்? ஒன்றிரண்டைப் பார்ப்போமா?

## கம்பன் தமிழ்



சீதையை இலங்கையில் கண்டபின் திரும்பி வருகிறான் அனுமன். செய்தி ஏதும் கிடைக்காதா என்று பார்த்துக் கொண்டிருந்த இராமனிடம் சீதை உயிருடன் இருப்பதையும் கற்புக்கரசியாக, தன் உயர்ந்த குடிப் பிறப்பின் நிலை தவறாதவளாக இருப்பதையும் எவ்வளவு அழகாக அனுமன் மூலமாக கம்பன் சித்தரிக்கிறான் என்று பாருங்கள்.

விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற்பிறப்பு என்பதொன்றும், இரும்பொறை என்ப தொன்றும்,
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்

"பெரும் வில் ஏந்திய பலம் வாய்ந்த தோளுக்குரிய வீரனே! நீர்ப் பரப்பினால் சூழப்பட்ட இலங்கையின் மலைகளுக்கு நடுவே வெறுமனே (உன்னிடம் வர) தவம் செய்து கொண்டிருக்கும் ஒரு பெண்ணைத்தான் கண்டேன் என்று கூறமுடியாது. உயர்ந்த குடிப்பிறப்பு என்ற ஒன்றும், தனது இறுதி இலட்சியத்தில் தெளிவுடன் இருக்கும் அசைக்க முடியாத பொறுமை என்ற குணமும், கற்பு என்பதன் இலக்கணமும் ஒன்று சேர்ந்து ஆனந்த நடனம் புரிவதைத்தான் கண்டேன்" என்று அனுமன் கூறுகிறான்.

சீதை பெரும் சோதனைக்கு நடுவில் மிகுந்த சோகத்துடன்தான் இருக்கிறாள். அந்த நிலையிலும் அவளது உயர்ந்த குணங்கள் தெளிவாகத் தெரிகின்றன. உயர்ந்த குணங்கள் அவற்றிற்கு உரியவருக்கு ஒரு பொலிவைக் கொடுக்கிறதல்லவா? உயர்ந்த குணங்களைக் கண்டவுடன் எங்களை அறியாமலேயே எங்களுக்கு ஒரு மகிழ்ச்சி பிறக்கிறதல்லவா? அந்த உற்சாகத்தில்தான் அனுமன் 'சீதையிடம் இந்தக் குணங்கள் ஆனந்த நடனம் புரிவதைக் கண்டேன்' என்று கூறுகிறான்.

சீதையின் பெருமைபற்றிப் பேச அனுமனுக்கு இன்னும் பல விடயங்கள் இருக்கின்றன. "அண்ணலே! நீ எந்தளவு உயர்ந்தவன்! உனது மனைவி என்ற பெயருக்கும், மங்காப் புகழ் பெற்ற தசரதச் சக்கரவர்த்தியின் மருமகள் என்ற பெருமைக்கும், ராஜரிஷியான ஜனகனின் மகள் என்ற மதிப்புக்கும் எடுத்துக் காட்டாகவே சீதை இன்னும் இருக்கிறாள். அத்தோடு இன்னொன்று இப்போது அந்தச் சீதை எனக்குத் தெயவமாகவும் ஆகி விட்டாள்."

உன்பெரும் தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும் மாண்புக்கும், மிதிலை மன்னன்
தன்பெரும் தனயை என்னும் தகைமைக்கும், தலைமை சான்றாள்
என்பெரும் தெய்வம் ஐயா! இன்னமும் கேட்டி என்பான்

## காந்தக் கருவிழிகளின் கவர்ச்சி

எழுத்தாளர் கல்கியின் 'பார்த்திபன் கனவு' என்னும் சரித்திர நாவலில் சோழ இளவரசன் விக்கிரமனை பல்லவ சக்கரவர்த்தி நாடு கடத்தி விடுவார், திரும்பி வந்தால் மரண தண்டனை என்ற தீர்ப்புடன். எல்லாமறிந்த ஒரு சிவனடியாருக்கு இளவரசன் எப்படியும் திரும்பி வருவான் என்று தெரியும். காரணத்தை இளவரசனின் தாயார் அருள்மொழி கேட்கிறாள். சிவனடியார் கூறுகிறார்:



"....அருள்மொழி! என்றைக்காவது ஒரு நாள் அவன் வந்துதான் தீருவான். தாயின் பாசமும் தாய்நாட்டின் பாசமும் அவனைக் கவர்ந்து இழுக்கும். ....தாயின் அன்பையும் தாய்நாட்டுப் பற்றையுங் காட்டிலும் பெரியதொரு சக்தியும் அவனைத் திரும்பவும் இத்தேசத்துக்கு வரும்படி இழுக்கும். அது ஒரு இளம் பெண்ணின் கருவிழிகளிலுள்ள காந்த சக்திதான்...."

ஆனால் அத்தகைய அழகிய இளம் பெண்களின் இதழ்சிந்தும் தேனில் கூட தனக்கு நாட்டமில்லை என்றுதான் இந்தக் கவிஞர் சொல்கிறார்.

உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை - ஒரு
உற்றார் உறவினரும் வேண்டிய தில்லை;
மண்ணில் ஒருபிடியும் வேண்டியதில்லை - இள
மாதர் இதழமுதும் வேண்டியதில்லை.

இதெல்லாம் வேண்டாம் என்று சொல்ல புத்தனைப் போன்ற ஒரு முழுத்துறவியால்தான் முடியும். ஆனால் இவர் துறவியல்ல. எதைத் துறந்தாலும் நெஞ்சை அள்ளும் தமிழைத் துறக்க முடியாதவர். வயிற்றுப் பசிக்கு ஒரு பாட்டே போதுமாம் இவருக்கு.

பாட்டில் ஒருவரியைத் தின்று களிப்பேன் - உயிர்
பாயு மிடங்களிலே தன்னை மறப்பேன்;
காட்டில் இலக்குவனைக் கண்டு மகிழ்வேன் - அங்குக்
காயுங் கிழங்குகளும் தின்று மகிழ்வேன்.

உணவு வேண்டாம், உற்றார் வேண்டாம், மண்ணோ மாதரோ வேண்டாம் என்பவர் கவிதைத் தேர் ஏறி மிதிலை நகர் வந்து அங்குள்ள இளம் பெண்களின் மோனச் சிரிப்பில்தான் தன்னை மறப்பாராம். அவர்களுடன் சேர்ந்துதான் மகிழ்வாராம்.

மாட மிதிலைநகர் வீதி வருவேன் - இள
மாதர் குறுநகையிற் காதலுறுவேன்
பாடியவர் அணைக்கக் கூடிமகிழ்வேன் - இளம்
பச்சைக் கிளிகளுடன் பேசி மகிழ்வேன்.

கவிதையிலேயே காயும் கிழங்குகளும் கொடுத்துப் பசியாறச் செய்ய இலக்குவன் செய்யும் மாயந்தான் என்ன? இப்போது இங்கு வாழும் பெண்களை வேண்டாம் என்பவரை பல நூறு ஆண்டுகள் பின் அழைத்து எவ்வாறு மிதிலைப் பெண்கள் மகிழ்ச்சியைக் கொடுக்கிறார்கள்? நீங்களே கம்பராமாயணத்தை வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

## சங்கம் தரும் இன்பம்

கங்கை நதிக்கரையில் மூழ்கி யெழுவேன் - பின்பு
காணும் மதுரைநகர்க் கோடி வருவேன்
சங்கப் புலவர்களைக் கண்டு மகிழ்வேன் - அவர்
தம்மைத் தலைவணங்கி மீண்டு வருவேன்.

எமது கவிஞர் இவற்றை எல்லாம் முடித்து கங்கையில் ஒரு தடவை மூழ்கி எழுந்துவிட்டு அவசரமாக மதுரைக்கு வருவாராம். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வணங்கவா? அதுவும் முக்கியம்தான். ஆனால் இவருக்கு தின்னத் தமிழ் வேணுமல்லவா? அது மதுரையிலுள்ள சங்கப் புலவர்களிடம்தானே கிடைக்கும்! எப்படியான உணவு அது? நாங்களும் ஒன்றைச் சுவைத்துப் பார்ப்போமா?

ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில்தோன்றும் கவர்ச்சி இயற்கையானது. உயர்ந்த குணங்கள் கொண்டவர்களிடையே தோன்றும் போது இது காதலாகிறது. இது திருமணத்தின் முன்னர்தான் தோன்றும் என்றில்லை. இந்தக் காதலில் அன்பும் உண்டு, கட்டுப்பாடும் உண்டு. இந்தக் காதலால் இருவரின் மனங்களும் விரிவடைகின்றன. இத்தகைய ஆணும் பெண்ணும் தங்கள் முதல் சந்திப்பிலேயே ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டுவிடுகின்றனர்.



குறுந்தொகை என்னும் சங்க இலக்கியத்தில் இவ்வாறு தலைவியை அடையாளம் கண்டுகொண்ட தலைவன், தலைவியிடம் கூறுகிறான். "(நாங்கள் ஒருவரை ஒருவர் காண்பதற்கு முன்) உனது தாயும், எனது தாயும் எவ்வாறு தொடர்புபட்டவர்கள்? உனது தந்தைக்கும் எனது தந்தைக்குமிடையில் என்ன உறவு இருந்தது? நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் எவ்வாறு அறிந்து கொண்டோம்? செம்மண் மீது மழை பெய்ததும் இரண்டும் ஒன்றாகி சிவந்த நீர் தோன்றுவதைப் போல எங்கள் அன்புடை நெஞ்சங்கள் இரண்டும் முதல் சந்திப்பிலேயே ஒன்றாகிவிட்டன. (ஆதலால் பிரிவை எண்ணி ஏன் கலங்குகிறாய்?)"

யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல,
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.

## நெஞ்சை அள்ளும் சிலம்பு

மதுரைக்கு இன்னும் பல சிறப்புக்கள் உண்டு. தமிழின் முதல் காப்பியத்தின் முக்கிய சம்பவங்கள் அங்குதான் நிகழ்ந்தேறின. அதிலொன்றுதான் பாண்டிய மன்னன் முன்கண்ணகி தன் சிலம்பை உடைத்து அதில் செந்நிற மாணிக்கப் பரல்கள் இருப்பதைக் காட்டித் தன் கணவன் குற்றமற்றவன் என்று நிறுவிய நிகழ்ச்சி. (அரசியின் சிலம்பு வெண்ணிற முத்துப் பரல்கள் கொண்டது.) இதனைத் தொடர்ந்து நிகழ்ந்த விடயங்கள்தான் எங்கள் கவிஞரை கசிந்துருகச் செய்கின்றன.

செம்பொற் சிலம்புடைத்த செய்தி யறிந்து - அங்குச்
சென்று கசிந்தழுது நொந்து விழுவேன்

அந்தச் சம்பவங்களை இளங்கோவடிகள் விபரிப்பதைப் பார்ப்போம்.



கண்ணகி அணிமணிக் காற் சிலம்பு உடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே. மணிகண்டு
தாழ்ந்த குடையன்தளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள் என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே .....

கோவலன் அநியாயமாகக் கொலையுண்டதும், எவ்வளவோ துன்பங்களை இளவயதில் அனுபவித்த கண்ணகி கணவனை இழந்ததும் சிந்தை கசிந்து அழ வேண்டிய விடயங்கள்தான். இவற்றுக்கெல்லாம் மேலாக தமிழ் இலக்கியம் கூறும் வரலாறுகளிலேயே மிக சோகமான ஒரு நாடகம் இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து அரங்கேறுகிறது.

சர்வ அதிகாரங்களையும் சகல வசதிகளையும் கொண்ட அரசன் தன் மீது பிழை எனக் கண்டு "கெடுக என் ஆயுள்" என்று உயிர் துறக்கிறான். மக்களைக் காக்கும் தமது கடமையைத் குறைவில்லாமல் செய்து வந்த தென்பாண்டி மன்னர்களின் பெருமை தன்னால் முதன்முதலாக குழம்பியதாலும்,என்றுமே சாயாத பாண்டியரின் வெண் கொற்றக் குடை தனது நீதி பிழைத்ததனால் சாய்ந்தது கண்டும், வளையாத செங்கோல் வளைந்தது கண்டும் பொறுக்க முடியாமல் உயிர் விடுகிறான். மாரடைப்பாலோ அன்றி அதிர்ச்சியாலோ அல்ல. 'கெடுக என் ஆயுள்' எனச் சொல்லித் தன் உயிரைத் தானே விடுகிறான்.

பாண்டிய மன்னனைப் பின்பற்றி அவன் பத்தினியாகிய கோப்பெருந்தேவியும் அந்த இடத்திலேயே உயிர் துறக்கிறாள். இந்த மாபெரும் சோக நாடகம்தான் எங்கள் கவிஞரை 'அங்குச் சென்று கசிந்தழுது நொந்து விழச்' செய்திருக்க வேண்டும். ஏன்? துறவியான இளங்கோ அடிகளுக்கே அது பொறுக்கவில்லையே! மீண்டும் மீண்டும் அந்தச் சோகச் சம்பவத்தைக் கூறி வருந்துகிறார்.

'அழல்படு காதை'யில்:

அரசர் பெருமான் அடுபோர்ச் செழியன்
வளைகோல் இழுக்கத்து உயிர் ஆணி கொடுத்து ஆங்கு
இருநில மடந்தைக்கு செங்கோல் காட்ட
.....

எதிர்த்து வரும் படைகளை எல்லாம் வெல்லும் வலிமையுடைய அரசர் தலைவனான நெடுஞ்செழியன் தனது பிழையால் வளைந்த செங்கோலை தனது உயிரைக் கொடுத்து நிமிர்த்தினான் என்கிறார்.

பின்பு வஞ்சிக் காண்டத்தில் சேரன் செங்குட்டுவன் ஊடாக:

'எம்மோர் அன்ன வேந்தற்கு உற்ற
செம்மையின் இகழ்ந்த சொல் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்குஎன
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்உயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது
......

தனது நீதியை இகழும் சொற்கள் வேறு வேந்தர்களை எட்ட முன் தனது உயிர் நீங்கிய விடயம் செல்லட்டும் என்று உயிரை விட்டமையால் விதி வந்து வளைத்த செங்கோலை பாண்டியனின் உடலிலிருந்து பிரிந்த உயிர் நேராக்கியது என்று நெகிழ்கிறார் இளங்கோ அடிகள்.

## என்றன் சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்

1960 களிலாய் இருக்கலாம். அன்றைய தமிழரசுக் கட்சி முகப்பில் இரண்டு வரிக் கவிதைகளைக் கொண்ட சில கடித உறைகளை வெளியிட்டது. சிலவற்றில் அக் கவிதையை எழுதியவரின் பெயர் இருந்தது. எழுதியவரின் பெயர் இல்லாத இரண்டு கவிதைகள் மனதைக் கவர்ந்திழுக்கும் சிறப்புக் கொண்டவையாக இருந்தன. அவற்றில் முதலாவது,

ஓடையிலே என்சாம்பல் ஓடும் போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓட வேண்டும்

மற்றையது,

பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்
பைந்தமிழால் அழும்ஓசை கேட்க வேண்டும்

பலவருடங்களுக்குப் பின் 2001 ஆம் ஆண்டு தும்பளையில் நடைபெற்ற திரு பா. இரகுவரனின் 'ஊரும் வாழ்வும்' புத்தக வெளியீட்டில் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப காலம் தொட்டே அதனுடன் இணைந்திருந்த பண்டிதர் சச்சிதானந்தனே இந்த வரிகளின் சொந்தக்காரர் எனத் தெரிவித்தார். பண்டிதர் சச்சிதானந்தனும் அப்போது அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரசன்னமாகி இருந்தார்.

இப்போது எமது கவிஞரின் கடைசிச் செய்யுளைப் பார்ப்போம்.

தேவர்க்(கு) அரசுநிலை வேண்டியதில்லை - அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை
சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன்
சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்

இந்த வரிகளுக்கும், இதற்கு மேலுள்ள இரண்டு வரிக் கவிதைகள் இரண்டிற்கும் உரிமையாளர் ஒருவரே என்று தெரிகிறதல்லவா? ஆம்! நாம் இதுவரை பார்த்த கவிதை வரிகளும் பண்டிதர் சச்சிதானந்தனுக்கு உரியவையே.

## முற்றத்தில் பொற்குவியல்


இந்தப் பொற்குவியல் எல்லாம் எங்கள் முற்றத்தில்தான் கொட்டிக் கிடக்கின்றன. இக் கவிதையை ஆக்கிய பண்டிதர் சச்சிதானந்தன் (1921 - 2008) தும்பளையின் பெருமைமிகு மகனாவார். அற்புதமான பல கவிதை நூல்களும், ஆழ்ந்த கருத்துக்கள் செறிந்த கட்டுரைகளும் இவரின் கைவண்ணத்தால் உருவாகியுள்ளன. தும்பளையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இதையிட்டுப் பெருமை கொள்ளலாம்.



# மக்களும் சமூக வாழ்வும்

சு.குமாரகுலசிங்கம்
(ஜேர்மனி)

ஒரு சமூகம் என்பது அந்த இனம் ஒருமித்து ஒன்று கூடி வாழ்தலால் ஏற்படுத்தப்படும் இணைப்பாகும். இங்கு இணைப்பு என நான் குறியிடுவது யாதெனில் இந்த சமூகத்தால் ஏற்படுத்தப்பட்ட வாழ்வியல் முறையில் ஒத்து வாழ்தலாகும். இதை ஒரு வகையில் பண்பாட்டு வாழ்வியல் நெறிமுறையாக கொள்ளலாம்.



ஒரு இனம் தமக்கான வாழ்வியல் பண்பாக சில எழுதப்படாத விதி முறைகளை தம்மகத்தே கொண்டு இயங்குகின்றன.இதையே நான் இங்கு பண்பாடென்ற அலகு முறையாக கொள்கிறேன். தமிழருக்கு என்றோரு பண்பாடு சமூகத்தால் வரைமுறையாக இலக்கு நோக்கி இயக்கப்படுகின்றது.அவையாவன ஆலய வழிபாடு,விருந்தோம்பல், சில சடங்குகள் அவற்றில் திருமணம், அமரர் இறுதிக் கிரியை , அந்தியேட்டி , திதி , திவசம் , பூப்புனித நீராட்டு விழா என்பன அடங்கும்.

சமூக வாழ்வில் இவற்றையே முறையாக பேணுதலில் ஒவ்வொரு தமிழருக்கும் உரித்தான கடமையாக வலியுறுத்தப்படுகின்றது. இதை ஒரு வகையில் திணித்தல் என்று கூட வரையறுக்கலாம். ஏனெனில் ஒவ்வொரு நிகழ்வையும் அது அமரரோ , அவதரித்தலோ , அதாவது பிள்ளை பிறத்தலோ அல்லது பெண்பிள்ளைகள் பருவமடைதலோ யாதாகிலும் சமூகம் தன் வரம்பு முறைகளை அவர்களை பின்பற்ற சொல்லி ஏதாவது ஒரு முறையில் வலியுறுத்துகின்றது. அதை மறுக்கும் அல்லது அனுசரிக்க எதிர்க்கும் தனிப்பட்ட குடும்பங்களை கேலி செய்து அவமானப்படுத்தி அவர்களை ஒரு மனோ நோயாளியாக்குதலில் பெரும் பங்கினை வகிக்கின்றது.

நாளாந்த வாழ்வில் இதை சர்வ சாதாரணமாக பார்க்கலாம். நாம் இதை ஒரு வித பண்பாடென்ற கோணத்தில் பார்த்து தனி மனித விருப்பு வெறுப்புக்களை நையாண்டி செய்தலில் கழி(ளி)ப்பதால் அவர்களின் உணர்வுகளை மதிப்பதில்லை. கோயிலிற்கு நன்கொடை கொடுக்க வசதியில்லாதவன் கோயிலிற்கு வந்தால் நையாண்டி. மகளின் சடங்கை செய்ய விரும்பாதவன் மற்றவனின் அழைப்பில் பங்கெடுத்தாலும் இல்லாவிட்டாலும் கேலி செய்தல். திருமணத்தை சிக்கனமாக செய்தாலும் கேலி. விழாவெடுத்து கொண்டாடினாலும் சில நாட்கள் கழித்தேனும் நக்கல். ஏன் அந்த இடத்திலேயே நக்கலும் ஒரு வெஞ்சினமும், இப்படி செய்ய வரவேது என்கின்ற வக்கிர உணர்வுடன் ஒற்றர் புல வேலை செய்து மன உழைச்சலில் மனிதனை வேதனைக்குள்ளாக்குவது சமூக நெறிமுறையாகுமா? தனி மனித சுதந்திரம் என்பது சமூக வாழ்வில் கூட இல்லை என்பது யதார்த்தமான ஒரு நிலை. இந்த நிலை மாறணும். மாற்றப்பட வேண்டும். பக்கத்து வீட்டில் என்ன நடக்குது என்பதில் எமது சமூகம் பாரிய அக்கறை கொள்வது எப்போது அகலுமோ அப்போதே ஒரு மாற்றத்திற்கான வித்து ஊன்றியதாக அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.


பண்பாடு என்கின்ற சொல் புண்படு எனும் நிலைக்குள் வீழ்த்தி வாழ்தலில் ஏனோ தமிழர் சமூகம் திருப்தி பட்டுக் கொள்கின்றது. மரபு என்றும் ஐதீகம் என்றும் ஒரு வித மயக்கத்தை மக்கள் மனதில் புகுத்தி அதை ஒரு காவியாக இளைய தலைமுறைகளின் மனங்களில் வேண்டாத ஒரு பழக்கத்தை விதைப்பதை நிறுத்த வேண்டிய காலக் கட்டாயத்தில் இப்போது இருக்கின்றோம்.

ஒரு விருந்தோம்பலோ அல்லது விழாவோ தனக்கேற்ற வசதிப்பாட்டில் அவரவர் விருப்பிற்கேற்ப விட்டு விடுதலில் சமூக ஒருமைப்பாடு ஒன்றும் சீர்கெட்டு குலைந்து விடாது. நாம் இப்போது 21ம் நூற்றாண்டில் நடக்கின்றோம். உலகியலில் விஞ்ஞானம் எத்தனையோ புதுவித மார்க்கத்தை மக்கள் வயப்படுத்தி அவரவர் கைகளில் உலக புதினங்களையும் வியாபார நுணுக்கங்களையும், சமூகத் தொடர்பாடல்களையும், தொழிற்கற்கை முதல் சர்வ தொடர்பு முறைகளையும் ஏற்படுத்தி உலக இயங்கியல் தொடர்கின்றது.

உலக இயங்கியலிற்கு ஏற்ப ஒவ்வொரு நாட்டிலும் பண்பாட்டு புரட்சிகூட நடந்து கொண்டிருக்கின்ற இந்த வேளையில் நாம் இன்னமும் பழைய தேவையற்ற சமூக நடைமுறைகளையே பின்பற்றி நாம் தமிழர் என்றும் இதுவே நம் பண்பென்றும் அலட்டிக் கொண்டிருப்பதை விட்டு தேவையற்ற உபயோகமற்ற சில பழக்க வழக்கங்களை எகிறி தள்ளி விட்டு புதிய பாதையில் நிறைவான தனி மனித ஒழுங்கியலை மதித்து நடைபோட முன் வரவேண்டும்.

இவ்விடத்தில் சற்று ஆழமாக சாதியைப் பற்றி குறியிடுதல் பொருத்தம் என்று நினைக்கின்றேன். சாதி என்றால் என்ன? சகலர்க்கும் தெரிந்த ஒரு சாதாரண விடயம். அதாவது தொழில் சார் சமூகம். இந்த தொழில் சார் சமூகம் இல்லாமல் நம் இனம் இயங்கமுடியுமா? முடியும் ஆனால் செய்யமாட்டார்கள் ஏனெனில் இவரிவர் இன்ன தொழில்தான் செய்கிறார். செய்ய வேண்டும் அதையும் மீறி அவர்களது பிள்ளைகள் கல்விமானாகி சமூகத்தில் ஒரு உயர்ந்த பதவி வகித்தாலும் சாதி சொல்லி பழிக்கும். குறைகள் பல கூறி இகழும் இந்த பாழும் பழக்கம் சமூகத்திற்கு தேவையா?

மனித குலம் ஒன்றுதான். தொழில் சார் சமூகமாக தோற்றம் பெற்ற வரலாற்றை பதிய நான் விழையவில்லை. ஆயினும் இன்னமும் சாதி சொல்லி, வர்க்கம் சொல்லி, மதம் சார் பழிப்பு கூறி தன் இனமே பெரிதென்றும், தன் மதமே சிறந்த மார்க்கமென்றும் தனதான சாதியே உயர்வென்றும் அலட்டிக் கொள்ளும் எம் சமூகமே. உங்களது ஒவ்வொரு தேவையையும் வேறு தொழில் செய்யும் மக்களின் பங்களிப்பு சற்றேனும் இல்லாமல் மேலைத் தேய மக்களின் வாழ்வியல் போல் மாற்றம் கொண்டு வர ஏன் முடியவில்லை. எந்தவொரு விழாவானாலும், எந்தவொரு சமூகம் சார் நிகழ்ச்சியானாலும் மற்ற தொழில் செய்யும் மானிட சமூகம் இல்லாமல் இயங்க முடியுமா? ஆயின் ஏன் இந்த சாதி நெறி முறைகளை சமூகத்தில் இன்னமும் பாராட்டிக் கொண்டிருக்கின்றீர்கள்? கோயிலில் வெள்ளை கட்ட சலவைக்காரன் தேவை, பறை மேளம் அடிக்க அதையே தொழிலாக கொள்பவன் தேவை. ஆனால் கோயிலிற்குள் மட்டும் போகக்கூடாது.



அமரர் ஈமக் கிரியைகள் இவர்களின் சேவை இல்லாமல் அறவே நடக்காது. ஏன் இந்த முறைகள் இல்லாமல் பிணம் வேகாதா?ஆயின் ஏன் சாதி சொல்லி பிரிவெழுதுகின்றாய். வீட்டில் விருந்து வைக்க மீனவனிடம் பேரம் பேசி அவன் உழைப்பையே உறிஞ்சி தின்ன மட்டும் மீனவன் தேவை. ஆனால் அவனிற்கு ஒரு சொட்டு தண்ணீர் குடுக்க போத்தல் தேவை. நாவிதன் இல்லையோ சமூகம் பழங்குடி மக்களாக வேடுவராக அலையவேண்டும். ஆனால் வீட்டு வாசல்படி மிதிக்கக் கூடாது. என்னே சமூகப் பண்பு. இதன் மூலம் நான் பதியும் செய்தி எத் தொழில் செய்வபவரானாலும் அவர்களையும் மதிக்கும் பண்பை நடைமுறைப்படுத்துங்கள். எல்லோரும் இந் நாட்டு மக்களே!

தங்கம் எடுத்த கை. அது
தங்கம் பார்த்ததா?
தானம் செய்த கை சம தர்மம் கண்டதா?
ஆலயம் செய்வோம்
அங்கே அனுமதி இல்லை..
நீ அந்தக் கூட்டமே இதில் அதிசயம் இல்லை.

இந்த கவிஞனின் மனக் குமுறல் ஊடான இவர்களின் குரல் புரிகின்றதா?

மேலும் பிள்ளைகள் பாடசாலைக்கு சீருடை அணிய சலவைக்காரன் தேவை. மாட்டிற்கு, வீட்டிற்கு விறகிற்கு சீவல் காரன் தேவை. ஏன் ஒரு போத்தலாவது கள்ளுக் குடிக்க இரங்கி மன்றாடி வேண்டி குடித்து விட்டு தொழில் கூறி திட்டும் சமூகம் மாறுமா?



மக்களால் மக்களிற்கான ஒருமாற்றததை இளைய சமூகம் ஏற்படுத்தும் அதை நாம் வரவேற்று அவர்களிற்கு ஊக்கமளித்து நாகரிக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அது ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கும். ஒரு சமூகபுரட்சியாக மிளிரட்டும் சமூகம் மற்றவர்களின் குறை நிறைகளை விமர்சிப்பதை ஆரம்பிக்கும் இடமே முதலில் கோயிலாகவும், மற்றும் அமரர் வீட்டிலும் மேலும் தேவையற்ற சில சடங்குகளிலும் இவை பேசு பொருளாக இடம் கொள்கின்றன. ஏன் ஐயா இவைகளை விட்டால் வேறு இடங்களில் நடப்பதில்லையா என நீங்கள் கேட்கும் கேள்வி புரிகின்றது-முதலில் இந்த தேவையற்ற சடங்குகளை நடாத்த முனைவது பழைய சமூகம் சார் முதியவர்கள் இவர்களால்தான் மற்றவர்களின் நிறை குறைகள் முதலில் விமர்சிக்கப்படுகின்றது. இவர்கள் மூலமே இளைய தலை முறைகளில் திணிக்கப்பட்டு பக்கத்து , அயல் வீட்டு விடயங்கள் ஆராயப்படுகின்றன. ஆகவே ஆரம்பிக்கப்படும் இடங்களாக இவையே முதன்மை இடம் வகிக்கின்றன.

இளைய தலைமுறைகளை எடுத்தால் அவர்கள் நண்பர்கள் எனும் வட்டத்திற்குள் இவைகளை ஒரு பேசு பொருளாகவே எடுக்க முனைவதில்லை.அவர்களிற்குள் சாதி,சமய வேறுபாட்டையே காணமுடிவதில்லை. ஆனால் முடிகின்றது எப்போது திருமணம் எனும் பந்தத்தை ஏற்படுத்திய பின் பெண் வீட்டார் முதல் மாப்பிள்ளை வீட்டிலிருந்து அயல் எனும் சமூகம் இவர்களிற்கு பழைய பண்பாட்டையே ஊட்டுகின்றது.

இதன் மூலம் மாறிய மாற்றப்பட்ட பல நண்பர் வட்டங்களும் எனதான அனுபவத்தில் உண்டு. இது யதார்த்தம் என்பது முகமறைய ஏற்கப்படும் மாறுதலாகும். சாதி,மதம் பார்க்காமல் தேவையற்ற சடங்குகளை மறுதலித்த இளைய சமூகத்தை மாற்றிய பெரும் பணி முதிய சமூகத்தில் இன்றும் உண்டு என்பது உள்ளங்கை காயமாகும். மாறாக சில மாற்றங்களை உருவாக்க சில இளைய தலைமுறைகள் கனதியாக முனையும் வேளை அது பெற்றோர்களினால் நிராகரிக்கப்பட்டு சமூகத்தினால் நிந்திக்கப்பட்டு அவை கால ஓட்டத்தினால் கைவிடப்பட்டதும் உண்டு. மிகமிகச் சிலரே இந்த மாற்றங்களை உள் வாங்கி தனியொருத்தனாக சாதித்ததும் உண்டு. அதனால் அவன் சமூகத்தால் ஓரங்கட்டப்பட்டு பிரிந்து சென்று வாழ்வியல் நாட்களை மாற்றிடத்தில் தொடர்ந்ததும் உண்டு. ஆனால் அவனால் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. காரணம் அவனது இயங்கு தளம் மாற்றப்பட்டதால் ஆகும்.

மாற்றங்களை பண்பாட்டு மாற்றங்களை அதன் தளத்தில் இருந்தே ஏற்படுத்தலே நல்ல விளைவுகளைத் தரும். சாதி, மதம் வர்க்கம் இப்படியான வேறுபாடுகளை களைவதானால் ஒவ்வொருத்தரும் தன் உழைப்பில் தங்கியிருத்தல் அவசியமாகும். வாழ்தலிற்கு முக்கியமாக பணம் நிச்சயமாக தேவையானதாகும். அதற்கு தேவையானது நிறைவான தொழில் சார் கல்வியாகும். ஆகவே இளைய சமூகம் தன் உழைப்பில் தங்கி வாழ்வதால் சமூக மாற்றம் அதன் இயங்கியலில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.



அதாவது ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் வாழ்வியியலிற்கு தேவையான தொழில் நுட்ப கல்வியை பயின்று தேர்ச்சி பெற்று சுயமாக இயங்குதல் வேண்டும். தற்போதைய கல்வி முறையை நினைத்தால் என் பார்வையில் அர்த்தமே அற்றதாகும். இது பற்றி எழும் எண்ணத்தை வேறு பதிவில் இட்டு தொடருகிறேன். இப்போது பதிவின் முக்கிய கட்டத்திற்கு வந்துள்ளேன். எமது சமூகத்தை எடுத்துக் கொண்டால் சராசரி பெற்றோரின் கனவுகளாக பின்வருவன தொக்கி நிற்கும்.

1. எனது பிள்ளை மருத்துவராக வரவேண்டும்.
2. எனது பிள்ளை பொறியியலாளராக வரவேண்டும்.
3. அரச அதிபராக வரவேண்டும்.
4. கடைசி ஒரு எழுது வினைஞராகவேனும் வரவேண்டும்.

எதிர்பார்ப்பு தப்பே இல்லை. நியாயமானது , இயல்பானது.

இங்குதான் பல பெற்றோர்களே கோட்டை விடும் பலமான ஆனால் பலவீனமான இடமாகும்.அதாவது ஒரு பெற்றோர்தானும் பிள்ளைகளின் மனக் கிடக்கையை அதாவது அவனது ஆளுமையான பிடிப்பான படிப்பாற்றலை கணக்கில் எடுப்பதே இல்லை. சில பிள்ளைகளிற்கு தொழிற் கற்கை முறைமை பலமான ஆளுமையாக அமையும், ஓவியம் வரைதல், கட்டுமான கல்வி, வியாபார ஆளுமை, ஓட்டுனர் ஆக வேண்டும் என்பதான எதிர்பார்ப்பு, ஏன் கலைஞனாக, கவிஞனாக, விவசாயியாக, மருத்துவ தாதியாக இப்படி பல விதமான எண்ணக் கிடக்கைகளில் கனவு காணும் பிள்ளைகளின் மனக் கிடக்கை அறிந்து இந்த உணர்வை ஊக்கப்படுத்தினாலே பிள்ளைகளின் கல்விக் கனவு நிறைவேறும். இங்கும் பெற்றோர்களின் சமூகம் சார் எண்ணங்களே ஆட்சி செய்கின்றதே தவிர தனி மனித உணர்வுகளை பிரதிபலிப்பதே இல்லை. இப்படியே போனால் எதில் என்ன மாற்றம் வரும். மீண்டும் பிள்ளையை கோயிலிற்கு மணியடிக்கவும், தேவாரம் பாடவும் உந்துதலே உதாவாக்கரை சமூகம் செய்யும் பெரும் பணியாக நிறைவடைவர். ஆக ஒரு மாற்றம் சமூகத்தில் புலப்பட பெற்றோர்கள் முதல் உற்றார் உறவுகள் இணைந்து தேவையற்ற பண்பாட்டை களைந்து வாழ்வியலிற்கு ஏற்ப சமூக பண்பாட்டை கடைப்பிடிக்க முன் வரவேண்டும்.

எந்த மாற்றமும் உடனடியாக ஏற்படுவதில்லை.ஏற்பட்டது அது இருப்பவன் இருக்கும் காலத்தில், தொலை நோக்கு பார்வையுடைய ஒரு பண்பாளன் வழிகாட்டும் வரை காத்திராமல் நாமே நமக்கான ஒரு சிறந்த சமூக மாற்றத்தை பண்பாட்டில் புகுத்தி சீராக சிறப்பாக வாழ முனைவேமாக.ஒவ்வொரு குடிமகனும் அரசணாகணும்.அதற்கு சமூகம் சார் மக்கள் மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த இனி வரும் இளைய சமூகத்தையாவது இடைஞ்சல் பண்ணாமல் எவ்வித நச்சு பழக்க வழக்கத்தையும் வலிந்தோ, விரும்பியோ புகுத்தாமல் ஆரோக்கியமான மாற்றத்திற்கு வழி வகுக்க எம்மை தயார்படுத்துவோம்.

**பிற் குறிப்பு - அமரர் வீடு...செத்த வீடு, அல்லது இழவு வீடு.**




அரும்புகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி... 2013




நாவலர் முன்பள்ளி — தும்பளை
வருடாந்த விளையாட்டு விழா - 2011










# அருமையான மகன் முழுமையான மனிதன்


**சி. அமிர்தாஞ்சலி**
வரதவிநாயகர் கோவிலடி,
தும்பளை

**உன்மீது நம்பிக்கை வைக்க உனக்கு முடியுமானால் !**



"எல்லோரும் உன்னில் சந்தேகம் கொள்ளும் போதும் உன் மீது நம்பிக்கை வைக்க உனக்கு முடியுமானால், அத்துடன் அவர்கள் சந்தேகத்தைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக முயற்சிகளேதும் செய்யாமல் இருக்கவும் உன்னால் முடியுமானால்..... ."

இது இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற ரட்யாட் கிப்ளிங்(Rudyard Kipling) தனது மகனுக்காக எழுதியதாகக் கருதப்படும் கவிதையொன்றின் பகுதி.



"மற்றெல்லாரும் தவறென்று கூறும் போதும் தனது சொந்தக் கருத்துகளில் நம்பிக்கை வைக்க அவனைப் பழக்குங்கள்."அத்துடன் "எப்போதும் தன்மீது அசைக்க முடியாத விசுவாசம் கொள்ள அவனுக்கு கற்பியுங்கள். அப்போதுதான் மனித இனத்தின் மீதும் அசைக்க முடியாத விசுவாசம் அவனுக்கு ஏற்படும்."

இது புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincoln)தனது மகனின் பாடசாலை ஆசிரியருக்கு எழுதியதாக நம்பப்படும் கடிதத்தின் ஒரு பகுதி.

## எழுத்துலகத் தலைவனும், உலகத்தலைவனின் எழுத்தும்

ஆங்கில எழுத்தாளரான ரட்யாட் கிப்ளிங் (1865 - 1936) ஒரு புகழ் பெற்ற சிறுகதை எழுத்தாளர், கவிஞர், நாவலாசிரியர். சிறுவர்களுக்கான இவரது ஆக்கங்கள் உலகத் தரம் வாய்ந்தவை. இன்றும் சிறுவர்களால் மிகவும் விரும்பப்படும் The Jungle Book இவரால் ஆக்கப்பட்டது. இலக்கியத்திற்கான நோபல் பரிசு இவருக்கு 1907 ஆம் ஆண்டு கிடைத்தது.

ரட்யாட் கிப்ளிங் எழுதிய "If-"என்னும் கவிதை 1995 இல் BBC இனால் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பு ஒன்றில் பிரித்தானிய மக்களால் மிகவும் விரும்பப்படும் கவிதையாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இக்கவிதையின் ஒரு பகுதியே மேலே தரப்பட்டுள்ளது.

அடிமை நிலையை அமெரிக்காவிலிருந்து ஒழித்ததனால் இறவாப் புகழ் பெற்ற ஆபிரகாம் லிங்கன் (1809 - 1865) அவர்கள் 1860 இல் அமெரிக்க ஜனாதிபதியானார். அடிமை நிலையை ஒழிக்க அவர் எடுத்த நடவடிக்கையை எதிர்த்து அமெரிக்காவின் தென் பகுதி மாநிலங்கள் தாங்கள் அமெரிக்காவிலிருந்து பிரிவதாகக் கூறி உள்நாட்டு யுத்தமொன்றை ஆரம்பித்தன. யுத்தத்தைத் தலைமை தாங்கி நடாத்தி, அடிமை நிலையை முடிவுக்குக் கொண்டுவந்து, யுத்தத்தை வெற்றி கொண்ட 5 நாட்களுக்குள் ஏபிரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரை உலகத் தலைவர்களில் ஒருவர் என்று போற்றுவது மிகவும் பொருத்தமானதே.

ரட்யாட் கிப்ளிங் எழுதிய கவிதையும், ஏபிரகாம் லிங்கன் வரைந்த கடிதமும் என்றைக்கும் பொருந்தும் நெறிகளை சிறுவர்களுக்கு எடுத்துச் சொல்வதால் இன்றும் பலராலும் விரும்பிப் பேணப்படும் பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன. அவர்கள் கூறுவதில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

## கும்பலைத் தொடராதிருக்கும் மனத்திடம்

ஆப்ரகாம் லிங்கன் தனது மகனின் ஆசிரியருக்கு எழுதுகிறார்: "மற்றெல்லாரும் வெற்றி பெறும் கட்சிக்கு தாவும் போது அக் கும்பலைத் தொடராதிருக்கும் மனத் திடத்தை அவனுக்குஏற்படுத்துங்கள். அனைத்து தரப்பினரையும் செவிமடுக்க அவனுக்கு அறிவுறுத்துங்கள், ஆனால் தான் கேட்ட யாவற்றையும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி அதிலிருந்து வரும் நல்லவற்றை மட்டும் எடுப்பதற்கு அவனுக்கு காட்டிக் கொடுங்கள்."

பலருடனும் பழகும் போது கவனத்தில் எடுக்க வேண்டிய வேறொரு விடயத்தைப் பற்றி ரட்யாட் கிப்ளிங் நினைவூட்டுகிறார். "பெரும் மக்கள் கூட்டத்துடன் பேசும் போதும் உன் பண்புகளை இழக்காமல் பேச உன்னால் முடியுமானால், அரசர்களுக்கு இணையாக நடக்கும்போதும் சாதாரண மக்களுடன் உள்ள தொடர்பை விட்டு விடாமல் இருப்பாயானால் ..." இவ்வாறு அவரின் நினைவூட்டல் தொடர்கிறது.

குழப்பம் விளைவிப்போரின் செயல்கள் அத்து மீறினால் என்ன செய்வது? ஆபிரகாம் லிங்கன் சொல்கிறார். "கூச்சலிடும் கலகக்காரர்களுக்கு தன் காதுகளை மூடவும், தான் சரியென்று நம்பினால் எழுந்து நின்று போராடவும் அவனுக்கு கற்பியுங்கள்."

## கனவு காண்க, ஆனால் ....

"கனவை உனது எஜமானாக்காமல் கனவு காண உன்னால் முடியுமானால், சிந்திக்கக் கூடிய ஒருவனாகவும் அதேசமயம் சிந்தனையை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாதவனாகவும் இருப்பாய் என்றால் .... ." மகனுக்கான கிப்ளிங் இன் கவிதை இவ்வாறு செல்கிறது. மிகுதியை லிங்கன் தனது மகனின் ஆசிரியரிடம் கூறுகிறார்.

"உங்களுக்கு இயலுமெனின் நல்ல நூல்களின் அரிய செய்திகளை அவனுக்குப் புலப்படுத்துங்கள். அதேநேரம் வானத்தில் பறக்கும் பறவைகளும், சூரிய ஒளியில் தென்படும் வண்டுகளும், பசிய மலைகளிலுள்ள பூக்களும் தெரிவிக்கும் சாசுவதமான மறைபொருளை எண்ணிப் பார்க்கவும் அவனுக்கு அமைதியான நேரத்தை ஒதுக்கிக் கொடுங்கள்."

## ஒவ்வொரு போக்கிரிக்கும் ஒரு சான்றோன் ஒவ்வொரு எதிரிக்கும் ஒரு நண்பன்.

"எல்லா மனிதர்களும் நீதியானவர்களில்லை. எல்லா மனிதர்களும் உண்மையானவர்களில்லை என்பதை என் மகன் ஒருநாள் கற்கவேண்டி வரும். ஆனால் அவன் சந்திக்கும் ஒவ்வொரு போக்கிரிக்கும் ஒரு சான்றோனைக் காணலாம் என்பதையும், ஒவ்வொரு சுயநல அரசியல்வாதிக்கும் பதிலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஒரு தலைவன் உண்டு என்பதையும் அவனுக்குப் போதியுங்கள். இதேபோல் அவனுக்கு வந்துசேரும் ஒவ்வொரு எதிரிக்கும் பதிலாக ஒரு நண்பன் கிடைப்பான் என்பதையும் அவனுக்குத் தெரிவியுங்கள்." இது லிங்கனின் விருப்பம்.

"பெரு வெற்றியையும் படுதோல்வியையும் ஒரே மனத்துடன் சந்திக்க உன்னால் முடியு மானால் ..." என்று கிப்ளிங் கூறுவது தளம்பாத மனவலிமையுடன் இவ்விரண்டையும் எதிர் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தவே. அந்தத் தளம்பாத மனத்துடன் "தோல்வியை ஏற்றுக் கொள்ளவும், வெற்றியை மகிழ்வுடன் அனுபவிக்கவும் அவனுக்குக் காட்டிக் கொடுங்கள்" என்று தன் மகனின் ஆசிரியரைக் கேட்டுக் கொள்கிறார் லிங்கன்.

## நெருப்பில் காய்ச்சியே இரும்பு கூராக்கப்படுகிறது

"நெருப்பில் காய்ச்சியே இரும்பு கூராக்கப்படுகிறது. எனவே அவனை செல்லம் கொடுத்துச் சீராட்டாதீர்கள். ஆனால் மிகக் கடுமையாகவும் நடத்தாதீர்கள்." என லிங்கன் தனது மகனின் பள்ளி ஆசிரியரை எச்சரிக்கிறார்."மனவுரம் மிக்கவனாக வருவதற்குரிய ஊக்கத்தை அவன் பெறவேண்டும்."

"எதிரிகளாலோ, உன் அன்பு நண்பர்களாலோ உன்னைப் புண்படுத்த முடியாது என்றால், எல்லா மனிதர்களும் உன்னை அணுக முடியும் ஆனால் எவராலும் அளவுக்கு மீறி நெருங்க முடியாது என்றால் ...." என்று ஒரு நாளைக்குப் பெரியவனாகப் போகும் தன் மகனுக்கு அறிவுரை கூறுகிறார் கிப்ளிங்.

## கண்ணீர் சிந்துவதற்கு வெட்கப்பட வேண்டியதில்லை

"உங்களால் முடியுமானால் துன்பத்தின் மத்தியிலும் நகைமுகம் காட்ட அவனைப் பழக்குங்கள். எனினும் (அழவேண்டி வந்தால்) கண்ணீர் சிந்துவதில் வெட்கமோ அவமானமோ இல்லை என்பதையும் அவனுக்குக் கற்பியுங்கள்." இது லிங்கனின் வேண்டுகோள்.

எந்தமாதிரியான சந்தர்ப்பத்தில் துன்பத்தையும் கண்ணீரையும் சந்திக்க வேண்டி வரலாம் என்பதை தன் மகனுக்கு கிப்ளிங் கூறுகிறார்.

"நீ சொன்ன உண்மைகள் வீணர்களால் திரிக்கப்பட்டு முட்டாள்களுக்கு ஒரு பொறியாக்கப் படுவதைக் கேட்டும் அதனைத் தாங்கிக் கொள்ள உன்னால் முடியுமானால், உனது உயிரைக் கொடுத்துக் கட்டிய கோட்டைகள் சாய்ந்து மண்மீது விழவும், தளர்ந்து விடாமல், தேய்ந்து போன உன் கருவிகளால் அவற்றை மீண்டும் கட்டியெழுப்ப உன்னால் முடியு மானால் .... ."

## காத்திருப்பதனால் களைப்படையாமல் இருக்க உன்னால் முடியு மானால்.........

"களைப்படையாமல் காத்திருக்க உன்னால் முடியுமானால், உன்னைப்பற்றி அவதூறு சொல்லப் பட்டாலும் பொய் கூறாத ஒருவனாக நீ இருப்பாயானால், வெறுக்கப்பட்ட போதும் வெறுப்பிற்கு இடம் கொடாமல் இருப்பாய் என்றால், அது மட்டுமல்லாது பெரும் புத்திசாலி போன்றோ அல்லது மிக நல்லவன் போன்றோ காட்டிக் கொள்ளாமல் இருக்க உன்னால் முடியுமென்றால்.... ." மகனுக்கு பொறுமையையின் பெருமையை போதிக்க முயலும் கிப்ளிங் இன் வரிகள் இவை.

பொறுமையை கொண்டுவருவதற்கு பொறாமையை நீக்க வேண்டியதன் அவசியம் பற்றி தனது மகனின் ஆசிரியருக்கு நினைவூட்டுகிறார் லிங்கன். "எரிச்சல் பொறாமையிலிருந்து அவனைத் தூரக் கொண்டு செல்லுங்கள். உங்களுக்கு இயலுமானால் அமைதியான புன்னகையின் இரகசியங்களை அவனுக்குக் காட்டிக் கொடுங்கள். மோசடி செய்வதைவிட தோற்பது எவ்வளவோ கௌரவமானது என்பதை இப் பள்ளிப் பருவத்திலேயே அவன் உணரட்டும்."

## அடாவடித்தனமானவர்களே மிக எளிதில் வீழ்த்தப் படுவார்கள்

"அடாவடித்தனமானவர்களே மிக எளிதில் வீழ்த்தப் படுவார்கள் என்பதை இளமையிலேயே என் மகன் கற்கட்டும்." இதனால் "முரடானவர்களுடன் இறுக்கமாகவும், பண்பானவர்களுடன் கனிவாகவும் நடந்து கொள்ள அவனைப் பழக்குங்கள்" என்று தனது மகனின் ஆசிரியர்களிடம் வேண்டுகிறார் லிங்கன்.

இதேநேரம் "ஓயாது குற்றம் காண்பவர்களை ஒதுக்கி விடவும், அளவுக்கு மிஞ்சி இனிமையாயிருப்பவர்களிடம் எச்சரிக்கையாயிருக்கவும் அவனுக்கு அறிவுறுத்துங்கள்" என்பதும் அவர் வேண்டுகோள்.

## மனச்சாட்சிக்கோ, ஆத்மாவிற்கோ விலைபேசாதே

"தனது உடலாற்றலையும், அறிவாற்றலையும் அதியுயர்ந்த விலைக்கு வழங்கும் அதேநேரம் தனது மனச்சாட்சிக்கோ, ஆத்மாவிற்கோ விலைபேச எவரையும் அனுமதிக்கக் கூடாது என்பதை அவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று தன் மகனின் ஆசிரியர்களுக்குச் சொல்கிறார் லிங்கன். அதன் காரணத்தை முதலிலேயே அவர்களுக்குக் கூறிவிடுகிறார்: "உழைத்துப் பெறும் நூறு ரூபாவானது சும்மா கிடைக்கும் ஒரு இலட்சம் ரூபாவிலும்பெறுமதியானது என்பதை அவன் உணருவதற்கு இன்னும் காலம் செல்லும். என்றாலும் உங்களால் முடியுமானால் இதை அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்."

## அருமையான மகன் முழுமையான மனிதன்

தான் இவ்வளவற்றையும் ஆசிரியர்களிடம் கேட்பது தனது மகன் ஒரு அருமையான பையன் என்பதாலேயே என்று தன் கடிதத்தின் இறுதியில் தெரிவிக்கிறார் லிங்கன். என் அருமை மகனான உன்னிடம் இவ்வளவு வேண்டுகோள்களையும் விடுப்பது உன்னை ஒரு முழுமையான மனிதனாக்குவதற்கே என முடிக்கிறார் கிப்ளிங்.

**குறிப்பு** : ஆங்கிலத்தில் உள்ள ரட்யாட் கிப்ளிங் இன் கவிதையும், ஆபிரகாம் லிங்கனின் கடிதமும் இக் கட்டுரை ஆசிரியரினாலேயே தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.





# மனிதம் காப்போம்

**தி.இ.நிரஞ்சன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்.
திகிரி ஒழுங்கை,
தும்பளை.

**மா**னிடப்பிறவி மகத்துவ பிறவி என்பார்
- அதை
பயனுள்ளதாய் ஆக்க மனித நேயம் வேண்டும்
- எமக்குள்!
உயிரை உயிராக மதிக்க உனக்குள்
உணர்வுள்ள உயிர் வேண்டும்
உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றில்லை
அனைவரும் உணர்வுள்ளவரே!
பணக்காரன் , ஏழை என்ற பாகுபாடு
- தேவையில்லை!
அனைவருமே இங்கு நிலைப்பதில்லை.
கற்றவர் கற்றதை மற்றவர்க்கு கற்பித்தால்!
பேதைமை ஒழிந்திடும் நாட்டினிலே!
ஒற்றுமையாய் வாழ்ந்திட்டால் - மனிதன்
ஒதுக்கப்படாமல் வாழ்ந்திடுவான்.
மனிதரை மனிதனாக மதித்து வாழ்ந்திட்டால்
மனித நேயமும் தோற்காது
மானிடமும் தோற்காது!











# கைத்தொலைபேசிகளின் சாபம்.......

செல்வி.சாமினி சிவராசா
தும்பளை மேற்கு,
தும்பளை.

நவீன தொடர்பு சாதனங்களுக்கு ஒரு போதும் வரவேற்புக்கு பஞ்சமில்லை. ஆனால் தொலைபேசிகளை இந்த அளவுக்கு கொண்டாடுவார்கள் என்று எவருமே நினைக்கவில்லை. அந்த அளவிற்கு இவ்வுலக மக்களை தொலைபேசிகள் ஆண்டு கொண்டிருக்கின்றன. தற்போது சிறுவர் முதல் பெரியோர் வரை தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர். செல்லுமிடமெல்லாம் எடுத்துச் செல்லத்தக்க வண்ணம் Nokia , Samsung, Sony ericson, i phone, Smart phone, Apple phone என்று ஏராளமான தயாரிப்புக்கள். இவற்றில் பேசுவதற்கு மட்டுமல்லாது s.m.s . புகைப்படம், வீடியோ, வானொலி, மின்னஞ்சல், Maps என்று பல வசதிகளும் உண்டு.

ஆனால் நவீன வசதிகள் என்று வரும்போது கூடவே ஆபத்துக்களையும் அழைத்து வருகின்றன. புகைப்பழக்கத்துக்கு போதையாகி விட்டவர்களைப் போல செல்லிடப் பேசிகளைப் பயன்படுத்துபவர்களும் அப் பழக்கத்தை கைவிட முடியாது உள்ளனர். இவர்களுக்கு மருத்துவமனைகள், கருத்தமர்வு அரங்குகள், திரையரங்குகள், பேருந்துகள், பள்ளி , கல்லூரி வளாகங்கள், நூலகங்கள் ஏன் -தேர்வு மண்டபங்கள் கூட ஒரு பொருட்டாக இல்லை. மெய்மறந்து மணிக்கணக்காக பேசிக்கொண்டே இருக்கின்றார்கள்.

செல்லிடப் பேசிகள் வானொலி தொடர்பாடலை ஆதாரமாகக் கொண்டவை. செல்லிடப் பேசிகளுக்கும், அவற்றுக்கு அண்மையிலுள்ள கோபுரத்துக்கும் இடையே உரையாடல்கள் மின்காந்த அலைகளில் ஏற்றி அனுப்பப்படுகின்றன. இதில் செல்லிடப்பேசிகளின் Antenna வில் இருந்து 2 வாற் அளவிலும், ஆதார நிலையத்தின் அலைஈர்ப்பியில் இருந்து 60 வாற் அளவிலும் கதிர்வீச்சு நிகழ்கின்றது. ஒருவர் செல்லிடப் பேசியை காதில் அழுத்தியபின் உரையாடும் போது மின்காந்தக் கதிர்ப்புகளின் முற்றுகைக்கு அவர்களை அறியாமலே ஆளாகுகின்றனர். கதிர்வீசல் நரம்புகளில் செய்திகளைக் காவிச் செல்கின்ற மின்துடிப்புகளை இடையூறு செய்கின்றன. அத்தோடு மூளையிலுள்ள குருதி மயிர்க்குழாய்களின் மெல்லிய அகவணிக்கலங்களைச் சிதைத்து , இரத்தத்திலுள்ள நஞ்சுகளை தடையின்றி மூளையில் கலக்கவும் வழி செய்கின்றது. இவற்றின் விளைவாக தலைவலி, நித்திரையின்மை, ஞாபகக் குறைபாடு போன்றவைகளுடன்

மூளையிலும் காதிலும் கட்டிகளும் ஏற்படுகின்றன. அதிக அளவில் தொலைபேசிகளைப் பயன்படுத்துவோரின் வாழ்நாளும் குறையத் தொடங்கியிருப்பதாக அறிவிப்பொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் கதிர்வீசல் தோலைச் சேதப்படுத்தி வயதுக்கு மீறிய தோற்றத்தை ஏற்படுத்தும்.

இதயம் சரிவரத் தொழிற்படாதவர்களுக்கு செயற்கையான இதயமுடுக்கி (Pace maker) எனப்படும் சாதனம் பொருத்தப்படும். இதன் சில மின்சாரப்பகுதிகள் அலை வாங்கிகளாக செயற்படக்கூடியவை. இவை தொலைபேசிகளின் மின்காந்த அலைகளை ஈர்த்துத் தமது உணர்திறன் மிக்க மின்சுற்றினுள் இறக்கி விடுவதால்செயற்கையான இதயமுடுக்கியின் இயக்கமும் பாதிக்கப்படுகின்றது.

முன் எப்போதையும் விட அதிகளவில் கதிர்வீச்சுக்கு ஆளாகி வரும் இன்றைய வளர்குழந்தைத் தலைமுறை பற்றி மருத்துவ உலகு கவலை கொண்டுள்ளது. குழந்தைகளின் மெல்லிய மண்டையோடு செல்லிடப்பேசிகளில் தடுக்க பலமின்றி ஆழமாக ஊடுருவ அனுமதிக்கின்றன. மூளையிலும் நரம்பு இழையங்களிலும் வளர்ச்சி நிகழ்வதால் கதிர்கள் அவற்றின் D.N.A ஐ பாதிக்கும்.

செல்லிடப்பேசிகளின் கதிர்வீசல்கள் மட்டுமல்ல செல்லிடப்பேசிகளில் குறுந்தகவல் அனுப்புகின்ற முறைகூட சில சமயங்களில் பிரச்சினைகளை தோற்றுவித்து விடுகிறது. குறுந்தகவல்கள் செல்லிடப் பேசிகளின் வலைப்பின்னலில் பெரும் தகவல் வெள்ளமாகவே கரைபுரண்டு கொண்டிருக்கின்றன.

சென்னை லயோலா கல்லூரி காண்பியத் தொடர்பாடல் துறையின் விரிவுரையாளர் சுரேஷ்பால், கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டிருந்த மாணவியொருவர், அந்த அமர்வு பூராவுகவும் செல்லிட பேசியினைப் பயன்படுத்திக் கொண்டிருந்ததை கண்ணுற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி அளவுக்கு மீறி , அறிவையும் மீறி s.m.s அனுப்பும்போது கட்டை விரலைத் தொடர்ச்சியாக அழுத்தி வைக்க நேரிடுகின்றது. ஆரம்பத்தில் எந்தப் பிரச்சினையும் தென்படாது. ஆனால் சில வருடங்களில் கடடை விரலில் நீடித்த வலி ஏற்பட்டு அதன் வழமையாக இயக்கமே பாதிக்கப்படும் என்று தகவல்கள் உள்ளன.


செல்லிடப்பேசிகள் அரங்கேற்றிவரும் இத்தனை அனர்த்தங்களையும் விட இன்னும் பார்வைக்கு வராத பெரும் சூழலியற்சீர்கேடு ஒன்றும் உள்ளது. செல்லிடப் பேசிகளின் ஆயுள் குறைவு என்ற வகையில் பெருவாரியாக அவை இளைப்பாற ஆரம்பித்துள்ளன. விரைவில் மில்லியன் கணக்கான எண்ணிக்கையில் குப்பை மேட்டுக்கு வந்து விடும். சில வருடங்களில் ஆண்டு தோறும் அமெரிக்கர்கள் கழித்து எறியும் செல்லிடப் பேசிகளின் எண்ணிக்கை 130 மில்லியன்களாக இருக்கும் என்று inform என்னும் சூழல் ஆராய்ச்சி அமைப்பின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அதாவது ஆர்சனிக், பெரிலியம், கட்மியம், ஈயம், நிக்கல், நாகம் என்று சுமார் 65,000 தொன்கள் டிஜிற்றல் கழிவுகள். இவை எல்லாமே நீடித்திருந்து உயிர்களில்

செறியக்கூடிய நஞ்சுகள், நரம்புகளினதும், இனப்பெருக்க அமைப்புக்களினதும் செயற்பாடுகளை ஒழுங்கு குலைப்பதோடு புற்றுநோய்களையும் ஏற்படுத்தக்கூடியவை. குறிப்பாக குழந்தைகளையும் மிக மோசமாகப் பாதிக்க வல்லவை.

ஆனால் செல்லிடப் பேசி நிறுவனங்கள் இவை எதனையும் கண்டுகொள்வதாக இல்லை. ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்கள் என மறுத்து வருகின்றன. இவர்களுக்கு ஆதரவாக ஆய்வாளர் சிலரும் தங்களது ஆய்வுகளில் செல்லிடப் பேசிகளின் பாதிப்புக்கள் பற்றி எதுவுமே கண்டறியப்படவில்லை என நற்சான்றிதழ் கொடுத்துள்ளனர். அதே சமயம் இவர்களில் பலரும் செல்லிடப்பேசிகள் என்பதே சமீபத்திய அறிமுகம் என்பதால் நீண்டகாலம் பயன்படுத்தினால் என்ன ஆகும் என்பதை இப்போது கூறமுடியாது என்கின்றனர்.

இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறக்கும் இவ் அவசர உலகில் தொலைபேசிகளின் பாவனை தவிர்க்க முடியாது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதே அளவுக்கு செல்லிடப் பேசிகளின் பாவனையை மட்டுப்படுத்துவதும் தவிர்க்க முடியாதுள்ளது. இயன்றவரை Land Line தொலைபேசிகளைப் பயன்படுத்துதல், அவசரம் ஏற்படின் காதருகில் அழுத்திப் பேசுவதை விட அதனுடன் ear phoneஐ இணைத்துப் பேசுதல், Signal குறைந்திருக்கும் போது செல்லிடப் பேசிகளை பலவந்தப்படுத்தி பேச முற்படுவதைத் தவிர்த்தல், இதன் பழக்கத்திலிருந்து குழந்தைகளை விடுவித்தல் என்று செல்லிடப் பேசிகள் எங்களை ஆளவிடாது. அவற்றில் எமது ஆளுமைகளை செலுத்திப் பழகிக் கொள்ளுங்கள். இதன் மூலம் கைத்தொலைபேசிகளை நமக்குக் காலன் ஆகாமல் எமது உயிரைப் பறிக்காமல் பார்த்துக் கொள்ள முடியும்.

உசாத்துணை: ஏழாவது ஊழி





# தமிழும் தமிழரும்

**பொன்னையா விவேகானந்தன்** M.A
பன்மொழிக் கல்வித்திட்ட அலுவலர்,
ரொரான்ரோ மாவட்டக் கல்விச் சபை.
International Languages program officer
Toronto District School Board - Canada.

உலகெங்கும் நூற்றுக்கணக்கான மனித இனங்கள் வாழ்கின்றன. இவ்வினங்களைச் சார்ந்த எல்லோருமே மனிதர் எனப் பொதுவாக அழைக்கப்பட்ட போதும் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்தோரும் இனத்தின் பெயராலேயே அடையாளப்படுத்தப்படுகின்றனர். சீனா என்னும் நாட்டில் வாழ்வோர் சீனர் என அழைக்கப்பட்டாலும் அவர்களுக்குள்ளேயே பண்பாட்டாலும் மொழியாலும் வேறுபட்ட பல இனங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு இனங்களையும் வேறுபடுத்திக் காட்டவல்ல அடையாளங்களாகக் கருதப்படுவன. மொழி , பண்பாடு , பழக்கவழக்கங்கள் , நம்பிக்கைகள் , வழிபாடு , கலைகள் என்பனவாகும்.

"தனக்கென நீண்டகால வரலாற்றினையும் தனித்துவமான மொழி, பண்பாட்டு நடத்தைகளையும் கொண்டு குறிப்பிட்ட நிலத்தில் நீண்டகாலமாக, நிலையாக வாழும் ஒரு மனிதக் குழுமம் 'இனம்' என அழைக்கப்படும் தகுதியைக் கொண்டது" என, ஐக்கிய நாடுகள் சபையின் இனம் பற்றிய வரையறை தெரிவிக்கின்றது.

தமிழினம் என்றழைக்கப்படுகின்ற எம்மினமும் இந்த வரையறைக்கேற்ப மிக நீண்ட வரலாறு கொண்ட இனமாகும். இன்று உலகில் பேசப்படும் மொழிகளில் மிகப் பழைமையான மொழி தமிழ் என்பதை உலகத்தார் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதுவே எம் இனத்தின் பழமைக்குச் சான்றாகும்.

இனவமைப்பினை நாம் மூன்று வகைகளாகப் பகுக்கலாம். அவையாவன நாடு சார்ந்த இனவமைப்பு, மதம் சார்ந்த இனவமைப்பு , மொழி சார்ந்த இனவமைப்பு ஆகும்.

ஓரினம் தவிர்ந்த பிற இனத்தோர் பெரியளவில் இல்லாத நாடுகள் பலவுண்டு. அவ்வினங்கள் நாட்டின் பெயராலேயே அழைக்கப்படுகின்றன. அவர்கள் பேசும் மொழியாலேயே அந்நாடும் அமைகின்றது. எடுத்துக்காட்டாக ஜப்பான், ஸ்பெயின் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இஸ்லாமியர், யூதர் போன்றோர் மதஞ் சார்ந்த இனக்கட்டமைப்பைக் கொண்டோர் ஆவர். எந்த நாடுகளில் அவர்கள் வாழ்ந்தாலும் மதத்தின் பெயராலேயே தம்மைக் குறிப்பிட்டுக் கொள்வர்.

நாடு, மதம் இரண்டுக்கும் அப்பால் மொழியையே தமது அடையாளமாகக் கொண்டு வாழும் இனங்கள் உலகில் பலவுண்டு. தமிழர், தெலுங்கர், பஞ்சாபியர் மலையாளிகள் போன்றோர் இவ்வகையினர். இவ்வினத்தோர் வாழும் நாடு பலவினங்களையும், பல மதங்களையும் கொண்டதாகவிருக்கும். இவ்வினங்கள் தமது மொழியையும், மொழிவழியே தொடர்கின்ற தனித்துவமான பண்பாட்டையுமே தமது அடையாளங்களாகக் கொண்டிருப்பனவாகும்.

தமக்கெனவொரு தன்னாட்சியற்ற நிலையில் குறித்தவொரு நாட்டார் என அடையாளப்படுத்த முடியாத தமிழர், தாய்மொழியாகிய தமிழையே தமது முதன்மை அடையாளமாகக் கொண்டுள்ளனர். 15ம் நூற்றாண்டோடு தமது ஆளுமை மிக்க தன்னாட்சியை இழந்த தமிழர் 19ம் நூற்றாண்டுவரை சில சிற்றரசுகளையே கொண்டிருந்தனர். பிரித்தானியாரால் வேலைக்கழைத்துச் செல்லப்பட்ட தமிழர் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். போர்ச்சூழல் காரணமாகப் புலம்பெயர்ந்த தமிழர் பலர், ஐரோப்பிய வட அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளில் குடியேறி அங்கேயே வாழத் தலைப்பட்டு விட்டனர். இன்று உலகெங்கும் ஏறக்குறைய பத்துக்கோடி (100 மில்லியன்) தமிழர் வாழ்ந்து வருகின்றனர்.

பல நாடுகளில் வாழ்ந்துவரும் தமிழர் சைவம், வைணவம், கிறிஸ்தவம், பௌத்தம் உட்பட பல மதங்களைத் தழுவி வாழ்கின்றனர். எனினும் தமிழ் என்ற மொழித் தொடர்பாடல் ஓரினமாகப் பிணைக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் காலங்காலமாக மொழிவழியாகவே பேணப்பட்டு இணைக்கப்பட்டிருக்கும் இனமானவர். தமிழரது வரலாறு, பண்பாடு, நடத்தைகள், மரபுவழித் தொடர்ச்சிகள் எல்லாமே மொழி வழியாகவே ஒவ்வொரு தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இவை போன்ற இனவடையாளங்கள் அனைத்தையும் பேணிப் பாதுகாக்கும் பெட்டகமாகவும் மொழியே திகழ்கின்றது.

'இனத்தை அழிக்க வேண்டுமாயின் முதலில் அவ்வினத்தின் மொழியை அழிக்க வேண்டும்' என்பதே இனவழிப்பாளரின் கோட்பாடு. இவ்வாறு பலவினங்கள் அழிக்கப்பட்டுமுள்ளன.

எமது இனத்தினது அடையாளங்களான பண்பாடு, கலைகள், நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் என்பவற்றோடு பல்வகைப்பட்ட வரலாறுகளையும் நாம் மொழி வழியாகவே பேணி வருகின்றோம். மொழியே ஒவ்வொரு தலைமுறைக்கும் இவற்றைக் காவிச் செல்கின்றது. தமிழில் எழுதப்பட்ட பக்தி இலக்கியங்களைத் தவிர, எமது இன அடையாளங்கள் எதுவும் மதங்களில் இல்லை. மொழியே எல்லாவற்றையும் தாங்கி நிற்கின்றது.

அசுர வேகத்தில் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப மேலாண்மையும் உலகத்தை ஒரு குடையின் கீழ் கொண்டுவர முயலும் பல்தேசிய நிறுவன வணிக மேலாண்மையும் உலகெங்கும் ஆளுமை செலுத்துகின்றன. இவற்றினூடாக வளர்ந்து வருகின்ற, வறுமையுற்ற நாடுகளை வளர்ச்சி பெற்ற நாடுகள் வசப்படுத்த முயல்கின்றன. வசப்படும் நாடுகளும் இனங்களும் தமது தனித்துவமான அடையாளங்களைச் சிறிது சிறிதாக இழக்கத் தொடங்குகின்றன. இன்னும் ஐம்பது ஆண்டுகளில் பலவினங்கள்தமது அடையாளங்களை இழந்து அழிந்துவிடக் கூடிய இனங்கள் என ஐக்கிய நாடுகள் சபை பட்டியலிட்டவற்றுள் தமிழினமும் உள்ளடக்கம்.

நீண்ட வரலாற்றைக் கொண்டதும் ஒன்பது, பத்தாம் நூற்றாண்டில் உலகில் பெருநிலப் பரப்பை ஆண்டதுமான தமிழினம் இன்னும் ஐம்பது ஆண்டுகளில் தன்னடையாளத்தை இழந்துவிடும் என ஐக்கிய ஙநடுகள் சபை கருதுவதற்குக் காரணம் யாது?

வளர்ச்சியடையாத, தன்னாட்சியற்ற நாடுகளில் வாழும் இனமாக நாம் இருப்பதுவும் நம் வழிபாட்டுக்குரிய மதங்கள் யாவும் பிறமொழிகளைத் தளமாகக் கொண்டிருப்பதுவுமே முதன்மைக் காரணங்களாகும். அத்தோடு பலரும் வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கித் தொடர்ச்சியாகப் படையெடுத்துச் செல்வதும் காரணமாகக் கூறப்படுகின்றது.

உலகில் தமிழின் தாய்நிலங்களாகக் கருதப்படுகின்ற தமிழகமும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளுமே ஐக்கிய நாடுகள் சபையினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட காரணங்களோடு வேறுபல காரணங்களையும் அது அடையாளம் கண்டது.

இனத்தின் முதன்மை அடையாளம் எனப்பட்ட தாய்மொழி, தமிழ்க்கல்வி என்ற அளவில் பின்தங்கியிருப்பது கண்டறியப்பட்டது. கடந்த பல பத்தாண்டுகளாக உயர்நிலைக் கல்வியில் தமிழைக் கற்போர் தொகை வீழ்ச்சியடைந்து வருகின்றது. பெரும்பாலான பாடசாலைகளில் தமிழில் பட்டம் பெற்றோர் அல்லது தமிழை நன்கு கற்றறிந்தோர் ஆசிரியராக இல்லை. பத்தாம் வகுப்புவரை தமிழைக் கற்றோரே பல பாடசாலைகளில் தமிழைக் கற்பிக்கின்றனர். பெருகிவரும் மாணவர் தொகைக்கேற்ப தமிழ் கற்பித்தலில் ஆற்றல் மிக்க ஆசிரியர்கள் தமிழகத்திலும் இல்லை, இலங்கையிலும் இல்லை. மொழி தொடர்பான விழிப்புணர்வும் அக்கறையும் கூடப் பெருமளவில் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்விரு நாடுகளிலும் ஊடகங்களில் பயன்படுத்தப்படும் தமிழ்மொழி நடை இதற்குச் சான்றாகும்.

தொல்காப்பியம் தொட்டு இன்றுவரை பல்லாயிரம் நூல்கள் தமிழில் எழுதப்பட்டு விட்டன. தொல்காப்பியர் முதல் புதுவை இரத்தினதுரை வரை ஆயிரக்கணக்கானோர் தமிழிலேயே வாழ்வையும் வரலாற்றையும் பதிவு செய்துள்ளனர். தமிழகத்திலும் இலங்கையின் வட, கிழக்கிலும் உள்ள நூலகங்கள் இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களைக் கொண்டுள்ளன. இவை எல்லாவற்றையும் வாசித்துப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் மொழியறிவு அவசியமல்லவா. இனத்தின் தொடர்ச்சியைத் தமிழினமாகக் கொண்டு செல்லவல்ல மொழிக்கல்வியைப் பேணிச் செய்வதில் உலகெங்கும் வாழும் தமிழர் அனைவரும் பின்நிற்கின்றோம் என்பதே உண்மை.

நூலகங்களில் ஆயிரக்கணக்கில் நூல்களைச் சேகரித்து வைப்பதைவிட முக்கியமானது வளரும் தலைமுறையினருக்கு மொழிக்கல்வியை ஊட்டுதல். பல பத்தாண்டுகளாகப் பின்னடைவுற்றிருக்கும் இத்துறையில் சமூகமாக இணைவுற்று அனைவரும் பங்காற்றுதல் வேண்டும். தவறுவோமாயின் ஐக்கிய நாடுகள் சபையின் கூற்று மெய்யாகிவிடும்.

***
















இந்த சமூகநாடி இதழ் மட்டுமல்லாது தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் சமூக நாடியானது சிறப்பாக வெளிவரவேண்டும் என்கின்ற அக்கறையுடன் தொர்ச்சியாக ஐந்து ஆண்டுகளுக்குரிய புத்தக வேலை கள் அனைத்திற்குமான செலவினை ஆர்வத்துடன் முன் வந்து ஏற்றுக்கொண்டு நமது சுமையை பெரிதளவு குறைத்திருக்கும் ஜேர்மனிவாழ் திரு.சிவஞானசுந்தரம் வாசன் அவர்களுக்கு இந்த சிறிய குறிப்பின் மூலம் நன்றி சொல்வதில் பெருமைப்படுகின்றோம்.

-சனசமூக நிலைய நிர்வாகம்-

# ஊர்க்கதை

**திரு.இ.பாலேந்திரா**
பொறியியலாளர்,
தும்பளை.

**பி**றந்து வளர்ந்த ஊரின் அருமை, நாம் அவ்வூரினை விட்டு விலகி இருக்கும்போதே பெரிதும் உணரக்கூடியதாக உள்ளது. அதுவும் நகர்ப்புற வாழ்க்கை பக்கத்து வீட்டுக்காரரைக்கூட இவரை எங்கோ நான் பார்த்திருக்கின்றேன் என்று யோசித்து.... அட இவர் எனது அயல் வீட்டுக்காரர் என்று நினைப்பதோடு சரி.... ஆனால் ஊர் என்றால் எங்கும் புன்முறுவலுடன் வரவேற்கும் உறவுகள்.... குசலம் விசாரிக்கும் நட்புகள். மேலும் கோவிலடி... இதில் இருந்து நாம் நண்பர்களுடன் கழித்த பொழுதுகள். முன்பெல்லாம் பெரும்பாலான இளைஞர்கள் பின்னேரப் பொழுதுகள் பெரும்பாலும் எமது தும்பளை மேற்கு வரத விநாயகர் ஆலயத்தினை அல்லது கணக்கிலாவத்தை மைதானத்தினை சூழ்ந்தே காணப்பட்டு வந்தது. பின்னேரங்களில் கடதாசி விளையாட்டு (சீட்டாட்டம்), தாயம் மற்றும் ஊர்க்கதைகள் என கோவிலடி அமர்க்களமாயிருக்கும். மேலும் படிக்கும் மாணவர்கள் தேவையற்ற விதத்தில் இங்கு வந்து அமர்வது அங்குள்ள இளைஞர்களால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். நான் ஒரு தடவை எமது கல்வி பொது சாதாரணப் பரீட்சை ஒருவருட காலத்திற்கு நாட்டுச்சூழல் காரணமாக பிற்போடப்பட்டதால் (1990ல்) கோவிலடிக்கு சென்று அமர்ந்திருந்த போது கண்டிக்கப்பட்டேன்.

அதுவும் ஆறுபேர் 304 என்ற சீட்டாட்டத்தினை விளையாட அதனைப்பார்த்து அதற்கு கொமென்ற் அடிக்கவென இன்னொரு 10 பேர் பின்னால் அமர்ந்திருப்பர். ஒரு தடவை துரும்பு வைத்தவர், தனது துரும்பை தனது தரப்பினருக்கு அறிவிக்க தனது நெஞ்சில் கைவைத்து சிக்னல் கொடுத்ததினை (Hearts ஆமாம்) கவனித்த எதிர்த்தரப்பினர் வாக்குவாதமிட்டது இன்றும் எனக்கு ஞாபகம்.

பின்குறிப்பு

THE
FOUR SUITS



CLUBS HEARTS SPEDES DIAMONS

தமிழர்களிடயே மிகவும் பிரபலமான ஒரு சீட்டு விளையாட்டு 304 சீட்டு ஆட்டம் ஆகும். கொண்டாட்டங்களில், ஒன்றுகூடல்களில், நண்பர்களிடையே இவ்விளையாட்டு விளையாடப் படுவதுண்டு. இவ்விளையாட்டுக்கு நான்கு அல்லது ஆறு ஆட்டக்காரர்கள் தேவை.

80களில் ஊரில் பல வீடுகளில் தொலைக்காட்சி பெட்டி இல்லாத காலம். குறிப்பிடத்தக்க சில வீடுகளில் மட்டும் தொலைக்காட்சிப்பெட்டி இருந்தது. தமிழ் நிகழ்ச்சிகளினை தொலைக்காட்சியில் பார்ப்பது குதிரைக்கொம்பு. மாதமொருமுறை ரூபவாஹினியில் தமிழ்ப்படம் ஒளிபரப்பப்படும். அதுவும் ஒரு மொக்கைப்படம் என்றாலும் அனைத்து உறவுகளும் சேர்ந்து படம் பார்த்த காலம். இதனை சரியாக அவதானித்த எமதூர் இளைஞர்கள் சேர்ந்து திரைப்படங்களினை ஒரு இடத்தில் ஒரு தொகைப்பணத்தினை அறவிடுவதன் மூலம் காட்டலாம் என்ற முடிவுக்கு வந்தனர். திரையிடப்பட இருக்கும் படம் தொடர்பான விபரங்களினை ஸ்பீக்கர் கட்டிய வாகனங்கள் மூலம் ஊருக்கு அறிவிக்கப்படும். இதனைத் தொடர்ந்து ரிக்கட்டுகள் மக்களுக்கு விற்பனை செய்யப்படும். ஒருபொது இடத்தைச் சுற்றிவர சாக்குகள் தரப்பாள்கள் கொண்டு மறைத்து (வெளியில் இருந்து இலவசமாக பார்க்கக்கூடாதாம்)... ஒரு குறிப்பிட்ட பாதை வழியே மட்டும் டிக்கட் எடுத்தவர்கள் மட்டும் உள்ளே வர அனுமதிக்கப்படுவார்கள். திரைப்படம் திரையிடப்படப் போவதாக அறிவிப்பாளரினால் தொடர்ச்சியாக அறிவிக்கப்படும். குறிப்பிட்ட தொகையினர் உள்ளே வந்ததும் திரைப்படம் ஆரம்பமாகும்.

ஒரு தடவை "தப்புத்தாளங்கள்" எனும் திரைப்படம் திரையிடப்படுவதாக அறிவித்து டிக்கட்டுகள் விற்பனை செய்யப்பட்டது. திரைப்படம் காண்பிக்கப்படும் என்று குறிப்பிட்ட தினத்தில் மக்கள் திரைப்படத்தினைப்பார்க்க குழுமியிருந்த சந்தர்ப்பத்தில் அறிவிப்பாளர் இவ்வாறு ஒரு அறிவிப்பினை வெளியிட்டார்." அன்பான எமதுறவுகளே கொப்பி (கசட்டை கொப்பி என்று கூறுவது வழமை) கிழிந்ததனால் இன்று தப்புத்தாளங்களுக்குப் பதிலாக "........" (ஞாபகம் இல்லை) திரையிடப்படும். ஆயினும் நம்மவர்களின் நினைப்பு பெரும்பாலும் இப்படித்தான் இருந்தது. "பொடியள் நல்ல படத்தினைத்தான் போட இருந்தவர்கள் ஆனால் இந்த கொப்பி கிழிஞ்சதற்கு அவங்கள் என்ன செய்யிறது" என்று எந்தவித எதிர்ப்புமின்றி அறிவிக்கப்பட்ட படத்தினை பார்த்துவிட்டே அகன்றனர்.

வேறொரு சமயத்தில் டிக்கட் பரிசோதனை செய்யும் இடத்தில் வெளிச்சம் குறைவாக இருந்ததை அவதானித்து எமது உறவினர் விற்பனை செய்த ரிக்கட் போல இருந்த வேறு டிக்கட்டுகளினை எங்கள் அனைவருக்கும் வழங்கி, இந்த டிக்கட்டினை கொடுத்து விட்டு உள் நுளையுமாறு கேட்கப்பட்டோம். நாம் கிட்டத்தட்ட 10-11 பேர் இந்த மாற்று டிக்கட்டுடன் வெற்றிகரமாக உள் நுழைந்தோம். உள்ளே நுழைந்து வெவ்வேறு இடங்களில் அமர்ந்து கொண்டோம். கண்டுபிடித்தாலும் வெளியேற்றாமல் இருக்க இந்த ஏற்பாடு.

இதன் பின்னர் எமது முன்பள்ளிக்குச் செல்லும் பாதையில் இருந்து தெற்குப் பக்கமாக உள்ள இரண்டாவது காணியில் (முச்சந்தியில் அமைந்த) திரைப்படங்கள் திரையிடப்படுவது வழமையாயிற்று. அந்த இடமும் "அப்பா அரங்கு" என்று குறிப்பிடப்படலாயிற்று. ஸ்பீக்கரில் மக்களுக்கு அறிவிப்பதற்குப் பதிலாக முச்சந்தியில் அமைந்திருந்த லைட்போஸ்டில் ஒரு கரும்பலகையில் அழகான எழுத்தில் விபரங்கள் எழுதப்பட்டு மக்களுக்கு அறிவிக்கப்படும் வழமை ஏற்பாடாயிற்று.

இதனை எழுதும்போது திரைப்படங்களினை ஊரில் பார்வையிட்ட போது நிகழ்ந்த மேலும் சில சுவாரசியங்கள் நினைப்பில் அதனையும் இதில் பதியலாம் என்ற நினைப்பில் இரகுவரன் ஆசிரியரிடம் விஞ்ஞானம் கல்வி கற்று வந்த காலம் நாங்கள் ஒரு ஏழு/ எட்டு பேர் ஒரே "கிளிக்" நண்பர்கள் அனைவரும் தமது ஊரில் எங்கேனும் திரைப்படம் திரையிடப்படுவதாக

இருந்தால் எமக்கு முன் அறிவித்தல் தருவார்கள். நாம் அங்கு சென்று திரைப்படங்களினை பார்வையிடல் வழமை. இப்படி ஒரு நாள் புற்றளைப் பிள்ளையார் கோவிலடிக்கு அருகே உள்ள வீட்டில் படம் என்று அறிவிக்கப்பட்டது. நாங்கள் மூன்று பேர் போவோம் என்று அங்கே சென்ற பின்னர்தான் எமக்கே தெரிந்தது நண்பனுக்கும் திரைப்படம் காண்பிக்கப்படும் வீட்டுக்கும் ஒரு பரீட்சயம் இல்லை என்று. சரி முன்வைத்த காலைப் பின்வைக்க வேண்டாம் என்று ஒரு மாதிரி வீட்டுக்குள் சென்று அமர்ந்தோம். முதலில் ஒரு கல்யாணவீட்டுக் கொப்பி போட்டார்கள். அதில் வந்தவர்கள் யாரென்றும் தெரியாது. ஒரு மாதிரி முடிந்து திரைப்படம் ஆரம்பித்தது. சரியாக முதுகைச் சாய்த்துக்கொண்டு பார்ப்போம் என்று பின்னால் நோட்டம் விடப்பட்டபோது யாரோ ஒருவர் கதிரையில் அமர்ந்திருப்பது ஒரு backround தெரிந்தது. மெதுவாக பின்னுக்கு அரக்கிக்கொண்டு சென்று கதிரைக்காலில் முதுகைச் சாய்க்கவும் ஒரு குரல் 'அடே எங்கையடப்பா வந்தனி"? தெரிந்த குரலாக இருக்கவே என்று திரும்பினால் எங்களுக்கு வணிகக்கல்வி கற்பித்த சிவலிங்கம் சேர். பிறகென்ன தொடங்கிய படம் முடிய அசட்டுச்சிரிப்புடன் மெதுவாக வெளியேறினோம்.

இதேபோல் எமது சிறுவயதில் (1986-1987) என்று நினைக்கின்றேன் சரிவர ஞாபகம் இல்லை. ஒரு வீட்டில் படம் என்று அனைத்து உறவுகளும் உள்ளே சென்று அமர்ந்து படம் பார்க்க தயாராக இருந்தோம். படம் ஆரம்பிக்கக்காணோம். படம் காட்ட இருந்தவர்களிடையே ஏதோ ஒரு குழப்பம் வெளியில் நின்று கதைப்பதும் உள்ளே வருவதுமாக இருந்தனர். ஒருவாறு முன்னே வந்து இன்று படம் காட்ட முடியாது அனைவரும் வெளியில் போங்கள் என்று தெரிவிக்கப்பட்டது. எமக்கென்றால் சரியான கவலை. என்ன பிரச்சினையென்று சொல்ல யாரும் தயாரில்லை. நாங்கள் வெளியே வந்து பார்த்த போது நண்பன் வெளியில் வரவில்லை. ஒருவாறு சலிச்சுக்கொண்டு உள்ளே இருந்து விட்டானே என்ற நினைப்புடன் வீட்டுக்குச் சென்றோம். அடுத்த நாள் காலையில் அம்மாவினதும் நண்பனின் தாயாரினதும் சம்பாசனைதான் கைலைட் "நேற்று இவங்கள் உங்கால வேற படம் போட்டவங்களாம்.... போன எல்லாரையும் துரத்தி விட்டாங்கள். இது அம்மா.... சிறிது நேர அமைதியின் பின்னர் நண்பனின் தாயார் "என்றை கொல்லையிலிருந்து போனது விடியத்தான் வீட்டுக்கு வந்தது.... போறன் பொறு போய் குடுக்கிறன் பார்" நண்பனினை நினைக்கையில் பாவமாகவும் பொறாமையாகவும் இருந்தது.

தற்போது வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிப்பெட்டிகள்... வேண்டிய தமிழ் நிகழ்ச்சிகளினைப் பார்க்கக் கூடியவாறு வசதிகள், வாய்ப்புக்கள் இந்தியாவில் வெளிவரும் அன்றே அதே திரைப்படத்தினை நாம் பார்க்கக்கூடிய வாய்ப்பு. ஆனாலும் எம்மிடம் அன்று நான் அனுபவித்த உணர்வுகள் இன்று இல்லை. பெரும்பாலான குடும்ப உறவுகள் தொலைக்காட்சி நாடகங்களுடன் தமது பொழுதைப் போக்குகின்றனர்.

ஒவ்வொரு ஞாயிறுகளிலும் நான் ஊர் வருவது வழமை. அப்போது நான் சில நேரங்களில் முருகன் மண்டபத்தில் அமர்ந்து முன்னைய நினைப்புகளில் மூழ்குவது உண்டு. வேலை மற்றும் குடும்பம் என்று வேறூர்களிற்குச் சென்றதால் நண்பர்கள் பலர் இன்று ஊரில் இல்லை.

என்ன இல்லையென்றாலும் அதே புன்முறுவலுடன் உறவுகள்
புதிய இளைய நட்புகள்
"சொர்க்கமே என்றாலும் அது நம் ஊரைப் போல வருமா"

****



# அதிகாரப் பகிர்வு : ஓர் அறிமுகம்

திரு.சி.சங்கநாதன்
தும்பளை மேற்கு,
தும்பளை.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து ஏறத்தாழ ஆறு வருடங்கள் கடந்துவிட்ட சூழ்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து "தேசிய அரசாங்கமாக" ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற இந்த வேளையில், பல தசாப்தங்களிற்குப் பின்னர் இலங்கையின் எதிர்கட்சித் தலைவராக ஒரு தமிழர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் அரசியல் நோக்கங்கள், அரசியல்வாதிகள் மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்களின் பேசு பொருளாக இனப்பிரச்சினைத்தீர்வு, சமஸ்டி மற்றும் ஒற்றையாட்சி என பல விடயங்கள் உள்ளன. இன்றைய நல்லாட்சி அரசாங்கமானது இலங்கை இன முரண்பாட்டிற்குரிய தீர்வுத்திட்டத்தினை உள்ளடக்கிய அரசியலமைப்பு திருத்தம் அல்லது மாற்றத்தினை முன்மொழிந்து, அதற்கான செயற்றிட்டத்தினை ஆரம்பித்துள்ள இந்த வேளையில் இலங்கை அரசாங்க அமைப்பு முறை அதிகாரப் பகிர்வு தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதனை தமிழ் பேசும் மக்கள் அரசியல் வாதிகளிடமும், அரசியற் கட்சிகளிடமும் விட்டுவிட்டு இருக்கின்ற போக்கை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மக்களுடைய பங்களிப்பு இல்லாமல் எந்தவொரு தீர்வினையும் பெற்றுவிட முடியாது. இதனையே வரலாறு எமக்கு இடித்துரைக்கின்றது. இனப்பிரச்சினைக்கான அடிப்படை என்ன, இது எவ்வாறு பூதாகரமாக வளர்ந்து ஆயுத மோதல்களில் முடிந்தது என்பது தொடர்பான வரலாற்றுப் பார்வை அவசியமானது. எனவே ஜனநாயகம், அரசாங்க அமைப்புமுறை, அதிகாரப் பகிர்வு என்பன தொடர்பாக தமிழ் பேசும் மக்கள் பூரண விளக்கத்தினை பெற்றிருத்தல் காலத்தின் கட்டாயமாகும்.

இன்று ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் ஜனநாயக ஆட்சிமுறை நிலவுகின்றது. மக்களால் மக்களுக்கான மக்களின் ஆட்சியே ஜனநாயகம் என ஆபிரகாம்லிங்கன் குறிப்பிட்டுள்ளார். வாக்குரிமையினைப் பயன்படுத்தி பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கமைவாக அரசாங்கமானது குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை தெரிவு செய்யப்படுகின்றது. ஜனநாயக ஆட்சி முறையானது ஐரோப்பிய நாடுகளில் சிறப்பானதாகவும், உயர்வான அபிவிருத்தி இலக்கினை நோக்கி கொண்டு செல்லக்கூடியதாகவும் இருக்கின்ற அதேவேளை ஆசிய நாடுகளின் பொருளாதார ஸ்திரமற்ற தன்மைக்கு இதுவும்ஒரு காரணமாக அமைந்து விடுகின்றது. மக்களிடம்

அரசியல் ஆர்வமும், அறிவும் அதிகரித்து அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டால் ஜனநாயக ஆட்சிமுறையும் நாட்டின் பொருளாதாரமும் ஒருங்கே வளர்ச்சியடையும் என்பது மறுப்பதற்கில்லை.

தற்கால மக்களாட்சி அரசாங்கங்கள் யாவும் மூன்று உறுப்புக்களைக் கொண்டுள்ளன. சட்டமன்றத்துறை, நிர்வாக/ ஆட்சித்துறை, நீதித்துறை என்பனவே அவையாகும். சட்டத்துறையானது சட்டமியற்றும் (பாராளுமன்றம்) பணியினை மேற்கொள்கின்றது. சட்டங்களை அமுல்படுத்தி நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாத்து நாட்டை பரிபாலிப்பது ஆட்சித்துறை ஆகும். (நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி, அமைச்சரவை, அரச திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள்) சட்டங்களிற்கு வியாக்கியானம் அளித்து நீதி வழங்கும் பணியினை நீதித்துறை மேற்கொள்கின்றது. இவ்வாறு அதிகாரங்களை மூன்று துறைகளாக பிரிக்கப்பட்டு நாடு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இந்த மூன்று அதிகாரங்களும் ஒரு நிறுவனத்திடமோ அல்லது தனிநபரிடமோ குவிக்கப்படும் பொழுது எதேச்சதிகாரம் தோன்றுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் வேறு எந்தவொரு நாட்டிலும் இல்லாத வகையில் இந்த மூன்று துறைகளும் தெளிவாக பிரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சட்டத்துறையான காங்கிரஸ் (செனட், பிரதிநிதிகள் அவை) சட்டமியற்றும் பணியினை மேற்கொள்கின்றது. இதன் பாராளுமன்ற (காங்கிரஸ்) உறுப்பினர்கள் எவரும் ஆட்சித்துறை அமைச்சர்களாக இல்லை. அதே போல ஆட்சித்துறையான ஜனாதிபதி பாராளுமன்ற (காங்கிரஸ்) உறுப்பினராகவும் இல்லை. சட்டங்களை முன்மொழியவும் முடியாது. அதே போல நீதித்துறையானது மற்றய இரு துறைகளின் தலையீடு இன்றி சுயாதீனமாகச் செயற்படுகின்றது. இந்த மூன்று அதிகாரங்களும் ஒருவரின் கைகளில் குவிக்கப்படும் பொழுது ஏற்படும் விளைவுகளை எமது மக்கள் நன்றாக அனுபவித்து உணர்ந்திருப்பார்கள். மேலும் உதாரணமாக ஜேர்மனியின் ஹிட்லரின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிட முடியும்.

நாட்டின் ஒவ்வொரு கடைக்கோடிக் கிராமங்களில் உள்ள மக்களின் நடைமுறைப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் எங்கோ மத்தியிலிருக்கும் அரசாங்கத்தினால் தெரிந்து கொள்ள முடியாது. இலங்கை போன்ற சிறிய நாடுகளிலேயே மத்திய அரசாங்கத்தால் அனைத்து மக்களின் பிரச்சினைகளையும், எதிர்பார்ப்புக்களையும் தெரிந்து பரிகாரம் காணுவதில் இடர்பாடுகள் அதிகம் என்றால் இந்தியா போன்ற நிலப்பரப்பில் பெரிய நாடுகளின் மத்திய அரசாங்கத்தினால் எப்படி முடியும். நாட்டினை நிர்வகிப்பதனை இலகுவாக்கும் பொருட்டு நிர்வாக வசதிக்காக மத்திய அரசானது தனக்கு கீழ் சிறிய சிறிய நிர்வாக அலகுகளை உருவாக்கிக் கொள்கின்றது. இந்த சிறிய நிர்வாக அலகுகளே மாநில அல்லது மாகாண அரசுகளும் உள்ளூராட்சி மன்றங்களுமாகும்.

இன்று பெரும்பாலும் உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளில் அதிகாரங்கள் மத்திய மாநில் அரசுகளிடம் பகிரப்பட்டுள்ளது. எனினும் இந்த அதிகாரப்பகிர்வு ஒவ்வொரு நாடுகளிலும் ஒவ்வொரு விதமாக உள்ளது. பொதுவாக நாம் இதனை இரண்டாக வகைப்படுத்தலாம். ஒன்று ஒற்றையாட்சி மற்றையது கூட்டாட்சி அல்லது சமஷ்டி என்பதாகும். அரசாங்கத்தினுடைய அதிகாரங்கள் ஒரு மத்திய அரசாங்கத்திடம் குவிக்கப்பட்டிருப்பின் அது ஒற்றையாட்சி அல்லது ஒருமுக ஆட்சி எனப்படும். இங்கு மத்திய அரசாங்கத்தினால் சார்நிலையிலுள்ள நிர்வாக அலகுகளை (மாநில் அரசுகள், உள்ளூராட்சி மன்றங்கள்) உருவாக்கவும், அழிக்கவும் முடியும். பல அரசுகள் ஒன்றிணைந்து புதிய அரசு ஒன்றை உருவாக்குவதுதான் கூட்டாட்சி அல்லது சமஷ்டி

ஆட்சி எனப்படும். சமஷ்டியில் மத்திய, மாநில அரசுகளிற்கிடையில் அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்படும். இங்கு மாநில அரசுகள் தன்னாட்சி உரிமையுடையனவாகும்.

ஒற்றையாட்சிக்கும் கூட்டாட்சிக்கும் இடையிலான பாரிய வேறுபாடாக கொள்ளப்படுவது யாதெனின், ஒற்றையாட்சியில் சார்நிலையில் உருவாக்கப்படும் நிர்வாக அலகுகளை ஒரு பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இரத்துச் செய்ய முடியும். மாறாக சமஷ்டியில் சார்நிலை நிர்வாக அலகுகளை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இரத்துச் செய்ய முடியாது என்பதாகும். சமஷ்டி அரசியலமைப்பில் / யாப்பில் சார்நிலை நிர்வாக அரசுகளையும், அவற்றுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்ட முறை பற்றியும் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும். சாதாரண சட்டங்களினால் இதனை ஒன்றும் செய்துவிட முடியாது.

ஐக்கிய இராச்சியம் அல்லது பெரிய பிரித்தானியாவானது இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வடக்கு அயர்லாந்து என நான்கு மாநிலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு மாநிலங்களும் சார்நிலையில் சட்டமியற்றும் நிறுவனங்களைக் கொண்டுள்ளன. கணிசமான அதிகாரங்கள் இவற்றுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. எனினும் இவற்றினை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மத்திய அரசாங்கத்தினால் எந்நேரமும் இரத்துச் செய்ய முடியும் என்பதனால் பிரித்தானியாவை ஒற்றையாட்சி நாடு என வகைப்படுத்த முடியும். எனினும் இந்திய சமஷ்டியில் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை விட பிரித்தானியாவின் நான்கு மாநிலங்களும் ஒப்பீட்டு ரீதியில் அதிகளவான அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் கொண்டுள்ளன.

பொதுவாக சமஷ்டியில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களான தேசிய பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், நாணயம் அச்சடித்தல் போன்ற விடயங்களை மத்திய அரசுக்கும் தலமுக்கியத்துவம் வாய்ந்த விடயங்களான சட்டம் ஒழுங்கு, சாலை, போக்குவரத்து, விவசாயம் போன்ற துறைகளை மாநில அரசுகளிடமும் பகிரப்பட்டுள்ளன. கூட்டாட்சியின் தாய்நாடான அமெரிக்காவில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பன்னிரண்டு விடயங்களை மத்திய அரசுக்கு ஒதுக்கி விட்டு ஏனைய விடயங்களை மாநில அரசுகளிடம் பகிரப்பட்டுள்ளன. இவ்வாறு அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களும் ஒப்பீட்டளவில் உலகிலேயே அதிக அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் கொண்டமாநிலங்களாக திகழ்கின்றன.

ஒற்றையாட்சி நாடான இலங்கையில் 1987ம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒன்பது மாகாணங்கள் உருவாக்கப்பட்டு, இதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாக இணைத்து, எட்டு மாநில அரசுகள் ஸ்தாபிக்கப்பட்டன. பதின்மூன்றாவது அரிசியலமைப்பு திருத்தம் மூலம் ஒருசில அதிகாரங்கள் மாகாண அரசுகளிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த அரசுகள் ஒவ்வொன்றும் சார்நிலையில் சட்டமியற்றும் நிறுவனங்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும் கொண்டுள்ளன. ஆனாலும் இவை மத்திய அரசாங்கத்தினுடைய அல்லது பாராளுமன்றத்தினுடைய ஒப்புதல் இல்லாமல் எதனையும் நிறைவேற்றிவிட முடியாது. மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையானதல்ல. மத்திய அரசுத் தலைவரால் (ஜனாதிபதியால்) நியமிக்கப்பட்ட ஆளுநரின் ஒப்புதல் மாகாண சபைகளிற்கு அவசியம். இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணசபையையும் முதலமைச்சரையும் விட ஆளுநருக்கு அதிகாரங்கள் கூடுதலாக உள்ளது என மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டுகின்றனர். அதே நேரம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மாகாண சபைகளை கலைக்கவும், இரத்துச் செய்யவும் மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

ஒத்த தன்மையுடைய நாடுகள் ஒன்று சேர்ந்து உருவாக்குவதுதான் மட்டும் சமஷ்டி என்றில்லை. மாறாக ஒரு நாட்டில் பல தேசிய இனங்கள் உள்ளபோது அவர்களுடைய தன்னாட்சி உரிமைகளுக்கு மதிப்பளித்து சமஷ்டி உருவாக்கப்படலாம். உதாரணமாக இந்திய சமஷ்டியை குறிப்பிட முடியும். இந்தியாவானது மொழி வழி மாநிலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அறிவு பூர்வமாக சிந்திக்கும் சமுகங்கள் சமஷ்டி எண்ணக்கருவினையே ஆதரிக்கின்றன. இவ்வகையில் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் சமஷ்டியானது தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஒப்பானது என திட்டமிட்டு பரப்பப்பட்டு வருகின்றது. எனினும் சமஷ்டியானது பிரிவினையை தோற்கடிக்கும் விடயமாகும். பல இன மத சமுதாயத்தினைக் கொண்ட இந்திய பெரு நாடானது சமஷ்டி அரசாங்க முறையினால்த்தான் இந்திய தேசமாக நிமிர்ந்து நிற்கின்றது. சமஷ்டி நாடுகளில் வலுவான எழுதப்பட்ட அரிசியலமைப்பும், சுயாதீனமான நீதித்துறையும், சுதந்திரமான ஊடகத்துறையும் அவசியமானதாகும்.

இவ்வகையைப் பொறுத்தவரை தமிழ்பேசும் சமுதாயத்தினர் சமஷ்டி ஆட்சி முறையினை விரும்புகின்றனர். இவர்கள் ஒற்றையாட்சியின் கீழ் அனுபவித்த சொல்லொணா துயரங்களையும் உயிர், உடமை இழப்புக்களையும் மனதிற் கொண்டு சமஷ்டி ஆட்சி முறையே இனமுரண்பாட்டிற்கான தீர்வாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அதே போல் சிங்கள மக்கள் சமஷ்டி முறையினை வெறுக்கின்றனர். இந்நிலைமைகளிற்கு ஏற்ப முழுமையான சமஷ்டியுமில்லாமல் , ஒற்றையாட்சியும் இல்லாமல் இலங்கைக்கு பொருத்தமான முறையில் அதிகாரங்கள் பகிரப்படுவது அவசியமானது ஆகும். இந்திய சமஷ்டி போல அரைகுறை சமஷ்டி இலங்கைக்கு பொருத்தமானதாக அமையலாம். இந்தியநாடு ஒற்றை ஆட்சி முறை சமஷ்டிதான். ஆனால் கட்டாயமாக சமஷ்டி என்றில்லை என்ற அளவுகோலின் அடிப்படையிலேயே இந்திய அரசியலமைப்பு அமைந்துள்ளது.

இவ்வாறும் உலகில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகையில் அதிகாரங்களை மத்திய, மாநில அரசுகளிற்கு இடையில் தத்தமக்கேயுரிய தனித்துவங்களுக்கு ஏற்ப பகிர்ந்து கொண்டுள்ளன. எனவே மக்கள் இவற்றையெல்லாம் நன்கு புரிந்து கொண்டு பொருத்தமான ஆட்சி முறைமையினை ஏற்படுத்த பாடுபட வேண்டும். அனைவரும் அரசியல்அறிவு உடையவர்களாகவும், அரசியல் ஆர்வம் மிக்கவர்களாகவும் இருந்தால் மட்டுமே எமது சமுதாயத்திற்கு ஒரு தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும். பொதுமக்களின் அரசியல் பங்குபற்றுதல்களும் புரிதல்களுமே ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு வழிசமைக்கும்.





## 13.05.2001 அன்று நடைபெற்ற திரு பா. இரகுவரனின் 'ஊரும் வாழ்வும்' நூல் வெளியீட்டு விழாவில் அமரர் பண்டிதர் க. சச்சிதானந்தன் ஆற்றிய பிரதம விருந்தினர் உரை

தொகுப்பு: கலாநிதி நா. சிவபாலன

**தொகுப்பாளர் குறிப்பு:**

ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும் எனது தம்பியுமான திரு பா இரகுவரனின் மேற்படி நூல் வெளியீட்டு விழாவில் அமரர் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள் இந்தக் கிராமம் பற்றி நாங்கள் அறிந்திராத பல விடயங்களை எடுத்து அழகு தமிழில் உரையாக வழங்கினார். கையெழுத்துப் பிரதியாக அவர் வைத்திருந்த உரையை அவரிடம் கேட்டு வாங்கி எனக்கு ஒரு போட்டோ பிரதி எடுத்துக் கொண்டேன். பதினைந்து வருடங்களுக்கு முந்தியது என்றாலும் அது இப்போதும் இன்று பூத்த மலர்போல புதுமணம் வீசுகிறது. இடம் கருதி சில விடயங்களை தவிர்த்து மிகுதி முழுவதையும் அவரது சொற்களிலேயே தந்துள்ளேன்.

**பண்டிதர் சச்சிதானந்தனின் உரை:**

நூல் வெளியீட்டு விழாக்களிலே பிரதம விருந்தினர் என்று ஒருவரை அழைக்கிறார். அவர் என்ன பேச வேண்டும் என்ற சம்பிரதாயம் எனக்குத் தெரியவில்லை.



நூலைப்பற்றிக் கருத்துரை வழங்குவதற்கும், அறிமுகவுரை வழங்குவதற்கும் வெவ்வேறாகப் பேச்சாளர் உள்ளனர். ஆகையால் நூலைப்பற்றிப் பேசவேண்டியது இல்லை என்பதுதான் அதன் கருத்தாயிருக்கலாம். எனினும் நூலைப் பார்த்தவுடன் ஆயிரமாயிரம் எண்ணங்கள் நான்முந்தி நீமுந்தி என்று இடித்துக் கொண்டு மனத்தில் நுழைகின்றன.

வெளியிலே பல்குழல் ஏவுகணை, விமானக் குண்டு வீச்சு, தென்மராட்சிச் சகோதரர்களின் கண்ணீர் காய்ந்த முகங்கள் இவற்றுக்கிடையே, பதினான்கு வருடமாக இடம் பெயர்ந்து நிற்கும் எனக்கு ஒரு ஆனந்தமான வாழ்வை இந்நூல் நினைவூட்டுகின்றது.

எழுபது வருடங்களுக்கு முன் நடந்த அதே வழிகளில் இன்று போகும் போது, அந்த இளமை நினைவுகள் ஒரு ஆனந்தத்தை உண்டாக்குகின்றன. கற்கோவளம் வெண்மணற் குன்றுகளில், நிலாப்போன்ற அப்பழுக்கற்ற மணலில் கால் பட்டது, நெல்லண்டையில் செட்டி வர்த்தகன் கூத்தை விடிய விடிய அனுபவித்தது, இலட்சுமணன் தோட்டக் குளத்திலே மாமரத்தில் ஏறி நீரில் குதித்துச் சுழியோடியது, அதற்குக் கல்லெறி பட்டது, அதனை ஒரு பாட்டாக இலட்சுமணன் தோட்டச் சுவரிலே கரியால் எழுதியது, கல்கி 1938ஆம் ஆண்டு பருத்தித்துறை வந்தபோது கவிதையில் சைவ ஊழியர் இயக்கச் சார்பாக வரவேற்புப் பத்திரம் வாசித்தது, சுத்தானந்த பாரதிக்கு வரவேற்புப் பத்திரம் எழுதியது, பஞ்சநாத சர்மா நடித்த நாடகத்தை உருவாக்கியது- இத்தியாதி நினைவுகள் - இதைப் போல் ஆயிரம் என் மனக்கண்முன் வந்து ஒரு இன்ப வாழ்வை நினைவூட்டுகின்றது.

இரகுவரன் சில நாட்டுப் பாடல்களைக் கொடுத்திருக்கிறார். அவற்றைப் பார்க்கும்போது ஒல்லைப் புளியில் கட்டிய அன்ன ஊஞ்சலில் பெண்கள் இசைந்தாட்ட ஆடிய இன்ப நினைவு வருகின்றது.

துன்பத்தின் உச்சம் கழிந்துபோன இன்பநாள்களை நினைத்தல் (Crowns of sorrow are remembrance of happy days) என்று ஒரு ஆங்கிலப் புலவன் கூறினான். எது அழிந்து போனது என்ற வேதனையை இந்நூல் கொண்டுவருகின்றது.

ஒரு கிராமப்புறத்து இடுகாட்டைப் பார்த்து புசயல என்ற புலவன் பாடினான்.

Some village Hampden,that with dauntless breast
Some mute inglorious Milton here may rest,
Full many a gem of purest ray serene,
The dark unfathomed caves of ocean bear:
Full many a flower is born to blush unseen,
And waste its sweetness on the desert air.

இந்தக் கிராமத்துச் சவக்குழிக்குள்ளே 'ஹம்டன் என்ற
சுதந்திர வீரனைப் போன்ற அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள்
எத்தனையோ பேர் துயிலுகிறார்கள். எத்தனையோ கதிரெறிக்கும்
முத்துக்கள் யாரும் காணாது சமுத்திரத்தின் ஆழமான
இருட்குகைகளுக்கே பயன்படுகின்றன. எத்தனையோ அழகான மலர்கள்
யாரும் காணாது வனாந்தரங்களிலே வாடி விழுந்து அழகழிகின்றன.

இந்தப் பாடல்தான் இந்தக் கிராமத்தைப் பற்றிச் சொல்லக் கூடிய சுருக்கமான பிரதம விருந்தினரின் உரை.

பாராளுமன்றங்களில் கர்ச்சிக்கக் கூடியவர்கள், மில்ரனைப் போன்ற புலவர்கள், பண்டிதர்கள், பிரபல வைத்தியர்கள், வானியல் வல்லவர்கள், நீதிமன்றங்களை உலுப்பிய கிராமத்துச் சட்ட வல்லுனர்கள், சேக்ஸ்பியரைப் போன்ற நாடகாசிரியர்கள் வாழ்ந்து மீளாத் துயிலில் உறங்கும் ஒரு கிராமத்தின் வரலாறு இந்த நூல்.

இங்கே வாழ்ந்த மக்கள் பெரிய விவேகிகள். இவர்கள் விவேகமெல்லாம் கிராம வாழ்க்கைக்குள்ளே அடங்கி பிரபலமடைய முடியாதிருந்தது. ஒவ்வொருவரும் அப்படித்தான். தும்பளை ஒழுங்கைகளிலே தென்மராட்சி வலிகாமம் போன்ற இடங்களில் வாழ்பவருடைய வண்டிகள் நிறையும். நோயாளர், வைத்தியர்களுடைய வீடுகளிலே படுத்திருந்து நோய் மாற்றிச் செல்வார்கள். எந்த ஒழுங்கையால் போனாலும் கோரோசனை மணம், வடிக்கும் எண்ணெய் மணம் வீசும்.

வானியல் வல்லுனர்கள் வாழ்ந்த ஒரு கிராமம். இதைப் பற்றியாழ் பல்கலைக் கழக வெள்ளிவிழா மலரில் ஒரு கட்டுரையாக வரைந்துள்ளேன்.சோதிடம் என்பது வேறு வானியல் என்பது வேறு. இங்கு வாழ்ந்தவர்கள் வானியல் வல்லுனர்கள். என்னிலிருந்து மேல் நோக்கி நானூற்றிருபத்தைந்து வருடமாக தும்பளையிலிருந்து கரலிகிதமாகவும், பின்னர் அச்சுப் பஞ்சாங்கமாகவும் வந்தது. இது, இந்தக் கிராமத்தின் - எந்தக் கிராமத்திலுமல்லாத - ஒரு பெருமைக்குரியது.

1899ம் ஆண்டு வால்வெள்ளி பூமியைத் தொட, பூமி சில்ல பொல்லமாய் உடையும் என்பது ஜேர்மன் வானியல் வல்லுனரின் கணிப்பு. வேற்பிள்ளைச் சோதிடர் அது பூமியை முட்டாது என்று வால்வெள்ளி செல்லும் பாதையையும் படமாக்கி, வால்வெள்ளி கார்த்திகையில் நிகழ, ஒரு வருடத்துக்கு முன்னே மாசியில் வெளியிட்டவர். அதை இன்னும் அச்சில் பாதுகாத்து வைத்துள்ளேன். இந்தக் கணிதத்தை, காரைநகர் வட்டுக்கோட்டை Allen Abraham பிரதி செய்து, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பட்டம் பெற்றார்.

இதனால்தான் சொல்கிறேன் இங்குள்ளவர்கள் கீஷிங்கரைப் போன்ற மூளையுள்ளவர்கள். சந்தர்ப்பமில்லாமல் கிராமத்திலேயே புகழற்றுத் துயின்றார்கள். மயில்வாகனத்தாருடைய மகன் கிருஷ்ணபிள்ளை Cambridge சர்வகலாசாலையில் Wrangler பட்டம் பெற்றவர். இலங்கை வானியல் Observatory தலைவராயிருந்தவர். S. W. Smart என்ற Cambridge சர்வகலாசாலை வானியற் பேராசிரியரிடம் கற்றவர். செவ்வாய்க் கிரகத்தின் ஓட்டத்தின் மாறுபாட்டை அறிவித்து இலண்டன் அரச வானியற்றுறையின் பெரு மதிப்புப் பெற்றவர்.

நமது கிராமத்தின் பெருமையைச் சொல்லின் விடியும். இப் பெருமையை ஒரு சிறு கோடாக இரகுவரன் தன் நூலிலே காட்டியுள்ளார்.

இந்தக் கிராமத்தைப் பற்றி செல்வராசாப் பரியாரியாரின் மகன் ஒரு ஆய்வேட்டினை யாழ் பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பித்துள்ளார். அவருக்கு இங்கிருந்து தப்பி மாவிட்டபுரம் எடுத்துச் சென்ற இருநூறு ஏட்டுப் பிரதிகளைக் காட்டினேன். சிலவற்றைத் தம் ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், நான் 1987ம் ஆண்டு உடுத்த துணியோடு ஓடியபோது அவையெல்லாம் மாவிட்டபுரம் வீட்டிலிருந்தன. எடுக்க முடியாத ஒரு பொக்கிசம் இழந்து விட்டேன். அன்றியும் எனக்குப் பரம்பரைச் சொத்தாகக் கிடைத்த ஒரு Telescope, xU Mariner's compass என்பனவற்றை இந்திய இராணுவம் எடுத்துச் சென்றது.

இந்த நூலிலே இவற்றையெல்லாம் விரித்துரைக்க இடம் போதாது. இரகுவரன் முடிந்த மட்டில் சுருக்கியே தந்துள்ளார்.

இந்தக் கிராமத்து மக்கள் மிகவும் எளிய வாழ்க்கையைக் கைக்கொள்ளுபவர்கள். மானத்துக்காக உயிர் வாழ்பவர்கள். இன்னொருவருடைய உழைப்பில் தாங்கள் வாழுவதை அவமானமாக நினைப்பவர்கள். குமரப் பிள்ளைகளும் உரலிடித்து உழைத்துச் சீவிப்பவர்கள். குருவிச்சை போல வாழ அறியாதவர்கள். படாடோபமான உடை, வாழ்வு அவர்களுக்குக் கட்டாது. கடனின்றி வாழ்வதையே இலட்சியமாகக் கொண்டவர்கள்.

ஆண்கள் மலேரியாவிற்கு இரையாகி இறந்தாலும், சிங்களக் கிராமங்களுக்குச் சென்று உடலுழைப்பினால் பயிர் செய்து வீடுகளிலே தானிய மூட்டைகளை அடுக்கியவர்கள். எந்த வீட்டிலும் நெல், எள், பயறு, உழுந்து, சோழன், குரக்கன் குறையாது. அந்தப் பண்பு இன்றும் இங்கேயிருப்பதை அவதானிக்கிறேன்.

உழைப்புகள் போனாலும் ஒறுப்பனவால் தம் மானத்தைக் காக்கும் ஒரு கூட்டம் இவர்கள். இப்போதுதான் வெளியிடங்களில் விவாகம் செய்கிறார்கள். ஐம்பது வருடங்களுக்கு முன்னே சொந்தத்துள்தான் கலியாணம். அதனால் same blood group வரக் கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தன. அதனால் நன்மைகளும் உண்டு தீமைகளும் உண்டு. ஆனால்,

மயிர்நீர்ப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

என்ற குறளுக்கு இலட்சியமாய் வாழ்ந்தவர்கள்.

இந்தக் கிராமத்தவர் சட்ட வாழ்வு வாழ்ந்தவர்கள். கொலைவழக்கு ஒன்றாவது உயர் நீதிமன்றங்களுக்குப் போனதில்லை. - தங்கள் கிராமத்திலே நடந்த அடாவடித்தனத்துக்கு தண்டனை கொடுக்க வேண்டுமென்று சண்டித்தனத்தில் இறங்காமல் சட்டமுறைப்படி தண்டித்தவர்கள்.

அப்போது இக்கிராமத்தில் உள்ள ஆண்கள் அனைவரும் குடுமி வைத்தவர்கள். என் தகப்பனாரை மன்றாடியும் குடுமி வெட்டக் கூடாது என்று பதினாறு வயது மட்டும் குடுமி வளர்ப்பித்தவர். தமிழ்ப்பண்பு, சைவம் என்பனவற்றில் ஊறியது இந்தக் கிராமம். கந்தபுராணம் காசிகாண்டம் படித்து தவறாது விரதத்தோடு அனுட்டிப்பவர்கள். பதின்மூன்றாம் வயதில் வீரபத்திரருக்கு காசிகாண்டம் படிக்கக் காப்புச் சொன்னேன்.

வல்லிபுரக் கோயிலில் ஆழ்ந்த பக்தியுடையவர்கள். எங்கள் வீட்டிலே மகாபாரத ஏடு இருந்தது. அதையே என் தகப்பனார் மாணவர்களுக்குக் கற்பிப்பார். பத்து வயதிலேயே என்னை மகாபாரதத்தை மாத்திரை தவறாமல் வாசிக்கும்படி குட்டுவார். இக்கிராமத்தில் மகாபாரதம் கற்காதவர்கள் எவருமே இருந்ததில்லை. இங்கேயே கவிதை வாசிக்கும் முறையைக் கற்றேன். திருநெல்வேலி கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நான் கவிதை வாசித்ததைக் கேட்டு அதிர்ந்து போனார்.

# தும்பளை மேற்கு பாலர் பாடசாலை வரலாறு

தொகுப்பு: மலர்க்குழு

தும்பளை மேற்கு கிராமமானது நீண்டதொரு கல்விப்பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. வைத்தியத்திலும், வானியல், சாஸ்திரத்திலும் புலமை பெற்றவர்கள் பலர் இவ்வூரிலே வாழ்ந்து மக்களுக்கு தொண்டாற்றியுள்ளனர் என்று அறிய முடிகிறது. இங்கு முன் பிள்ளைப்பருவ மாணவர்களுக்கான அரிவரிக்கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்ந்து அவர்களுக்கான கல்வி சிறப்பான முறையில் போதிக்கப்பட்டு வந்துள்ளது. அந்த வகையில் 1950 களின் நடுப்பகுதியில் ஆசிரியை திருமதி சிதம்பரப்பிள்ளை அவர்கள் அரிவரிக்கல்வியை போதித்து வந்தாரென அறிய முடிகின்றது. (காலத்தை சரியாக உறுதிப்படுத்த முடியவில்லை)

02.02.1969 இல் (தைப்பூசம்) ஆசிரியை செல்வி சரோஜினி வைத்தியலிங்கம் அவர்கள் முதன் முதலில் அரிவரிப்பாடசாலையொன்றை தனது சொந்த வீட்டில் ஆரம்பித்தார். இந்த பள்ளியின் அமைவிடமானது திகிரி ஒழுங்கையில் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் ஆகும். இந்தப் பள்ளியானது செல்வி சரோஜினி (தேவா) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தனியார் பள்ளி ஆகும். ஆசிரியையின் சகோதரியான செல்வி நிர்மலாதேவி வைத்தியலிங்கம் (தயா) அவர்களும் இணைந்து இந்த அரிவரிப் பாடசாலையை சிறப்பான முறையில் நடாத்தி வந்தனர். இங்கு வருடா வருடம் ஏறத்தாழ முப்பது மாணவர்கள் வரை தமது முன்பிள்ளைப் பருவக் கல்வியைக் கற்றுப் பயனடைந்தனர்.

தும்பளை மேற்கு கிராம பிள்ளைகள் மட்டுமன்றி தம்புருவளை போன்ற அயற்கிராமத்திலுள்ள பிள்ளைகளும் இந்த பள்ளியில் தமது கற்றல் செயற்பாடுகளைத் தொடங்கினர். சரோஜினிதேவி ஆசிரியை அவர்கள் ஆடல், பாடல் கலைகளில் தேர்ச்சி பெற்றவராகையால் மாணவர்களுக்கு அபிநயத்துடனும், பிள்ளைகளை மகிழ்விக்கும் விதத்திலும் கற்பிப்பதில் வல்லவர். இதன் காரணமாக மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமது கல்வியைத் தொடர்ந்தனர்.

இந்தப் பிள்ளைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிற்கு திரு.கார்த்திகேசு உபாத்தியாயர் அவர்கள் உதவி வந்தார். குறிப்பாக கார்த்திகேசு உபாத்தியாயர் அவர்கள் சிறுவர்களுக்கான

கதைகளை ஓவியமாக வரைந்து கொடுத்தல் போன்ற வழிகளில் உதவி புரிந்து வந்தார். மேலும் சரோஜினிதேவி ஆசிரியையின் முழு குடும்ப உறுப்பினர்களுக்குமே இந்த அரிவரிக்கல்விக்கு பல வழிகளிலும் துணை நின்றனர். அரசாங்கமோ அல்லது வேறு நிறுவனங்களோ உதவி புரியாத நிலையில் தங்களது சொந்த நிதியின் மூலம் பள்ளிக்குத் தேவையான தளபாடங்களை அமைத்துக் கொண்டனர். ஆசிரியையின் தந்தையான திரு வைத்திலிங்கம் அவர்கள் தளபாடம் அமைப்பதில் பெரிதும் பங்களிப்பு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கால கட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முறையான பயிற்சியைப் பெற்றுக்கொண்டு நெல்லியடியில் உள்ள ஒரு முன்பள்ளியில் கற்பித்து வந்த ஆசிரியையின் இன்னுமொரு சகோதரியான செல்வி மீனாம்பிகை (கமலா) வைத்திலிங்கம் அவர்களும் இந்த அரிவரிப் பாடசாலையின் செயற்பாடுகளில் துணை நின்றார்.

சரோஜினிதேவி ஆசிரியையின் முன்பள்ளி சிறப்பான முறையில் இயங்கிக் கொண்டிருந்த வேளையில் செல்வி ஜெகதீஸ்வரி தாமோதரம்பிள்ளை அவர்கள் இன்னுமொரு அரிவரிப் பாடசாலையை ஆரம்பித்தார். இந்தப் பள்ளியும் தும்பளை பாடசாலைக்கு வடக்குப் புறமாக தும்பளை வீதியில் அமைந்திருந்தது. இவ்விரு பள்ளிகளும் மிகவும் அருகருகில் இருந்த காரணத்தினல் சரோஜினிதேவி ஆசிரியை அவர்கள் சில வருடங்களிற்குப் பின்னர் தமது கற்பித்தல் செயற்பாட்டை இடைநிறுத்திக் கொண்டார்.

செல்வி ஜெகதீஸ்வரி ஆசிரியை அவர்களின் பாடசாலையும் சிறப்பான வகையில் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இங்கும் எமது ஊர் மட்டுமல்லாது அயற் கிராம மாணவர்கள் உட்பட ஏறத்தாழ முப்பது மாணவர்கள் வருடா வருடம் தமது ஆரம்பக் கல்வியை பெற்று வந்தார். 1970, 71 கள் வரை இந்த பள்ளி இயங்கி வந்தது. (ஆண்டுகள் உறுதியாக தெரியவில்லை)

பின்னர் செல்வி ரஞ்சனி சச்சிதானந்தம் (பேபி) அவர்கள் திரிகி ஒழுங்கையில் உள்ள தமது வீட்டில் 1974இல் முன்பள்ளி ஒன்றை ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியை பேபி ரீச்சர் அவர்கள் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் ஆடல் பாடலுடன் கல்வியைப் போதிப்பதில் கைதேர்ந்தவர். இந்த முன்பள்ளியானது ஒரு தனியார் முன்பள்ளியாக சேவை நோக்கத்துடன் இயங்கி வந்தது. இங்கு அயலூர் மாணவர்கள் உட்பட வருடா வருடம் 15-25 பிள்ளைகள் வரை தமது முன்பள்ளிக்கல்வியை பெற்றுவந்தனர். 1980களில் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்பள்ளிகளில் கவனம் எடுத்தது. அந்த வகையில் திருமதி பேபி ரீச்சர் அவர்கள் கூட்டுறவு சங்கத்தில் முன்பள்ளியை தும்பளை மேற்கு பாலர் பாடசாலை என பதிவு செய்து வைத்திருந்தார். கூட்டுறவுச் சங்கம் வழங்கிய முன்பள்ளி ஆசிரியருக்கான பயிற்சிகளிலும் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார். பருத்தித்துறை பிரதேச மட்டத்தில் பல முன்பள்ளிகளை ஒன்றிணைத்து பல போட்டிகளை கூட்டுறவுச் சங்கம் நடாத்தி ஊக்கமளித்தது. இந்தக்காலப்பகுதியில் ஆசிரியை திருமதி இந்திராணி பத்மநாதன் (மணல் ஒழுங்கை) அவர்கள் ஆசிரியை ரஞ்சனியுடன் இணைந்து கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டார். இவ்வாறான கூட்டுறவு சங்கத்தின் செயற்றிட்டம் 1983 வரை நடைபெற்றது. 1986இல் பேபி ரீச்சர் அவர்களுக்கு திருமணம் கைகூடி வந்த பொழுது தற்காலிகமாக முன்பள்ளி கற்பித்தல் செயற்பாட்டை இடைநிறுத்திக் கொண்டார்.

இடைக்காலத்தில் எமது தும்பளை மேற்கு கிராம மாணவர்கள் 1986 தொடக்கம் 1992 வரையான காலப்பகுதியில் அயலூரில் உள்ள திருமதி சுபத்திரா ஆசிரியை அவர்களிடமும் ஞான சம்பந்தர் கலை மன்றத்தால் நடாத்தப்பட்ட முன்பள்ளியிலும் தமது கல்வியினைக் கற்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது. 1992இல் போரூட் நிறுவனம் தனது 5 ஆண்டு திட்டத்தில் தும்பளை மேற்கு கிராம அபிவிருத்தியையும் உள்ளடக்கியது. இந்த வகையில் போரூட் நிறுவனம் மூலம் தும்பளை மேற்கில் ஒரு மாதர் சங்கம் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக திருமதி அரியமலர் கணேசநாதன் அவர்கள் போரூட் நிறுவனத்தின் தும்பளை மேற்கு பிரதேச வங்கியாளராக நியமிக்கப்பட்டிருந்தார். போரூட் நிறுவனத்தின் எமது கிராமத்திற்கான அபிவிருத்தி திட்டங்களில் முன்பள்ளி அபிவிருத்தியும் ஒன்றாக இருந்தது. எமது கிராம போரூட் நிறுவனத்தினரின் முயற்சியால் மீளவும் பேபி ரீச்சர் (திருமதி ரஞ்சனி கௌரிபாலா) அவர்கள் 1992இல் தனது வீட்டில் முன்பள்ளியை ஆரம்பித்தார்.

போரூட் நிறுவனமானது முன்பள்ளி ஆசிரியருக்கான பயிற்சிக் கொடுப்பனவுகளை ஒரு வருட காலம் தொடர்ந்து வழங்கி முன்பள்ளி ஆசிரியர்களின் கல்விச் செயற்பாட்டினை ஊக்கு வித்தது. இதனைத் தொடர்ந்து தும்பளை மேற்கு கிராம மாதர் சங்க போரூட் வங்கியானது மிகுந்த வளர்ச்சி நிலையை அடைந்ததினால் கணிசமான தொகையை இலாபமாக ஈட்டியது. இந்த இலாபத் தொகையினை முன்பள்ளி விளையாட்டு விழா போன்ற நிகழ்வுகளுக்கு உதவித் தொகையாக வழங்க போரூட் நிறுவனம் அனுமதி அளித்தது. மேலும் இந்த நிறுவனமானது முன்பள்ளிக்கான தளபாடங்கள் போன்ற உதவிகளையும் ஆசிரியர்களுக்கான பயிற்சியையும் வழங்கியது. போரூட் நிறுவனத்தின் உதவிகள் கிடைக்க உறுதுணையாக செயற்பட்டவர் போரூட் வங்கியாளராக கடமையாற்றிய திருமதி அரியமலர் கணேசநாதன் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1992இல் மீளவும் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளியில் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நடாத்த ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு போரூட் நிறுவனம் உதவிகள் புரிந்தது. தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் முன்றலிலும் சிலவருடங்கள் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. பின்னர் ஆசிரியையின் வீட்டிலும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டது. இதில் விளையாட்டுக்கள் வினோதஉடைப் போட்டிகள் என்பன சிறப்பான முறையில் இடம்பெற்றது. 1996இல் திருமதி ரஞ்சனி ஆசிரியைக்கு உதவியாக செல்வி பிரேமா இராஜேந்திரா அவர்கள் ஆசிரியையுடன் இணைந்து ஒருவருடம் கடமையாற்றி உதவி புரிந்தார். இவர் தாதியர் கல்லூரிக்கு பயிற்சிக்காக செல்ல, செல்வி ரதிவதனா கணபதிப்பிள்ளை அவர்கள் 1998 இல் இணைந்து கொண்டார். இதே காலப்பகுதியில் விளையாட்டுப்பேட்டிகள் போன்ற பொது செயற்பாடுகளுக்கு ஆசிரியரின் வீட்டில் இடம் போதாது என்ற காரணத்தால் முன்பள்ளியை திகிரி ஒழுங்கை வளலாய் ஒழுங்கை முகப்பில் உள்ள "சிங்கப்பூரார் வீடு" என்று அழைக்கப்படும் வீட்டிற்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

சிலகாலங்களின் பின்னர் திருமதி ரஞ்சனி கௌரிபாலா அவர்கள் குடும்ப பொறுப்புக்கள் காரணமாக முன்பள்ளி செயற்பாடுகளில் இருந்து சிறிது காலம் விலகிக் கொள்ள செல்வி ரதிவதனா கணபதிப்பிள்ளை அவர்கள் பொறுப்பாசிரியராக பொறுப்பெடுத்துக் கொண்டார். சாஸ்திரியார் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி வாணி குணநாதன் அவர்கள் ஆசிரியை ரதிவதனா அவர்களுக்கு உதவியாக சிலகாலம் கடமையாற்றினார். பின்னர் திருமதி வாணி அவர்கள்

வேறு வேலை நிமித்தமாக வெளியூர் சென்றதனால் வில்வளை, கலட்டியைச் சேர்ந்த செல்வி ராஜேஸ்வரி (செல்வி) அவர்கள் கடமையாற்றி உதவி புரிந்தார்.

இந்தக் காலகட்டத்தில் 20-25 வரையான மாணவர்கள் கல்வி பயின்றனர். 1998இல் பெற்றோர் சங்க தலைவராக திருமதி கமலினி பாலசிங்கம் அவர்களும், செயலாளராக திரு.தே.தேவராஜேந்திரம் அவர்களும் இருந்த வேளையில் முன்பள்ளிக்கென வங்கிக் கணக்கு ஆரம்பிப்பதற்கு முயற்சிக்கப்பட்டது. இதன்போது முன்பள்ளிக்கு ஒரு பெயர் வைக்க வேண்டிய தேவையும் , யாப்பு ஒன்று உருவாக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இதன் போதுதான் பாரதி பாலர் பாடசாலை என முன்பள்ளிக்கு பெயரிடப்பட்டது. 1997இல் யாப்பு உருவாக்கத்தில் திருமதி கமலினி பாலசிங்கம் , திரு.தே.தேவராஜேந்திரம் அவர்களும் பெற்றோர்களும் பங்களிப்புச் செய்தனர். வங்கிக் கணக்கு திறக்கப்பட்டு ஒவ்வொரு மாணவர்களிடமும் அறவிடப்படும் ரூபா 50.00 கட்டணத்தில் தலா 10.00 ரூபாவினை தனியாக சேமித்து மாதம் தோறும் வங்கியில் வைப்பிலிட்டு வந்தனர். இந்த நிர்வாகக் குழுவினரால் காணி கொள்வனவு செய்வதற்காக எமது ஊரில் ரூபா 30000/= வரை நிதி சேரிக்கப்பட்டது. பொறுப்பாசிரியர் ரதிவதனா அவர்கள் 2002ம் ஆண்டளவில் தனது சொந்த பணிகள் காரணமாக வெளியூர் சென்றார். இதனால் உதவியாளராக இருந்த செல்வி ராஜேஸ்வரி அவர்கள் பொறுப்பாசிரியராக கடமையைப் பொறுப்பெடுத்துக் கொண்டார்.

செல்வி ராஜேஸ்வரி பொறுப்பாசிரியராக இருந்த காலப்பகுதியில் "சிங்கப்பூரார்" வீட்டில் முன்பள்ளி தொடர்ந்து இயங்க முடியாத நிலை தோன்றியபொழுது தும்பளை வீதியில் உள்ள திரு.சுகுமார் சந்திரசேகரம் வீட்டிற்கு பாரதி பாலர்பாடசாலை தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டது. தொடர்ந்து 13.05.2004இல் செல்வி கல்யாணி நிமலநாதன் அவர்கள் உதவியாளராக இணைந்து கொண்டார். இதே இடத்தில் 2011ம் ஆண்டுவரை முன்பள்ளி இயங்கி வந்தது. இந்த வேளையில் விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்வுகளும் அங்கேயே நடைபெற்றது.

பாரதி பாலர் பாடசாலை தும்பளை வீதியில் இயங்கி கொண்டிருந்த வேளையில், ஆசிரியை திருமதி ரஞ்சனி கௌரிபாலா அவர்களால் ஊர்மக்களின் கோரிக்கைக்கு அமைவாக 2005ம் ஆண்டளவில் மீளவும் இன்னுமொரு முன்பள்ளி அவரது வீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவருக்கு உதவியாக 2006இல் செல்வி நர்மிலா குணராசன் அவர்கள் இணைந்து கொண்டார். இக்காலப்பகுதியில் (2006, 2007களில்) பருத்தித்துறை நகரசபையில் முன்பள்ளி பதிவு செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் பாத்திரங்களும் மற்றும் உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டன.

2006ம் ஆண்டிற்கான வருடாந்த விளையாட்டுப் போட்டியினை நடாத்த முற்பட்ட வேளை இந்த முன்பள்ளிக்கு ஒரு பெயர் வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் திருமதி ரஞ்சனி கௌரிபாலா அவர்களால் சைவ சமய பெரியாரை ஞாபகப்படுத்தும் விதமாக "நாவலர் முன்பள்ளி" என பெயரிடப்பட்டது. இதன் பின்னர் இதே ஆண்டு "சமூக நிறுவனங்களின் கீழ் முன்பள்ளிகளை வலயக் கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட பொழுது 2006ம் ஆண்டு தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தை அணுகிய பொழுது அவர்கள் பதிவு செய்ய முன்வந்தனர். பதிவு

செய்வதற்காக அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுவில் திருமதி சுகுணாலினி விஜயரட்ணம் தலைவராகவும்,திருமதி விஜயா ஜெயசீலன் செயலாளராகவும் திருமதி ரஞ்சனி கௌரிபாலா அவர்கள் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். விளையாட்டுக் கழக செயலாளரான திரு.தி. சந்திரசேகரம் அவர்களும் நிர்வாக உறுப்பினராக இக்குழுவில் இணைக்கப்பட்டார்.

2009ம் ஆண்டளவில் முன்பள்ளிக்கான வலயக்கல்வி பணிப்பாளரான திரு.சி.தில்லைநாதன் அவர்களால் அருகருகே இருக்கும் முன்பள்ளிகளை ஒன்றாக இணைக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு பல முன்பள்ளிகள் ஒன்றாக இணைக்கப்பட்ட பொழுது 2011 கார்த்திகை மாதமளவில் பாரதி பாலர் பாடசாலையும், நாவலர் முன்பள்ளியும் ஒன்றாக இணைக்கப்பட்டு நாவலர் முன்பள்ளி என்ற பெயரில் செயற்படத் தொடங்கியது. 2011 கார்த்திகை மாதத்தில் இருந்து திருமதி ரஞ்சனி கௌரிபாலா, செல்வி நர்மிலா குணராசன், செல்வி கல்யாணி நிமலநாதன் ஆகிய மூன்று ஆசிரியர்கள் நல்ல முறையில் பயிற்சி பெற்று கல்வி போதித்து வந்தனர். 2011ம் ஆண்டிலிருந்து வலயக்கல்வி திணைக்களம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவிக் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தினை கொண்டுவந்தது. இத்திட்டத்தின் மூலம் ஒரு ஆசிரியருக்கான மாதாந்த தொகை ரூபா 3000/= கிடைக்கப்பெற்றது. 2012ம் ஆண்டிலிருந்து இன்னும் இரண்டு ஆசிரியர்களுக்கான உதவித் தொகை மாதம் ரூபா 3000/= வீதம் கிடைக்கப்பெற்றது.

2012ம் ஆண்டளவில் விளையாட்டுக் கழகங்களின் கீழ் முன்பள்ளிகளைப் பதிவு செய்து வைத்திருக்க முடியாத நிலை தோன்றியபோது தும்பளை மேற்கு சனசமூக நிலையம் முன்பள்ளியை பொறுப்பெடுத்து பதிவு செய்ய முன்வந்தது. இந்த வகையில் தும்பளை மேற்கு அரும்புகள் முன்பள்ளி என ஊர்மக்களின் விருப்பத்திற்கு அமைய பெயர்மாற்றம் செய்து துணை நிறுவனமாக இணைந்து கொண்டது. 2013ம் ஆண்டு திருமதி ரஞ்சனி கௌரிபாலா தனது 60வது வயதில் ஓய்வு பெற்றுக்கொள்ள ஆசிரியைகளாக செல்வி நர்மிலாவும், செல்வி கல்யாணியும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

முன்பள்ளியின் நிகழ்வுகள் பற்றி குறிப்பிடப்படும் பொழுது விளையாட்டுப் போட்டிகள் முதன்மை பெறுகின்றது. விளையாட்டுப் போட்டியில் இடைவேளை நிகழ்ச்சியும், விநோத உடைப் போட்டியும் பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தளிக்கும். 2013ம் ஆண்டிலிருந்து தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறைக் கிளையின் சிறுவர்தின நிகழ்வுகளிற்கு முன்பள்ளி மாணவர்கள் கலை நிகழ்வுகளை வருடாவருடம் வழங்கி வருகின்றனர். தும்பளை மேற்கு சனசமூக நிலையத்தின் ஆண்டு விழா, வாணி விழா நிகழ்வுகளிலும் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றம் செய்யப்படுகின்றன. மேலும் புத்தாக்க கண்காட்சி போன்ற நிகழ்வுகள் வருடாவருடம் நடாத்தப்பட்டடு மாணவர்களின் கைவினைத்திறன் வளர்க்கப்படுகின்றது. முன்பள்ளியில் ஆசிரியர் தின நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இங்கு விளையாட்டு நிகழ்வுகள் முதன்மை பெறுகின்றன. முன்பள்ளி மட்டுமல்லாமல், கொத்தணி மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படுகின்றது. கொத்தணி என்பது குறிப்பிட்ட பிரதேச முன்பள்ளிகளின் சேர்ந்த அமைப்பாகும். பருத்தித்துறை கொத்தணியில் 8 முன்பள்ளிகள் உள்ளன. இக் கொத்தணிகளுக்கு ஆசிரியர் செல்வி நர்மிலா குணராசன் சிலவருடங்கள் தலைவராக இருந்துள்ளார். முன்பள்ளியில்

நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்கள் கொத்தணி மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவர். இதில் வெற்றி பெற்று வலயம், மாகாண மட்டங்களிலும் பங்குபற்றுவர்.

2015இல் எமது முன்பள்ளி மாணவியான செல்வி.சதுர்சனா பிரதீபன் அவர்கள் மாகாண மட்டத்தின் மனன போட்டியில் பங்குபற்றி இருந்தார். மூன்று தவணைக்கும் பரீட்சைகள் வைக்கப்பட்டு புள்ளி வழங்கும் முறையும் மாணவர் முன்னேற்ற அறிக்கை வழங்கும் முறையும் உள்ளது. மற்றும் வருடா வருடம் மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வும் நடைபெறுகிறது.

எமது ஊரில் நிரந்தரமான ஓர் முன்பள்ளியை கட்டவேண்டும் என்ற வைராக்கியத் தினால் அதற்காக முதலில் தும்பளை மேற்கு சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் காணி ஒன்றைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவ்வேளையில் 2013ம் ஆண்டில் திரு.சி.பஞ்சாட்சரம் குடும்பத்தினர் தமது காணியில் வடகிழக்கு மூலைப்பக்கமாக ஒரு பகுதியை முன்பள்ளிக்கென அன்பளிப்புச் செய்தார்கள். அத்துடன் தும்பளை மேற்கு வரதவிநாயகர் தேவஸ்தானத்தின் தெற்குப் பக்க வீதியோரமாக ஒரு பகுதியையும் தருவதாக அன்றைய நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்ட வேளையில் அவ்விடத்தில் முன்பள்ளியைக் கட்டலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் கோவிலின் வீதியோரமாக கட்டினால் ஆலய திருவிழாக்கள் மற்றும் சூரன்போர் காலங்களில் இடப்பற்றாக்குறை ஏற்படலாம் என்ற காரணத்தினாலும் இதைவிட தனியே பஞ்சாட்சரம் சந்தானலக்சுமி அவர்களின் காணியில் கட்டுவதாயின் நிலப்பகுதி போதாமையாகவும் இருந்தமையால் அவ்விடத்தில் முன்பள்ளி கட்டுதல் என்ற ஆசை நிராசையானது.

யாது செய்யலாம் என சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் கனடாவில் இருந்து ஊருக்கு வருகை தந்த திரு.க.பாலேஸ்வரன் அவர்களின் முயற்சியினால் றஞ்சினி பாலகிருஷ்ணன், சிவஞானசுந்தரம் நாகேஸ்வரியின் மகள் சுபாஷினி சபேசன், க.பாலேஸ்வரன் போன்றோரால் தற்போது பிரகாசித்துக் கொண்டிருக்கும் இவ்அரும்புகள் முன்பள்ளிக்கான காணி அன்பளிப்பாக கிடைக்கப்பெற்றது. இதனால் ஏற்கனவே முன்பள்ளிதான் கட்ட வேண்டும் என அன்பளிப்பு இக்காணிக்குள் செய்திருந்த திரு.சி.பஞ்சாட்சரம் சந்தானலக்சுமி அவர்களின் காணியை நிர்வாகத்தினர் அவர்களுக்கே திருப்பி எழுதிக் கொடுத்தனர்.

முன்பள்ளி கட்டுவதற்கான காணி கிடைத்ததும் தும்பளை மேற்கு சனசமூக நிலைய நிர்வாகமும் ஊர்மக்களும் சேர்ந்து முன்பள்ளிக்கட்டடம் கட்டுவதற்கான முயற்சியில் இறங்கினார்கள். அவ்வேளையில் 2013/2014 தும்பளை மேற்கு சனசமூக நிலைய தலைவராக இருந்த பொறியியலாளர் திரு.இ.பாலேந்திரா அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு முன்பள்ளிக்கட்டடம் கட்டுவதற்கான கட்டடக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. குழுவின் தலைவராக திரு.சி.பாலகெங்காதரன் அவர்களும் செயலாளராக திரு.க.புலேந்திரன் அவர்களும் பொருளாளராக திரு.கு.பஞ்சாரட்சரம் அவர்களும் பொருத்தமாக இருக்கும் என பொதுச் சபையினரால் தீர்மானம் எடுக்கப்பட்டு ஏகமானதாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இவ்வேளையில் குழுவின் பொருளாளராக இருந்த திரு.கு.பஞ்சாட்சரம் அவர்கள் பிரசித்தி பெற்ற நிலஅளவையாளராக இருந்தமையால், தானே முன்வந்து எவ்வித எதிர்பார்ப்புகளும் இன்றி காணிகளையும் அளந்து எல்லைகளைக்குறித்து

அதற்குரிய பாதையினையும் வகுத்து முன்பள்ளிக்குரிய காணி உறுதியினையும் வரைபடத்தினையும் தயாரிப்படுத்திக் கொடுத்தார்.

கட்டடக் குழுவினர் உடனேயே தமது பணியை ஆரம்பிக்கும் முகமாக முதலில் தண்ணீரின் தேவையை உணர்ந்து குழாய்க்கிணறு ஒன்றை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான நிதியினை ஊர்மக்களிடமிருந்து சேகரித்தும் வெளிநாட்டவரின் உதவியுடனும் குழாய்க்கிணறை அமைத்தும் அதற்கான மோட்டார் அறையும் கட்டப்பட்டு மின்சார இணைப்பும் எடுக்கப்பட்டது.

2014ல் சனசமூக நிலையத்தினரால் முன்பள்ளி கட்டடம் அமைக்கும் நிதியினை சேர்க்கும் விதமாக அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்யப்பட்டு ரூபா 23437.00 பணம் பெறப்பட்டது. மேலும் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களில் பலர் தமது பரிசுத் தொகையின் பெறுமதியை முன்பள்ளிக்கே வழங்கியுள்ளனர் என்பது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

தொடர்ந்து முன்பள்ளிக்கென தனியான வங்கிக்கணக்கு திறக்கப்பட்டு கணக்கு இலக்கமானது பொருளாளரால் வெளிநாட்டில் வாழும் எம்மூர் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. இவ்வேளையில் திரு.இ.பாலேந்திரா அவர்களால் முன்பள்ளிக்கான கட்டட வரைபடம் தயாரிக்கப்பட்டு பொதுச்சபையில் அங்கீகாரம் பெறப்பட்டு பருத்தித்துறை நகரசபையில் கட்டடம் கட்டுவதற்கான அனுமதியும் பெறப்பட்டது.

அனுமதி கிடைத்தவுடன் கட்டடக்குழுவினர் மீண்டும் வீடு வீடாகச் சென்று நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டார்கள். அவர்களின் முயற்சியினாலும் கடும் உழைப்பினாலும் ஊரவர்களாலும் வெளிநாடுகளில் வாழும் தும்பளை வாழ் மக்களாலும் இன்னும் சில நல்ல உளம் கொண்ட வெளிநாட்டவர்களாலும் நிதிகள் கிடைக்கப்பெற்றன.

இவ்வேளையில் 02.06.2014 அன்று முன்பள்ளிக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.சி.தில்லைநாதன் அவர்களால் அரும்புகள் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டப்பட்டு வைபவம் சிறப்பாக இடம்பெற்றது. தொடர்ந்து தும்பளை மேற்கு சனசமூகநிலைய நிர்வாகத்தினராலும் கட்டட குழுவினராலும் கட்டடம் கட்டுவதற்குரிய வேலையாட்கள் கூறுவிலைப்படி தெரிவு செய்யப்பட்டு பலமான அத்திபாரம் போடப்பட்டது.

தொடர்ந்து காணியின் நிலத்தில் மழை காலங்களில் தண்ணீர் நிற்காதவாறு மக்கிகள், தூர்வைமண் போடப்பட்டு காணி முழுவதும் நிரவப்பட்டது. இதற்காக உமது ஊர் மக்களிடமிருந்து தூர்வைமண் கிடைக்கப்பெற்றன. இவ்வகையில் ப.ஶ்ரீஅரவிந்தன், ப.சந்திரஜித் அவர்களின் ஏற்பாட்டில் 42 லோட், திருமதி சி.திலகம் அவர்கள் 4 லோட், ப.அரவிந்தன் 3 லோட் திருமதி பேபி சரோஜா 3 லோட், திரு ச.மிதுஷனின் ஏற்பாட்டினால் யா/ஹாட்லிக்கல்லூரி 5 லோட், அஜந்தன் (வல்லிபுர பரியாரியார் ஒழுங்கை) 22 லோட், த.விக்கினேஸ்வரன் 2 லோட் திருமதி செ.வாணி 4 லோட் தூர்வை மண்ணை இலவசமாக தந்துதவினார்கள். எம்மூர் இளைஞர்களாலும் சிரமதான அடிப்படையில் துப்பரவு பணி செய்யப்பட்டது.

தொடர்ந்து கட்டடம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ரூபா 150000.00 சதமும் சமூக வலுவூட்டல், மற்றும் நலனோம்புகை அமைச்சு ரூபா 317957.40 உம் தந்து உதவியது. இதைவிட அதிகமாக சில வெளிநாட்டில் வாழும் எம்மவர்கள் பங்களிப்பினையும் செய்தார்கள். இவ்வாறாக கட்டடம் மெல்ல மெல்ல வளர்ந்து கூரைவேலைகளும் நிறைவு பெற்றன. இவ்வேளையில் திரு.இ.ரஞ்சித் குழுவினரால் ரூ.18500 மதிப்பிடத்தக்க Filler அடிக்கும் வேலைகள் இலவசமாக செய்யப்பட்டன. அத்துடன் மின்இணைப்பு வேலைக்கான செலவுகளாக ரூ50000.00 இனை திரு.மு.கணேந்திரன் பொறுப்பேற்றுக் கொண்டார். இவ்வாறு கட்டடம் வளர்ச்சியடைந்து நிறைவடையும் பட்சத்தில் 12.02.2016 அன்று தும்பளை வரதவிநாயகர் ஆலயத்திலிருந்து படங்கள் எடுத்து வரப்பட்டு பால் காய்ச்சும் வைபவம் இடம்பெற்றது.

இத்துடன் நிற்காது தொடர்ந்து திரு.கு.பஞ்சாட்சரம் திரு.க.புலேந்திரன் அவர்கள் திரும்பவும் வீடு வீடாகச் சென்று நிதியை திரட்டி கட்டட வேலைகளை சீரமைத்ததுடன் கட்டடத்துக்குரிய பாதுகாப்பு சுவர்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்தன. திரு.சு.குமாரகுலசிங்கம் மற்றும் திரு.செல்வரத்தினம் சாந்தலிங்கம் அவர்களினால் மாணவர்களின் நன்னீர் தேவையினை நிறைவு செய்யும் விதமாக நீர் வழங்கல் இணைப்பு பெற்றுத் தரப்பட்டது.

இதேவேளை வடமாகாண கௌரவ முதலமைச்சர் நீதியரசர் C.V.விக்னேஸ்வரன் அவர்கள் கழுவும் அறைக் கட்டடத் தொகுதிக்கான நிதியினை வழங்குவதாக உறுதியளித்ததன் பிரகாரம் கழுவும் அறைக்கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக் கட்டடமானது ஊரவர்கள், புலம்பெயர் மக்கள் மற்றும் அரச பங்களிப்பில் திரு.பி.வே.கந்தசாமி , திரு.நா.இலட்சுமிப்பிள்ளை , திரு.திருமதி சிவஞானசுந்தரம் நாகேஸ்வரி ஆகியோரது ஞாபகார்த்தமாக முறையே திரு.க.பாலேஸ்வரன், திரு.திருமதி.பாலகிருஷ்ணன் ரஞ்சினி, திரு.த.சிவஞானசுந்தரம் அவர்களின் பிள்ளைகள் ஆகியவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் நிறுவப்பட்டு 16.04.2016 அன்று திரு.க.பரமேஸ்வரன் (கனடா) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**தகவல் :**

திருமதி.சரோஜினிதேவி வல்லியூரநாதன், திருமதி.ரஞ்சினி கௌரிபாலா,
திருமதி. ரதிவதனா வரதராஜன் , திருமதி.நர்மிலா ஹரிதாஸ் ,
திருமதி.கலியாணி விஜயரூபன் , திருமதி.அரியமலர் கணேஷநாதன்,
திரு.தே.தேவராஜேந்திரம், திருமதி.கமலினி பாலசிங்கம் ,
திருமதி.நிர்மலாதேவி சுதந்திரநாதன்,
முன்பள்ளி சனசமூக நிலைய கூட்ட அறிக்கைகள்.

## உள்ளூர் மொத்த அன்பளிப்பு

| | |
|---|---|
| அதிஷ்டஇலாப சீட்டு பரிசு அன்பளிப்பு | 79,023.00 |
| பனை அன்பளிப்பு | 99,000.00 |
| வர்ணப்பூச்சு (வேலை8ல யாக) | 21,600.00 |
| உள்ளூர் அன்பளிப்பு | 7,88,011.00 |
| | 983,634.00 |

## அரும்புகள் முன்பள்ளி கட்டடத்திற்கான அதிஷ்டலாபசீட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற பரிசுத்தொகை அன்பளிப்புக்கள்

| | |
|---|---|
| A.இளவரசி | 45,999.00 |
| கு.பஞ்சாட்சரம் (சி.சுஜன்) | 19,999.00 |
| ப.ஜெபதர்சன் | 1,805.00 |
| இ.பாலேந்திரா | 1,805.00 |
| பா.சுபானி | 3,610.00 |
| S.தயாபரன் (த.லக்ஸ்மி) | 1,805.00 |
| ப.மஹிதரன் (M.சயனிக்கா) | 1,805.00 |
| | 75,023.00 |

## அரும்புகள் முன்பள்ளிக்கட்டடத்திற்கான கூரைவேலை செய்வதற்கு பனை அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | |
|---|---|
| 1. திரு.செ.சுந்தரமூர்த்தி 2 பனை | 10,000.00 |
| 2. திருமதி.பிருந்தா ரமேஷ் 2 பனை | 8,000.00 |
| 3. திருமதி.விமலா ஆறுமுகம் 2 பனை | 12,000.00 |
| 4. செல்வி.சே.அமிர்தலட்சுமி 2 பனை | 10,000.00 |
| 5. திருமதி.சோ.விசாலட்சி 1 பனை | 6,000.00 |
| 6. திருமதி.ரஞ்சினி பாலகிருஷ்ணன் 2 பனை, 1 பட்ட பனை | 15,000.00 |
| 7. திருமதி.மீனாம்பிகை பாலச்சந்திரன் 2 பனை | 10,000.00 |
| 8. திருமதி.யோகேஸ்வரி சாமிநாதன் 1 பனை | 5,000.00 |
| 9. திருமதி.விஜயலட்சுமி இராசரத்தினம் 1 பனை | 5,000.00 |
| 10. திருமதி.சந்தானலட்சுமி பஞ்சாட்சரம் 2 பனை | 12,000.00 |
| 11. தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகம் | 6,000.00 |
| | 99,000.00 |

## வர்ணப்பூச்சு வேலை விபரம்

| | |
|---|---|
| 1. திரு.ர.ரஞ்சித் குழுவினர் primer அடித்த கூலி | 18,700.00 |
| 2. திரு.ர.ரஞ்சித் சம்பளம் | 2,900.00 |
| மேற்படி பெறுமதியில் வேலையாக செய்து தரப்பட்டது | 21,600.00 |

## அரும்புகள் முன்பள்ளி கட்டடத்திற்கான உள்ளூர் நிதி அன்பளிப்புக்கள்

| | |
|---|---|
| 1. பு.ஆரணி, பு.தேனுகா | 10,011.00 |
| 2. தே.தேவராஜேந்திரன் | 10,000.00 |
| 3. க.உமாபதி | 2,000.00 |
| 4. கு.பஞ்சாட்சரம் | 20,000.00 |
| 5. K.சிறீதரன் | 1,000.00 |
| 6. கே.கவிதா | 5,000.00 |
| 7. ம.அருட்செல்வி | 5,000.00 |
| 8. சி.குலேந்திரன் | 15,000.00 |
| 9. சோ.தபேந்திரன் | 10,000.00 |
| 10. ஜோ.ஜெனிற்றா | 500.00 |
| 11. ஆ.விஜயரத்தினம் | 500.00 |
| 12. சுரேஸ் ஜெபநேசன் | 3,000.00 |
| 13. செந்துமதி இளங்கோ | 2,000.00 |
| 14. த.இராமச்சந்திரன் | 1,000.00 |
| 15. பானுமதி சிவசுப்ரமணியம் | 10,000.00 |
| 16. ந.ஜெயக்குமார் | 5,000.00 |
| 17. சிவநேசன் ரேவதி | 5,000.00 |
| 18. செல்வரத்தினம் வாணி | 5,000.00 |
| 19. இ.இந்திரஜித் | 10,000.00 |
| 20. ம.சுரேஷ் | 10,000.00 |
| 21. ரஞ்சித் கார்த்திகா | 5,000.00 |
| 22. செ.நிசாந்தன் | 1,000.00 |
| 23. தும்பளை மேற்கு விளையாட்டுக்கழகம் | 10,000.00 |
| 24. ஆறுமுகம் விமலா | 5,000.00 |
| 25. சி.சேதுபதி | 10,000.00 |
| 26. த.விக்கினேஸ்வரன் | 15,000.00 |
| 27. வி.கமலாவதி | 10,000.00 |
| 28. முரளிதரன் கஜமதி | 5,000.00 |
| 29. பா.ராகுலன் | 10,000.00 |
| 30. நி.கணேஸ்வரன் | 5,000.00 |
| 31. உள்ளூர் அன்பர் | 50,000.00 |
| 32. இ.ரவீந்திரன் | 1000.00 |
| 33. சி.சரோஜினிதேவி | 10,000.00 |
| 34. நா.சிவபாலன் | 40,000.00 |
| 35. சி.ஆனந்தநாதன் | 10,000.00 |
| 36. வே.ஞானசேகர் | 5,000.00 |

| | |
|---|---|
| 37. சி.வல்லிபுரம் | 9,000.00 |
| 38. மு.வேலாயுதம்பிள்ளை | 5,000.00 |
| 39. செ.உமாபதி | 5,000.00 |
| 40. செ.திகழொளிபவன் | 3,000.00 |
| 41. நா.அருந்தவராசா | 3,000.00 |
| 42. பா.இரகுவரன் | 5,000.00 |
| 43. கிருஷ்ணராசா தங்கேஸ்வரி | 5,000.00 |
| 44. பொ.சங்கரலிங்கம் | 1,000.00 |
| 45. சி.செல்வநித்திலன் | 10,000.00 |
| 46. சி.நடராசா | 5,000.00 |
| 47. பா.ஜெயசீலன் | 6,000.00 |
| 48. ரமேஷ் அனுராதா | 1,000.00 |
| 49. கோபாலகிருஷ்ணன் மாலினி | 2,000.00 |
| 50. சி.புஸ்பராசா | 5,000.00 |
| 51. ச.சாந்தகுமார் | 5,000.00 |
| 52. கு.சாந்தகுமார் | 3,000.00 |
| 53. இ.லோகேந்திரா | 5,000.00 |
| 54. R.ஸ்ரீரங்கநாதன் | 7,000.00 |
| 55. சோ.விசாலாட்சி | 15,000.00 |
| 56. சேதுபதி அமிர்தலட்சுமியும் சகோதரிகள் | 10,000.00 |
| 57. வே.இராமலிங்கம் | 5,000.00 |
| 58. மு.மாணிக்கவாசகர் | 12,000.00 |
| 59. கோ.முகுந்தன் | 10,000.00 |
| 60. வி.துருவசோதி | 15,000.00 |
| 61. ப.குமணன் | 10,000.00 |
| 62. ர.துஷ்யந்தன், சி.இராதகிருஷ்ணன் | 2,000.00 |
| 63. கோ.இராஜேஸ்வரி | 10,000.00 |
| 64. ச.கந்தசாமி | 5,000.00 |
| 65. ச.சிவஞானசுந்தரம் | 10,000.00 |
| 66. நா.இராதராணி | 8,000.00 |
| 67. வே.சபேசன் | 10,000.00 |
| 68. த.உமா | 5,000.00 |
| 69. ப.இரவீந்திரநாத் | 5,000.00 |
| 70. திருமதி.ர.பிருந்தா | 5,000.00 |
| 71. சா.யோகேஸ்வரி | 3,000.00 |
| 72. வே.சிவபாலன் | 5,000.00 |
| 73. அழகரத்தினம் சுகிர்தமணி | 20,000.00 |
| 74. தி.கமலநாதன் | 5,000.00 |
| 75. தி.கணேசமூர்த்தி | 5,000.00 |
| 76. மனோராஜ் | 2,000.00 |
| 77. வீ.இராசேந்திரம் | 5,000.00 |
| 78. ச.பேபிசரோஜா | 5,000.00 |
| 79. ச.சிறிகாந் | 5,000.00 |
| 80. ப.வைதேகி | 5,000.00 |

| | |
|---|---|
| 81. வி.பாலசுப்பிரமணியம் | 4,000.00 |
| 82. கோ.சிவசோதி | 5,000.00 |
| 83. சி.சந்திரவதனா | 1,000.00 |
| 84. S.சந்திரலிங்கம் | 5,000.00 |
| 85. லி.ரவீந்தின் | 1,000.00 |
| 86. தி.ரதீஸ்வரன் | 2,000.00 |
| 87. வே.மாதவன் (ஆ.வேல்முருகுமகன்) | 5,000.00 |
| 88. வி.மோகன் | 5,000.00 |
| 89. லோகராணி ராஜேந்திரா | 5,000.00 |
| 90. க.சுதாகரன் | 5,000.00 |
| 91. சிவராசா குமுதா | 5,000.00 |
| 92. ஏ.வரலக்ஷ்மி | 5,000.00 |
| 93. செ.அருள்மொழி | 3,000.00 |
| 94. சி.ஆனந்தலிங்கம் | 1,000.00 |
| 95. தவமணி தம்பிராசா (3ம் குறுக்குத்தெரு) | 100,000.00 |
| 96. பி.வதனி | 5000.00 |
| 97. சி.சிறீஸ்கந்தராசா | 2000.00 |
| 98. கா.வித்தியானந்தன் | 5000.00 |
| 99. இ.கோபாலகிருஷ்ணன் | 2000.00 |
| 100. கு.பாலகிருஷ்ணன் | 5000.00 |
| 101. க.கௌரிபாலா | 3000.00 |
| 102. தவராசா சுபேந்திரன் | 5000.00 |
| 103. S.மகாலிங்கம் | 5000.00 |
| | 788,011.00 |

## 2016.03.31 வரை வெளிநாட்டு அன்பளிப்புக்கள்

| | |
|---|---|
| கனடா | 1,215,336.74 |
| ஜேர்மனி | 651,614.00 |
| சுவிஸ் | 82,100.00 |
| அமெரிக்கா | 20,000.00 |
| இங்கிலாந்து | 70,000.00 |
| சுவீடன் | 25,000.00 |
| பிரான்ஸ் | 10,000.00 |
| அவுஸ்திரேலியா | 32000.00 |
| மத்திய கிழக்கு | 80,900.00 |
| அசர்பைஜான் | 20,000.00 |
| | 2,206,950.74 |

## கனடா

| | |
|---|---|
| சுப்ரமணியம் குகன் | 116,464.74 |
| க.பாலேஸ்வரன் | 635,000.00 |
| Dr.நிர்மலா சிவா | 127,104.00 |
| க.மகேஸ்வரன் | 30,000.00 |
| த்.சிறீஸ்கந்தராசா | 31,830.00 |
| கா.தர்மலிங்கம் | 21,220.00 |
| தி.தேவகுமார் | 21,220.00 |
| தி.கிரிதரன் | 21,220.00 |
| கனடா அன்பர்கள் | 10,610.00 |
| செல்வராசா சிறீகாந்தா | 76,000.00 |
| புவிதரன் தியாகராசா | 10,624.00 |
| அருள் நடராசா | 5,313.00 |
| டெஸ்மன் றஜீவன் | 5,313.00 |
| குகேசன் (றாம்) | 5,313.00 |
| கண்ணன் சுப்ரமணியம் | 5,313.00 |
| செந்தூரன் சுப்ரமணியம் | 5,313.00 |
| கனடாசுதன் | 5,313.00 |
| கண்ணன் | 5,313.00 |
| சுரேஷ் | 5,313.00 |
| S.இரத்தினவடிவேல் | 5,000.00 |
| தேவராஜா சுப்பிரமணியம் | 16,540.00 |
| மு.கணேந்திரன் | 50,000.00 |
| | 1215,336.74 |

## ஜேர்மனி

| | |
|---|---|
| த.தங்கவேலாயுதம் | 10,000.00 |
| சு.குமாரகுலசிங்கம் | 333,670.00 |
| இ.சுதாகரன் | 29,276.00 |
| அருமைதுரை சஞ்சயன் | 7,900.00 |
| குமாரகுலசிங்கம் பிரசாத் | 31,600.00 |
| குமாரகுலசிங்கம் சுஜிதாப் | 31,600.00 |
| குமாரகுலசிங்கம் பிரதாப் | 31,600.00 |
| பரஞ்சோதி சுதர்சன் | 7,900.00 |
| செல்வரத்தினம் சாந்தலிங்கம் | 55,267.00 |
| சி.லோகேஸ்வரன் | 15,500.00 |
| தி.பேரின்பராசா | 20,000.00 |
| க.பாலசந்திரன் | 15,000.00 |

| | |
|---|---|
| செ.அமுதலிங்கம் | 15,767.00 |
| சி.ஜெயராசா | 15,767.00 |
| அ.சஞ்சீவன் | 15,767.00 |
| சுமந்திரன் சாந்தினி | 15,000.00 |
| | 651,614.00 |

## சுவிஸ்

| | |
|---|---|
| கனகசபை ஞானசுந்தரம் | 25,000.00 |
| ச.கண்ணன் | 10,000.00 |
| | 82,100.00 |

## அமெரிக்கா

| | |
|---|---|
| வாரகி சுப்பிரமணியம் தாரணி சுப்பிரமணியம் | 20,000.00 |

## பிரித்தானியா

| | |
|---|---|
| மா.வினோத்குமார் | 50,000.00 |
| தர்மகுலசிங்கம் குலேந்திரா | 20,000.00 |
| | 70,000.00 |

## சுவீடன்

| | |
|---|---|
| ச.சிறீகாந்தன் | 25,000.00 |

## பிரான்ஸ்

| | |
|---|---|
| கோமதி நகுலேஸ்வரன் | 10,000.00 |

## அவுஸ்திரேலியா

| | |
|---|---|
| சிற்றம்பலம் ராகவன் | 12,000.00 |
| இ.பார்த்தீபன் | 20,000.00 |
| | 32,000.00 |

## மத்தியகிழக்கு

| | |
|---|---|
| ப.சிறி | 30,900.00 |
| ப.மகேந்திரம் | 50,000.00 |
| | 80,900.00 |

## அசர்பஜான்

| | |
|---|---|
| இ.காருண்யஜித் | 10,000.00 |
| சி.ரமேஸ் | 10,000.00 |
| | 20,000.00 |

# தும்பளை அரும்புகள் முன்பள்ளி கணக்கு அறிக்கை
# 2013.07.14 தொடக்கம் 2016.04.10 வரை

| | | | |
|---|---|---|---|
| உள்ளூர் அன்பளிப்பு | 983,634.00 | குழாய்க்கிணறு இடிப்பதற்கு | 40,730.00 |
| வெளிநாட்டு | 2,206,950.74 | மோட்டர் கிடங்கு அமைக்க | 63,786.00 |
| சேமிப்பு கணக்காய்வு | 8,310.77 | மோட்டர் கிணறு தண்ணீர் தாங்கி | 44,535.00 |
| அதிஷ்டலாபச் சீட்டு | | நாள் அத்திவாரா கணக்கு | 15,105.00 |
| விற்பனை லாபம் | 23,437.00 | மின்இணைப்பு கட்டணம் | 167,155.50 |
| பொருளாதார அபிவிருத்தி | | கட்டிடப் பொருட்கள் வாங்கியது | 803,545.00 |
| –அமைச்சு | 467,899.40 | கட்டிடம் அமைக்க கூலி | 531,074.00 |
| | | நிலை, யன்னல், கதவு | 359,010.00 |
| | | கூரை வேலை | 507,377.00 |
| | | தச்சுப் பொங்கல் பால்காச்ச | 24,530.00 |
| | | பொதுச்செலவு | 66,827.30 |
| | | நிலம்நிரப்பி சீர் செய்ய | 145,660.00 |
| | | பெயின்ற் வாங்கியது | 61,330.00 |
| | | பெயின்ற் அடித்த கூலி | 44,475.00 |
| | | எல்லைசுவர் பகுதிவேலை | 437,945.00 |
| | | திறப்புவிழா நினைவுக்கல் பகுதிச்செலவு | 19,500.00 |
| | | மலசலகூடம் அமைத்த பகுதிசெலவு | 207,396.00 |
| | | குடிநீர்வசதி பகுதிச்செலவு | 27,420.00 |
| | | பாதை சீர் செய்தது | 15,450.00 |
| | | தேசிய சேமிப்பு வங்கி சேமிப்பு கணக்கு | 3,401.61 |
| | | கையிருப்பு | 1,03,979.50 |
| | 3,690,231.91 | | 3,690,231.91 |


# நன்றியுரை


எமது முன்பள்ளிக்கட்டட திறப்பு விழாவும் சனசமூக நிலைய 67வது ஆண்டு விழாவுமான இந்த சந்தோச தருணத்தில் சமூக நாடி இதழை கொண்டு வருவதில் பெரு மகிழ்வும் நிறைவும் அடைகிறோம். இந்த இதழ் முழுமை பெறுவதற்கு நாம் பல பேருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கின்றோம். அந்த வகையில் எமது நலனில் அக்கறையும் பங்களிப்பும் மட்டுமல்லாது ஆசியுரை வாழ்த்துரைகளை வழங்கிய பெரியவர்கள் திரு.வ.வே.தியானந்தராசாக் குருக்கள் , திரு.இ.த.ஜெயசீலன் (பிரதேச செயலர்), திரு.சி.நந்தகுமார் (வலயக்கல்விப் பணிப்பாளர்), திரு.பு.பரமேஸ்வரன் (செயலாளர், நகரசபை) ஆகியோருக்கும் எமது முன்பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள் அவர்களின் பெற்றோர்களுக்கும், முன்பள்ளியின் முன்னேற்றத்தில் பெரும் பாரமாகவிருந்த கட்டடத்தின் உருவாக்கத்திற்குப் பெரிதும் உறுதுணையாய் இருந்த கட்டடக்குழு அன்பர்களுக்கும் அனைத்து விதத்திலும் தமது பங்களிப்பினை அயராது வழங்கிய ஊர்மக்கள், புலவாழ் மக்கள், நண்பர்கள் அனைவரிடமும் நாம் நிறையவே கடன்பட்டிருக்கின்றோம்.

இதழின் தேவைக்காக முன்பள்ளி குறித்த வரலாற்றுத்தகவல்கள் தந்து உதவியவர்களுக்கும் , ஆக்கங்கள் தந்துதவிய ஊர்மக்கள் மற்றும் புலம்வாழ் மக்களுக்கும், கட்டடத்தின் கூரை வேலைக்கு நிதி உதவி செய்த சமூக அபிவிருத்தி அமைச்சிற்கும் , அரச திட்டத்தின் மூலம் நிதி உதவியை வழங்கிய வடமாகாண முதலமைச்சர் கௌரவ சி.விக்கினேஸ்வரன் அவர்களுக்கும் எப்பொழுதும் பக்கபலமாக இருந்து தொடர்ந்தும் எம்மை வழிநடத்துகின்ற சனசமூக நிலைய முன்பள்ளி நிர்வாகக் குழுவினருக்கும் மற்றும் தொடர்ந்தும் எமது ஊரின் முன்னேற்றத்தில் பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் உவகையோடு செய்து கொண்டிருக்கும் அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

நன்றி.

-மலர்க்குழு-









அச்சமைப்பு: S.P.M, வி.எம்.றோட். பருத்தித்துறை. T.P.No: 021 2260055. 0774966997
E.mail: puvan2009@gmail.com